DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1413 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 5, 2023

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசுத்திட்டம் தொடர்பாக துணைவேந்தரையும் கலைப் பீடாதிபதியையும் சந்தித்த கனடா உதயன் பிரதம ஆசிரியர்

கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீடத்தின் மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம் ஒன்று தொடர்பாக பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜா அவர்களையும் கலைப் பீடாதிபதி கலாநிதி ரகுராம் அவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

கடந்த சனிக்கிழமையன்று மதியத்திற்குப் பின்னர் பல்கலைக் கழகத்தின் “கவுன்சில்“ கூட்டத்தின் பின்னர் கனடா உதயன் குழுவினரைச் சந்தித்த துணைவேந்தரும் கலைப் பீடாதிபதியும் நலன் விசாரித்த பின்னர் கனடியத் தமிழர்களின் செயற்பாடுகள் பற்றியும் கலை, கல்வி மற்றும் கலாச்சார செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்தார்கள்.



# "நான் அரசியலில் விக்கிரமாதித்தன் — சளைக்காது எனது முயற்சி தொடரும்" — கனடா உதயனுக்கு மனோ எம்.பி.

(கொழும்பில் இருந்து ஆர்.என்.லோகேந்திரலிங்கம்)



நான் விக்ரமாதித்தன் போன்றவன். எனவேதான் நான் தொடர்ந்து முயற்சிகளை விடாது மேற்கொண்டு வருகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் கடந்த 2ஆம் திகதி (02.05.2023) அன்று அவரது இல்லத்தில் சந்தித்தபோது இலங்கையின் அரசியல் நிலைவரம்குறித்து கலந்துரையாடியபோதே மனோ கணேசன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்...

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

ஓம் முருகா

# ஸ்கந்தாச்சிரமம்
# கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

**2023**

சண்முகக் கடவுள் போற்றி சரவணத்துள் உதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
நண்மலர் கடம்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி!

# மகோற்சவப் பெருவிழா

**12-05-2023 வெள்ளிக்கிழமை தொடக்கம் 22-05-2023 திங்கள் வரை**

## சண்முகப்பெருமான் அடியார்களே!

சகல செல்வங்களும் ஒருங்கே அமைந்த கனடாத் திருநாட்டிலே, சைவமும் தமிழும் நறுமணம் வீசும் ஒன்ராரியோ மாநிலத்தின் கண் அமைந்துள்ள ரொறன்ரோ மாநகரிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி, வேண்டுவோர் வேண்டுவதை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் வள்ளி தேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 29 ஆம் நாள் (12-05-2023) வெள்ளிக்கிழமை, தெய்வேந்திர முகூர்த்த நேரமான நண்பகல் 12:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் பகல்-இரவு மகோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். அடியார்கள் அனைவரும் தினமும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆறுமுகப் பெருமானின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்றேகுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.


**கொடியேற்றம்**
வெள்ளிக்கிழமை
12-05-2023

**சப்பறம்**
வெள்ளிக்கிழமை
19-05-2023


**தேர்த்திருவிழா**
சனிக்கிழமை
20-05-2023

**தீர்த்தத் திருவிழா**
ஞாயிற்றுக்கிழமை
21-05-2023

**திருக்கல்யாணம்**
திங்கட்கிழமை
22-05-2023



ஆலயச் சிவாச்சாரியார்கள், ஆலய நிர்வாக சபையினர்கள், ஊடகத்துறையினர்கள், வியாபாரத்துறையினர்கள், மங்கள இசைவாத்தியக் கலைஞர்கள், மற்றும் அனைத்துக் கலைஞர்கள், பக்தகோடிகள் அனைவரையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்!



**மகோற்சவ குருக்கள்**
"ஆகம பிரவீணர், அலங்கார கலாரத்தினம், ஸ்ரீ ஜெய துர்க்கா உபாசகர்"
**சிவஸ்ரீ. கணேச ஞானஸ்கந்த சிவாச்சாரியார்**

**சர்வ சாதகம்**
"சாதகச் சுடர்" ப்ரம்மஸ்ரீ. கெங்காதர. வெங்கடரமண சர்மா

**ஆலய குருமார்கள்**
சிவஸ்ரீ.கௌ.சுப்ரமணியசர்மா

மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சண்முக சேவையில்,
சண்முகப் பித்தன்
(ஆலய தர்மகர்த்தா)

**ஆலய நிர்மாணம்**
"ஸ்தாபதியர் திலகம்', சிற்பகலை அரசன்', விஸ்வகர்மா"
"சித்திரத்தேர் சக்கரவர்த்தி"
திரு.சரவணமுத்து ஜெயராஜா

**மங்கள இசை**
திரு. பி. சண்முகசுந்தரம் குழுவினர்
(உலகத் தவில் நாதஸ்வர இசை)

**அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!**

**Sun City Plaza, Unit 30 – 2761 Markham Rd, Scarborough, ON M1X 0A4**

https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple 416-613-1883 www.omshanmuga.org

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# பொருளாதாரப் பிரச்சனையை மறைக்க இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தென்னிலங்கை அரசுகள்

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் சிங்கள மக்கள் இனரீதியான மற்றும் மதரீதியான வேறுபாடுகளை ஒரு புறத்தே தள்ளிவைத்து விட்டு அநீதியை ஏற்படுத்தும் அரசுகளுக்கு எதிராக போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள். இலங்கை மக்கள் ஒன்றிணைந்து உணர்வுபூர்வமாக நடத்தும் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாத முதலாளித்து அரசுகள் தமிழ் சிங்கள மக்களை அதுவும் குறிப்பாக தொழிலாளர் விவசாய மக்களை பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்தத் தொடங்கின.

தொழிற்சங்கங்களில் இணைந்து ஒற்றுமையாக போராட்டங்களை நடத்திய தொழிலாளர்களை பிரித்து அவர்களுடைய போராட்ட பலத்தை குறைப்பதற்காக பல தந்திரங்களை அரசியல் தலைவர்கள் துணிந்து செய்யத் தொடங்கினார்கள். இவ்வாறான முரண்பாடுகளை ஏற்படுத்த சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்ட பிற்போக்குத் தனமான நடவடிக்கைகளுக்கு அப்போதைய தமிழ் அரசியல்வாதிகளும் உடந்தையாக இருந்தார்கள் என்பதையும் நாம் இங்கே பதிவு செய்யலாம். தமிழ்-சிங்கள தொழிலாளர்களின் ஒற்றுமை சிதைக்கப்பட வேண்டும் என்ற சிங்கள அரசியல்வாதிகளின் எண்ணங்களுக்கு தூபமிடுவது போன்று தமிழ் பேசும் தொழிலாளிகளுக்காக மொழி வழித் தொழிற்சங்கங்களை ஆரம்பித்து மேலும் முரண்பாடுகள் ஏற்பட அத்திவாரமிட்டார்கள்.

இவ்வாறான தவறான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தற்காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாத குரோதத்தை ஏற்படுத்தின. இவ்வாறான முரண்பாடுகளுக்கிடையில் தற்போது ஏற்பட்டுள்ள கலாச்சார ரீதியான முரண்பாடுகளும் தோன்றின. அவற்றில் ஒன்று தான் மத ரீதியான தாக்குதல்கள் மற்றும் குரோதங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை இன அழிப்புடன் பின்னிப்பிணைந்த செயற்பாடுகளாகும்.தனியான தொடர்ச்சியான நிலப்பரப்பினை கொண்ட தனியான மொழி,கலாசார பண்பாடுகளை கொண்ட தமிழ் தேசிய இனத்தின் தொன்மைமிக்க வாழ்வியல் வரலாற்றை அழிப்பதனூடாக அவர்களின் தனித்துவம்,அடையாளத்தை அழித்து சிங்கள-பௌத்தத்திற்குள் கலந்து விடுவதன் மூலம் கலாசார படுகொலையீனூடாக இன அழிப்பு செய்யும் செயற்பாடே முன்னெடுக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியே சைவ ஆலயங்களை இடித்து அல்ல சைவத்தின் அடையாளமாகத் திகழும் சிலைகளை பிடுங்கி எறிதல் போன்றவை.

இவற்றை முழுமையாக தடுத்து நிறுத்தி தமிழர் தாயகத்தையும் தமிழ் மக்களின் தொன்மையையும் தனித்துவத்தையும் நிலைபேறாக பாதுகாக்க வேண்டியது அவசியமும் அவசரமுமான தேவையாகிறது. ”வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம்” என்பது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வொப்பந்தம் ஓர் சர்வதேச ஆவணமாகும்.இதனை இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக மீறுதல் என்பது சர்வதேச ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.இவ்விடயத்தில் இந்தியா தலையிடுவதற்கான சட்ட உரித்தும் தமிழ் மக்கள் சார்பில் இந்தியா கையெழுத்திட்டிருப்பதால் அதனை பாதுகாக்கும் தார்மீக பொறுப்பையும் இந்தியா கொண்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை உத்தரவாதம் செய்யவேண்டிய பொறுப்பும் சட்ட உரித்தும் இந்தியாவுக்குண்டு.இந்தியா இதனை நிறைவேற்ற செய்யும் கடமை தமிழ் தலைமகளுக்குரியது.இந் நகர்வானது வடக்கு கிழக்கில் குறைந்தபட்ச அதிகாரமேனும் உள்ள ஆட்சிக்கு வழிவகுக்கும்.

கலாசார அழிப்பினூடாக இன அழிப்புத்திட்டம் தொடர்பில் தமிழ் தலைமைகள் நுண்ணறிவுடனும் ராஜதந்திர ரீதியிலும் சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்ட தொடர்ச்சியான முன்முயற்சிகள் எடுக்கவேண்டும்.தமிழ்த் தலைமை எப்போதுமே அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்பை பதிவு செய்யும் அணுகுமுறையே மேற்கொள்கின்றனர்.மாறாக இவ் அடக்குமுறைகள் தொடர்பில் இலங்கை அரசின் கைகளை கட்டிப்போடும் வகையில் முன்னெடுப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச சமூகத்தை கையாளுதல் என்பது அவர்கள் இலங்கைக்கு வரும்போது சந்தித்து கதை சொல்லிவிட்டு வருவதாக அன்றி அனைத்து ஆதாரங்களும் திரட்டப்பட்டு வகைப்படுத்தப்பட்டு கலாசார உரிமைகளை பாதுகாக்க உலக அளவில் இயங்கும் ஐ.நா.மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதும் சர்வதேச நடவடிக்கை நோக்கி நகர்த்துவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும்.

ஆதாரங்களை திரட்டுவதற்கும் வகைப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொருத்தமான சர்வதேச தளங்களில் அவற்றை சமர்ப்பித்து நிலைபேறான தீர்வு காண செயற்படும் வகையில் ஓர் சர்வதேச தலைமையகம் செயற்படவேண்டும்.அது ஓர் உயர்ஸ்தானிகரகத்துக்குரிய தரத்துடன் செயற்படும் வகையில் அமைய வேண்டும்.

இவற்றுக்கு சமாந்தரமாகவும் விரைவாகவும் இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையில் வட-கிழக்கு இணைப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு உரிய நகர்வுகளும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நகர்வுகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.தேவை அறிவுபூர்வமான,சாமர்த்தியமான ராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

## "நான் அரசியலில் விக்கிரமாதித்தன் — சளைக்காது எனது முயற்சி தொடரும்" — கனடா உதயனுக்கு மனோ எம்.பி. *(முன் பக்கத் தொடர்ச்சி)*

தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணைவுகுறித்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். சில கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. ஒருசில கட்சிகள் இணைவது குறித்து பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளன.

சிறுபான்மை இனக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொருத்து அவர்கள் வடக்குக் கிழக்கை மலையகத்தை முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். வடக்குக் கிழக்கு மலையகம் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரத்தியேகமானதும் தனித்துவமானதுமான பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர்.அந்தந்த மக்கள் சார்ந்த பிரச்சனைகளை அந்த மக்கள் சார்ந்த தலைமைத்துவங்களே கையாள வேண்டும். இதற்கும் அப்பால் வடக்கு கிழக்கு மலையகம் மற்றும் முஸ்லிம் மக்களுக்கென பொதுவான பிரச்சனைகள் உள்ளன.அந்தப் பிரச்சனைகள்குறித்து கலந்துரையாடி தீர்வினை நோக்கி செல்வதே தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பின் இலக்காகும்.

இந்தக் கூட்டமைப்பில் நாடாளு மன்றில் உள்ள ஏணைய கட்சிகளையும் பார்வையாளர்களாக இணைத்துக் கொள்வதன்மூலம் தமிழ் பேசும் மற்றும் பெரும்பான்மை இன நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த வழிவகுக்கும்.

- ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன விவகாரத்திற்கு தீர்வு காண்பதாக அடிக்கடி கூறுகின்றாரே.இது நடைமறை சாத்தியமா என உதயன் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 75வது சுதந்திர தின விழாவுக்கு முன் இனவிவகாரத்துக்குத் தீர்வு காண்பதாகக் கூறினார். அது நடைபெறவில்லை.அதற்குப் பிறகு அடிக்கடி பொருளாதார மீட்சியும் இன விவகாரத்துக்கான தீர்வும் காணப்பட வேண்டுமென பொது வைபவங்களில் பலமுறை குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி நான் அவரைச் சந்தித்தபோதும் குறிப்பிட்டார்.இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.நீங்கள் கூறுவதை முதலில் செயலில் காட்டுங்கள்.நாம் ஆதரவளிக்கத் தயார் என்று குறிப்பிட்டேன் என்று மனோ எம்.பி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்

தமிழ் அரசியல்வாதிகளில் நான் சீனியர் என்று குறிப்பிட்ட மனோ எம்.பி. தான் மூத்த தமிழ் அரசியல்வாதி இரா.சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

- கண்டியில் தோல்வி

கண்டியில் தமிழ் மக்கள் கூடுதலாக வாழ்ந்தும் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாதிருந்தது.அதனை நிறைவேற்றுவதற்காகத்தான் கண்டியில் போட்டியிட்டேன். தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பது தடக்கப்பட்டதால் தோல்வி அடைந்தேன். தேசியப் பட்டியல்மூலம் ஒரு ஆசனம் தருவதாக அப்போது ரணில் விக்ரமசிங்க உறுதி அளித்திருந்தார். ஆனால் மறுத்துவிட்டார்.நான் துவண்டுவிடவில்லை. மீண்டும் அரசியலில் எழுந்தேன்.

## "ஊடகவியலாளர் தேவராஜை அகற்றுமாறு கூட்டமைப்பு புகார்."

- கனடா உதயனிடம் மனோ எம்.பி.

(கொழும்பில் இருந்து ஆர்.என்.லோகேந்திரலிங்கம்.)

மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ், எனது முகம் தெரியாமலே எனது அரசியல் கட்டுரையைப் பிரசுரித்து ஊடகத்துறைக்கு என்னை அறிமுகப்படுத்தியவர் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் கடந்த 2ஆம் திகதி (02.05.2023) அன்று அவரது இல்லத்தில் சந்தித்தபோது இலங்கையில் பத்திரிகையாளர்கள்குறித்து கலந்துரையாடியபோதே மனோ கணேசன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜூக்கு இழைக்கப்பட்ட அநீதிகுறித்து குறிப்பிட்ட கனடா உதயன் ஆசிரியர் கனடா உதயனில் அந்த அநீதிக்கு எதிராக ஆசிரியர் தலையங்கம் தீட்டியதாக சுட்டிக் காட்டினார்.

மேற்படி ஆசிரியர் தலையங்கம் இணையத்தளம் ஒன்றிலும் வெளிவந்ததாகச் சுட்டிக் காட்டிய கனடா உதயன் ஆசிரியர் அது ஒரேநாளில் அகற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதின் நோக்கம் இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி தேவராஜ் தொடர்ந்து பத்திரிகையில் எழுதி வந்தார். அவரது எழுத்துக்கள் சங்கடத்தை ஏற்படுத்துவதாக நினைத்து கூட்டமைப்பைச் சார்ந்தோர் புகார் செய்துள்ளனர். அதற்கு நிர்வாகமும் செவி சாய்த்து நடவடிக்கை எடுத்துள்ளது. உண்மையில் இது நடைபெற்றிருக்கக் கூடாது.

அந்தப் பத்திரிகை நீண்ட பாரம்பரியமிக்க தனித்துவமான பத்திரிகை. விரைவில் நூற்றாண்டைக் கொண்டாட உள்ள பத்திரிகை. தமிழ் மக்களின் சொத்து என்றவகையில் அந்தப் பத்திரிகையை போற்றிப் பாதுகாக்க வேண்டும். பத்திரிகையை நடத்தும் பெறுப்பானவர்களுக்கு அது தெரிந்திருக்க வேண்டும். அல்லது நம்பிக்கையானவர்களைக் கொண்டு பத்திரிகையில் உள்ளவிடயங்களை அறிந்து கொள்ள வேண்டும்.இல்லையெனில் தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும்.இதுபற்றி நான் ஏற்கனவே பொறுப்பானவர்களுக்கு அறிவித்துள்ளேன் என்று குறிப்பிட்ட அவர் ஆனால் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்துவிட்டது. கூட்டமைப்பில் இருந்தவர்களே கூட்டமைப்பைச் சிதைத்தவிட்டனர். தமிழரசுக் கட்சியும் தலைமைத்துவ போட்டிக்குள் சிக்குண்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

- ஊடகவியலாளர் சிவா பரமேஸ்வரன் அவர்கள் பற்றி தெரிவித்த மனோ கணேசன் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்:

சிரேஸ்ட ஊடகவியலாளர் சிவா பரமேஸ்வரன் எனது நீண்ட கால நண்பர். இலங்கை விவகாரத்தில் பரிச்சயமிக்கவர். என்னுடன் எப்பொழுதும் தொடர்பில் உள்ளவர். அவர் மூலமாகவே கனடா உதயனின் அறிமுகம் கிடைத்தது. எனது கட்டுரையும் தொடர்ந்து உதயனில் வாராவாரம் வெளி வருகின்றது. அதற்காக அவருக்கும் உதயனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

இந்தியா செய்திகள் India News



# கடலில் பேனாவா...உங்கள் பாக்கெட்டில் வைத்துக்கொள்ளுங்கள்... — கஸ்தூரி காட்டம்

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக சென்னை வடபழனியில் உள்ள 1,000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திரைப்பட நடிகை கஸ்தூரி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதையடுத்து விழாவில் பேசிய கஸ்தூரி, "இந்த விழாவிற்கு என்னை அழைத்த போது நான் கூறிய முதல் விஷயம் நான் தமிழகத்திலேயே இல்லை. குடும்பத்தோடு ஹைதராபாத்தில் தங்கி உள்ளேன். தெலுங்கில் தான் அதிக படம் நடித்து வருகிறேன். அதிமுகவில் நான் உறுப்பினர் அல்ல. ஆனால் எனக்கு ஓட்டுரிமை வந்ததிலிருந்து நான் அதிமுகவிற்கு தான் ஓட்டு போட்டு வருகிறேன். விஜயகாந்த் கட்சி தொடங்கிய போது ஒரே ஒரு முறை அவருக்கு வாக்களித்துள்ளேன்.

பெண் குழந்தைகள் கல்லூரி படிப்பைத் தொடருவதற்கான திட்டத்தை முதலில் துவக்கி வைத்தவர் ஜெயலலிதா. தாலிக்கு தங்கம், அம்மா உணவகம் போன்ற நலத்திட்டங்களை தொடக்கி வைத்தவர் ஜெயலலிதா. பெண்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்த ஜெயலலிதா தற்போது நம்முடன் இல்லை. அவர் தெய்வமாகிவிட்டார். அவரை நாம் தெய்வமாக வணங்க வேண்டும்.

கட்சியை பார்த்து நலத்திட்ட உதவிகள் வழங்காமல் தேவையை அறிந்து உதவி வழங்குவது அதிமுகவின் சித்தாந்தத்தில் உள்ளது. மதுபான கடைகளை அகற்ற வேண்டும் என்று கட்சியை கடந்து நான் நிறைய விமர்சித்து உள்ளேன். திருமண மண்டபங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் மதுவை வழங்கலாம் என்று இப்போதுள்ள அரசு அறிவித்துள்ளது. அதை திமுக கட்சிக்காரர்களே விமர்சித்த பிறகு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள். ஆனால் வாபஸ் வாங்கவில்லை. ஆகவே மக்கள் விழிப்புணர்வோடு இருந்தால் தான் இம்மாதிரியான அநியாயங்களை நிறுத்த முடியும். கடலில் பேனா சிலை வைப்பது பெரிது அல்ல. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குழந்தைகள் பேனாவை கையில் பிடிக்க வேண்டும். கலைஞரை நினைவு கூற வேண்டும் என்றால் நூலகங்கள் அமைக்கலாம். அதை விட்டுவிட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கடலில் பேனா வைக்கிறீர்கள். பேனாவை உங்கள் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளலாமே. சினிமாவில் வேலை செய்பவர்களுக்கு தெரியும் எந்த நேரத்தில் வேலை செய்ய வேண்டும் என்றாலும், அதற்கு ஏற்ற வசதிகளை செய்து கொடுத்தாலும் கூட அங்கு வேலை செய்வது மிகவும் கடினம். அப்படி இருக்கும் பொழுது தொடர்ச்சியாக ஓய்வு இல்லாமல் 12 மணி நேரம் தொழிலாளர்களாக எப்படி வேலை செய்ய முடியும்? நான்கு நாட்கள் பட்டினியாக இருந்துவிட்டு மூன்று நாட்கள் சேர்த்து சாப்பிட முடியுமா அதைப் போலத்தான் அரசாங்கத்தின் 12 மணி நேர வேலை திட்டம். இது சாதாரண மக்களுக்கு எப்படி பயனளிக்கும்" என்று தெரிவித்தார்.



# மக்களைப் பற்றி அக்கறை இல்லை...மதுவிற்கு தானியங்கி இயந்திரமா? — எடப்பாடி பழனிசாமி கண்டனம்

தானியங்கி இயந்திரம் மூலம் மதுபானம் விற்பனை செய்யும் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என அதிமுகபொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமிவலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இளைஞர்களை சீரழிக்கும் வகையில் தானியங்கி இயந்திரம் மூலம் மது விற்பனையை தொடங்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது என தெரிவித்துள்ளார். பெண்கள், சிறுவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் வந்து செல்லும் வணிக வளாகங்களில் இப்படி மது விற்கப்படுவது என்ன மாதிரியான எண்ணங்களை விதைக்கும் என்ற யோசனை கூட அரசுக்கு இல்லையா என கேள்வி எழுப்பியுள்ளார். மக்களைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறை இல்லாமல் வருவாயை மட்டும் கருத்தில் கொண்டு இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது வெட்கக்கேடானது எனவும் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார். தமிழகம் முழுவதும் 500-க்கும் மேற்பட்ட இடங்களில் இதுபோன்ற தானியங்கி இயந்திரங்கள் பொருத்தப்பட உள்ளதாக வரும் செய்திகள் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# டெல்லி மெட்ரோவில் ஆபாசமாக நடந்துகொண்டவர் மீது வழக்குப் பதிவு: வைரல் வீடியோவால் போலீஸ் நடவடிக்கை



மெட்ரோ ரயிலில் இளைஞர் ஒருவர் சுய இன்ப நடவடிக்கையில் ஈடுபடும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, அது குறித்து டெல்லி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக, இந்த ஒழுங்கீனச் செயல் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி டெல்லி மகளிர் ஆணையத்தின் தலைவர், டெல்லி போலீசாருக்கு நோட்டீஸ் அனுப்பி இருந்தார்.

சமூக வலைதளங்களில் இளைஞர் ஒருவரின் வீடியோ ஒன்று வைரலானது. டெல்லி மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் அந்த இளைஞர் ரயில் பயணத்தின்போது சுய இன்ப நடவடிக்கையில் (தனது மொபைல் போனில் ஏதோ ஒன்றை பார்த்தபடி) ஈடுபடுகிறார். இதனால் அவருக்கு அருகில் இருக்கும் சக பயணிகள் முகம் சுளித்தபடி விலகிச் செல்கின்றனர். இந்தச் செயல்களை மற்றொரு நபர் வீடியோவாக எடுத்துள்ளார்.

இந்த வீடியோ குறித்து டெல்லி மகளிர் ஆணையத்தின் தலைவி, ஸ்வாதி மலிவால் தனது ட்விட்டர் பக்கத்தில், "டெல்லி மெட்ரோ ரயிலில் இளைஞர் ஒருவர் வெட்கமின்றி சுய இன்ப நடவடிக்கையில் ஈடுபடும் வீடியோ ஒன்று வைரலானது. இது அருவருக்கத்தக்கச் செயலாகும். இந்த அநாகரிக செயல் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி, டெல்லி போலீஸார் மற்றும் மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். டெல்லி மெட்ரோ ரயிலில் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது அதிகரித்து வருகின்றது. இதுபோன்ற நபர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்போதுதான் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து டெல்லி மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், "போலீசார் தாமாக முன்வந்து, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294 (ஆபாசமாக நடந்து கொள்வது, பாடுவது) கீழ் வழக்குப் பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

டெல்லி மெட்ரோ ரயில் நிர்வாகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "மெட்ரோவில் பயணம் செய்யும் போது பயணிகள் கண்ணியத்துடன் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பயணத்தின் போது அநாகரிகமான செயல்களை பயணிகள் யாராவது பார்த்தால் அதுகுறித்து உடனடியாக மெட்ரோ ரயிலின் உதவி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, நடைமேடை, ரயில் நிலையம், நேரம் போன்ற தகவல்களுடன் புகார் தெரிவிக்கலாம். இதுபோன்ற நடவடிக்கைகளைக் கண்காணிக்க, மெட்ரோ மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் அடங்கிய பறக்கும் படைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் உரிய சட்டவிதிகளின் படி எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளது.

# கேரளாவில் 93 பவுன் நகை, ரூ. 9 லட்சம் மோசடி: பெண் சப் — இன்ஸ்பெக்டர் அதிரடி கைது



கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் தவனூர் பகுதியை சேர்ந்தவர் ஆர்ய ஸ்ரீ (47) அங்குள்ள வளஞ்சேரி போலீஸ் நிலையத்தில் சப் - இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் கடந்த 2017ம் ஆண்டு தன்னுடன் படித்த திருச்சூர் பழையன்னூர் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை சந்தித்து தனக்கு பணம் தந்தால் ஒரு வருடத்தில் அதற்கு கூடுதல் வட்டியும், லாபமும் தருவதாக கூறி இருக்கிறார்.

அதை நம்பி அந்த பெண் பல தவணைகளாக 93 பவுன் நகைகளையும், ரூ. 1.5 லட்சம் பணத்தையும் ஆர்யஸ்ரீ யிடம் கொடுத்து உள்ளார். அதேபோல் பாலக்காடு அருகே உள்ள ஒற்றப்பாலம் பகுதியை சேர்ந்த ஒரு பெண்ணிடமும் இவர் ரூ. 7.5 லட்சம் பணத்தை வாங்கியுள்ளார்.

ஆனால், பல வருடங்கள் ஆன பிறகும் 2 பேருக்கும் அவர் கூறியபடி வட்டியையோ, லாபத்தையோ ஆர்யஸ்ரீ திருப்பி கொடுக்கவில்லை.

இதையடுத்து 2 பேரும் தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்தனர். தொடர்ந்து 2 பேரும் ஒற்றப்பாலம் போலீசில் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தனர். இதையடுத்து சப் - இன்ஸ்பெக்டர் ஆர்யஸ்ரீயை கைது செய்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து அவர் பணியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.



# மலையாள நடிகையை மது குடிக்க கட்டாயப்படுத்தி பலாத்கார முயற்சி முன்னாள் டிஎஸ்பி மீது வழக்கு

கேரள மாநிலம் காசர்கோடு அருகே உள்ள திருக்கரிப்பூர் பகுதியை சேர்ந்தவர் மதுசூதனன் (வயது 58) ஓய்வு பெற்ற டிஎஸ்பி. ஆண்ட்ராய்டு குஞ்சப்பன், தொண்டி முதலும் திருக்சாட்சியும் உட்பட ஒரு சில மலையாள படங்களில் நடித்தும் உள்ளார். இந்த நிலையில் ஒரு மலையாள ஆல்பத்தில் நடிப்பதற்காக அவரை ஒப்பந்தம் செய்து இருந்தனர். இதற்காக காசர்கோடு அருகே பேக்கல் என்ற இடத்தில் உள்ள ஒரு விடுதியில் தங்கி இருந்தார்.

அதே விடுதியில் அந்த ஆல்பத்தில் நடிக்கும் கொல்லத்தைச் சேர்ந்த நடிகை ஒருவருக்கும் அறை ஒதுக்கப்பட்டு இருந்தது. அவரும் ஒரு சில மலையாள படங்களில் நடித்திருக்கிறார். இதற்கிடையே கடந்த 2 நாட்களுக்கு முன்பு இரவில் மதுசூதனன் அந்த நடிகையை தனது அறைக்கு வருமாறு அழைத்து உள்ளார். அதை தொடர்ந்து நடிகையும் அவரது அறைக்கு சென்று உள்ளார்.

அப்போது மதுசூதனன் அந்த நடிகையை மது குடிக்குமாறு வற்புறுத்தி இருக்கிறார். பின்னர் அவரை பலாத்காரம் செய்யவும் முயற்சித்து உள்ளார். இதை சற்றும் எதிர்பாராத நடிகை அதிர்ச்சி அடைந்தார். உடனே அந்த நடிகை அறையிலிருந்து தப்பி வெளியே ஓடினார். பின்னர் இதுகுறித்து பேக்கல் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் மாஜி டிஎஸ்பி மதுசூதனன் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சர்வதேச தொழிலாளர் தினம் — கொழும்பில் பலத்த பாதுகாப்பு!

(01-05-2023)

சர்வதேச தொழிலாளர் தினம் திங்கட்கிழமை (01) அனுஷ்டிக்கப்பட்டது.

1886ஆம் ஆண்டு மே 1ஆம் திகதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் திரண்டு 8 மணி நேர பணி மாறுதல் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல நாட்கள் நீடித்த போராட்டங்களுக்கு பொலிஸ் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் கைது செய்யப்பட்டனர்.

1889 ஆம் ஆண்டு, தொழிலாளர் போராட்டம் தொடங்கிய மே முதல் நாள், சர்வதேச தொழிலாளர் அமைப்பால் உலக தொழிலாளர் தினமாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி, உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் மே மாதம் முதல் நாள் சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதுடன், தொழிலாளர் தினத்தை கொண்டாடும் வகையில் மே தின கூட்டங்கள், பேரணிகள் மற்றும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, திங்கட்கிழமை (01) இலங்கையில் நடைபெறவுள்ள அரசியல் கூட்டங்களுக்கு சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து அவர் இதனை தெரிவித்தார்.

கொழும்பு, நுகேகொடை, ஹட்டன் மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் இந்த பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த பிரதேசங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெறும் மே தினப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்காக 3,500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# தாமரை கோபுரத்திலிருந்து முதலாவது "வானிலிருந்து பாய்ச்சல்" நிகழ்வு





(01-05-2023)

கொழும்பில் உள்ள தாமரை கோபுரம் சுற்றுலாத்துறையை சர்வதேச அளவில் மேம்படுத்தும் வகையில், அதன் முதல் ஸ்கை டைவிங் நிகழ்வை அண்மையில் நடத்தியது.

ரெட்புல் ஸ்ரீலங்கா ஸ்கைடைவ் குழுவைச் சேர்ந்த இரண்டு ஸ்கைடைவ் வீரர்கள் தாமரை கோபுரத்தில் இருந்து பேஸ் ஜம்ப் நிகழ்வை நடத்தினர்.

உலகப் புகழ்பெற்ற Red Bull SkyDiving சாம்பியன்களான Marco Waltenspiel மற்றும் Marco Fürst ஆகியோர் இந்த நிகழ்வைக் காட்சிப்படுத்த அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.





தெற்காசியாவிலேயே மிக உயரமான கோபுரத்தில் இருந்து இரண்டு ஸ்கை டைவர்ஸ் குதித்து பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். புகை மூட்டத்துடன் கோபுரத்தில் இருந்து அவர்கள் குதிப்பதை பதிவு செய்வதற்காக உடலில் கேமராக்கள் பொருத்தப்பட்டன.

கோபுரத்தின் உச்சியில் இருந்து 250 மீற்றர் தொலைவில் டைவ் செய்து அந்த அணி அபார சாதனையை நிகழ்த்தியது.

அவர்கள் பாராசூட் மூலம் மைதானத்தை அடைந்ததும், அவர்களை வரவேற்கும் வகையில் கலாச்சார நடனக் குழுவினர் நடனமாடினர்.

"தாமரை கோபுரத்தின் உயரம் பொதுவாக பேஸ் ஜம்ப் நிகழ்வில் பயன்படுத்தப்படும் உயரத்தை விட குறைவாக உள்ளது. ஆனால் தாவுதல் மிகவும் சவாலான செயலாக இருந்தது எங்கள் லட்சியத்தை நிறைவேற்றுவது எங்களுக்கு கடினமாக இல்லை," என்று சாம்பியன்கள் ஊடகங்களுக்கு பேசும்போது கூறினார்.

லோட்டஸ் டவர் மேனேஜ்மென்ட் பிரைவேட். லிமிடெட், இந்தத் திட்டம் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் என்றும், உலகெங்கிலும் உள்ள மக்களின் இலங்கை மீதான ஆர்வத்தை அதிகரிக்க உதவும் என்றும் கூறியுள்ளது.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinniccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கனகராஜன்குளம் மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மரதனோட்டம் மற்றும் பொங்கல் விழா



- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

வுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கனகராஜன்குளம் மகாவித்தியாலயம் இந்த ஆண்டு நூறாவது ஆண்டில் கால் பதிக்கிறது அந்தவகையில் நூற்றாண்டு விழாவை பாரிய அளவில் கொண்டாட பாடசாலை சமூகம் ஏற்ப்பாடுகளை செய்துவருகிறது.

அந்தவகையில் நூற்றாண்டு விழாவை ஒட்டி பல்வேறு போட்டி நிகழ்வுகளை ஏற்ப்பாடு செய்துள்ளனர் அதன் ஒரு அங்கமாக சனிக்கிழமை (29) மாபெரும் மரதனோட்ட போட்டியும் நூறு பானைகளில் பொங்கல் பொங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அந்தவகையில் பன்றிக்கெய்தகுளம் சந்தியில் இருந்து மரதனோட்ட போட்டி பாடசாலை முன்னாள் அதிபர் ச. பத்மநாதன் அவர்களால் கொடியசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.





குறித்த போட்டியானது ஏ_9 வீதி வழியாக வருகை தந்து கனகராஜன்குளம் மகாவித்தியாலய முன்றலில் நிறைவடைந்தது 15 Km தூரம் கொண்ட இந்த போட்டியில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவன் பா. விழிவண்ணன் முதலாமிடத்தையும் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவன் ர. பிரசாந் இரண்டாமிடத்தையும், வவுனியா சின்னடம்பன் பாரதிவித்தியாலய மாணவன் ச. கபிலன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் நூறு பானைகளில் பொங்கல் பொங்கி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் முன்னைநாள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் பாடசாலை பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக மாபெரும் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி ஒன்றினையும் செய்யவுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் அறிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி மற்றும் யாழ் வேலனை பகுதிகளில் 80 பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி பயிற்சி



கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண்களுக்கு மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறி வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 40 பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு முழங்காவில் பொது மண்டபத்தில் வெள்ளிக்கிழமை குறித்த பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





இதன் போது அவர்களினால் 6 உற்பத்தி பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

மேலும் யாழ் தீவக பெண்களை உள்ளடக்கி தெரிவு செய்யப்பட்ட 40 பெண்களுக்கு சனிக்கிழமை (29) யாழ் வேலனை பிரதேச செயலகத்தில் குறித்த பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த 06 உற்பத்தி சார் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இதன் போது பயிற்சி யாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சுய தொழில் உற்பத்தி பொருட்கள் வருகை தந்த பிரமுகர்களுக்கும் பயிற்சி யாளர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

# "சர்வதேச நாணய நிதிய உதவிகளால் மாத்திரம் பொருளாதாரத்தில் முன்னேற முடியாது" — மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!



(30-04-2023)

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை மாத்திரம் நம்பியிராமல், சரியான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (28) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, "நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதைத் தவிர வேறு வழிகள் இருக்கவில்லை. எதிர்க்கட்சி எம்.பிக்களும் இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டுதான் இங்கு உரையாற்றினர். ஆனாலும் தொடர்ந்தும் கையேந்துகின்ற நிலைக்கு எமது நாட்டை இட்டுச்செல்லாமல், சொந்த முயற்சியில் முன்னேறுவது குறித்து சிந்திப்பது அவசியம். எனவே, பொருளாதார மேம்பாடுகளுக்கென தங்களால் வழங்கப்படும் ஆலோசனைகளையும் அரசாங்கம் கருத்திலெடுப்பதே சிறந்தது.

1991 இல் இந்திய நிதியமைச்சராக இருந்த மன்மோகன் சிங் அறிமுகப்படுத்தியது போன்ற காணிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம். இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக ஏற்றுமதிகளை அதிகரிப்பதுதான் இதற்குள்ள வழி. இதற்காக ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பது, சுற்றுலாத்துறையை முன்னேற்றுவது உள்ளிட்ட செயற்திட்டங்களே தேவைப்படுகின்றன. நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டல்கள் தேவை. அவர்களைக் கௌரவிக்கும் செயற்பாடுகளால்தான் சுற்றுலாத்துறையைக் கவர முடியும். மாறாக அவர்களை அச்சுறுத்துவது அல்லது அசிங்கப்படுத்துவதான செயற்பாடுகள், சர்வதேசத்தில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வடக்கு, தெற்கை இணைக்கும் புத்தளம் - மன்னார் பாதையை திறக்குமாறு நாம் ஆலோசனை கூறினோம். இதுவும் கருத்தில் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே திறக்கப்பட்டிருந்த இப்பாதையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மூடினார். இப்பாதையூடாகப் பயணித்தால் நூறு கிலோமீற்றர் தூரத்தை மிச்சப்படுத்தலாம். நேரம், எரிபொருள் என்பவை இப்பயணத்தால் மீதமாகின்றன. இதனால், வடக்கு, தெற்கு வியாபாரப் பொருட்களுக்கான விலைகளையும் குறைக்க முடியும்.

இதுபோன்றுதான் தலைமன்னார், இராமேஸ்வரக் கப்பல் போக்குவரத்தும். இது, நாட்டின் வருமானத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது. அதிகளவான இந்திய சுற்றுலாப்பயணிகளை இந்தக் கப்பல் போக்குவரத்தால் உள்ளீர்க்க இயலும்.

நாட்டின் பொருளாதாரம் இந்தளவு அதலபாதாளத்திற்குச் சென்றுள்ள நிலையிலும், சில அமைச்சுக்களில் திருட்டுக்கள் ஒழிந்ததாக இல்லை. இது மட்டுமல்ல சில மதகுருமார்களின் செயற்பாடுகள், இலங்கையில் இன்னும் சமூக நல்லிணக்கம் ஏற்படவில்லை என்ற செய்திகளையே சொல்கின்றன.

புல்மோட்டை உள்ளிட்ட சிறுபான்மையினர் செறிவாக வாழும் பிரதேசங்களிலுள்ள காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளையும், அங்குள்ள மக்களை அச்சுறுத்தும் பாணியிலும் சில பௌத்த மதகுருமார்கள் அப்பட்டமாக நடந்துகொள்கின்றனர். இப்பிரதேசங்களில் வாழும் ஓரிரு பெரும்பான்மைக் குடும்பங்களுக்காக, அப்பிரதேசத்தில் நீண்ட காலமாக வாழும் சிறுபான்மைச் சமூகங்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டமும் இவ்வாறான அத்துமீறல்களில் ஈடுபடுவோரைப் பாதுகாக்கத்தான் கொண்டுவரப்படுகிறதோ? என்ற அச்சமும் மக்கள் மத்தியிலுள்ளது. எனவே, இந்நிலைமைகளை இல்லாமல் செய்து, இனவாத மற்றும் மத மேலாதிக்கப் போக்குகளை ஒழித்து, எல்லோரும் இலங்கையர் என்ற உணர்வில் ஒன்றுபட்டு உழைத்துத்தான் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும்" என்றார்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)
EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA
Mailing address: P.O.Box 48068 (Dundas &Sheppard Intersection)
Mississauga ON L5A 4G8

# OSTBA ANNUAL GENERAL MEETING 2023

Date: Wednesday, June 21, 2023
Via Zoom link: 647 795 0504 Pass Code: 292929
Venue: Mississauga Valley Community Centre
1275, Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8
Time: 10:00 am

Agenda
-Registration of members in good standing
-Canadian National Anthem
-Thamil Thaai Vaalthu
-A minute silence remembering deceased members
-Adoption of the minutes of the A.G.M held in 2022
-President's Address
-Secretary's Annual Report
-Audited Financial Statements - April 01,2022 to March 31, 2023
-Election of Board of Trustees
-A.O.B

Members attending the AGM through zoom will require to have their video on with their name.

Mr. T.Sivaloganathan
Board Secretary (OSTBA)

Mr. Esa Para Esananda
Board President (OSTBA)

Tel: 416-473-6880 Email: ostba2019@gmail.com

## BASEMENT FOR RENT

Whitby நகரில் Dryden / Thickson சந்திப்பிற்கு அருகில் 3 bedroom basement with washroom வாடகைக்கு உண்டு. 10 mins from Durham College. Close near to NoFrills, bus stop, & Whitby Go Station. Available from May 1st onwards.

Call:
(647) 608-7448

## House Cleaning Staff Wanted

House Cleaning Staff Wanted.
Day Shift Only.
( No Evenings Or Weekends)

Please Call
905 472 6042

## Condo apartment for Rent

Lawrence and Midland சந்திக்கு அருகில் உள்ள Condo apartment with 2 Bedrooms வாடகைக்கு உள்ளது.

,Near TTC, Subway station and supermarket.

Please call: 416 466 0595

## Help Wanted

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

## இயக்கச்சியில் காணி விற்பனைக்கு உண்டு (40 ஏக்கர்)

கிளிநொச்சி கச்சேரியில் பதியப்பட்ட, பச்சிலைப்பள்ளி பளை பிரதேச சபை பிரிவில் இயக்கச்சியில் A9 வீதியில் இருந்து 3 கி.மீ தொலைவில் ஆளியவளை வீதியில் 40 ஏக்கர் பிரயோசனங்கள் கொண்ட காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு (25 ஏக்கர் உறுதி, 15 ஏக்கர் Permit).

தொடர்புகளுக்கு: 1-519-222-5191 அல்லது 94-777750308

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today
Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "வாழ்க்கைக்கான கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு எமது பெற்றோர்களே தடையாக இருக்கிறார்கள்"

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



பாடசாலைக் கல்வியும் பல்கலைக் கழகக் கல்வியும் மட்டுமே ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் என்ற நம்பிக்கை பெரும்பாலான பெற்றோர்களிடம் இருக்கிறது. ஆனால், ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் வாழ்க்கைக்கான கல்வி வகுப்பறைகளுக்கு வெளியேயே இருக்கிறது. துரதிஸ்டவசமாக அந்தக் கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு எமது பெற்றோர்களே தடையாக இருக்கிறார்கள் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (29.04.2023) நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பற்றிய அறிவையூட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழற்பாதுகாப்பில் பங்கேற்க வைக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்திசெய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற பெயரில் மாணவர்களுக்கான வலுவூட்டல் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே நல்லூரில் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பின் தாபகத் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். சிறப்புரைஞர்களாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் ச.சர்வராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அனுபவத்தைவிட சிறந்த ஆசான் உலகில் வேறெதுவும் இருக்கமுடியாது. ஆனால், அந்த அனுபவத்தைப் பெறமுடியாதவாறு பாடசாலை வகுப்பறைகளுக்குள்ளும் தனியார் கல்வி நிறுவனங்களின் கொட்டகைகளுக்குள்ளுமே எமது மாணவர்களின் பெரும்பொழுது கழிகிறது. பிறநிகழ்ச்சிகளில் மாணவர்கள் கலந்துகொண்டால் கல்வி பாதிக்கப்படும் என்றே பெற்றோர்கள் கருதுகிறார்கள். இதனால், உயர்ந்த சித்திகளைப் பெற்றிருந்தாலுங்கூட கல்வியை முடித்து வெளியே வரும் மாணவன் வாழ்க்கையில் தடுமாற நேரிடுகின்றது.

வாள்வெட்டும், போதைப்பொருள் பாவனையும் என்று எமது பண்பாட்டுச் சூழல் சீர்கெட்டிருக்கும் நிலையில் பிள்ளைகளை வெளியே அனுப்பினால் அவர்களும் தவறாக வழிநடத்தப்படுவார்கள் என்று பெற்றோர்கள் அஞ்சுகிறார்கள். வெளியே மாத்திரமல்ல ; இன்று பிரபல்யமான பாடசாலைகளில் பயிலுகின்ற மாணவர்கள்கூட போதைக்கு அடிமையாகி இருக்கிறார்கள். எனவே, பெற்றோர்கள் பிள்ளைகள் மீது சந்தேகம் கொள்ளாமல் அதேசமயம் அவர்களைக் கண்காணித்தவாறு இதர நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் பங்கேற்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

வகுப்பறைகளுக்கு வெளியே இயற்கை எங்களுக்கு ஏராளமான விடயங்களைக் கற்றுத் தருகிறது. இயற்கையைப் புரிந்துகொண்டதும் இயற்கையின் மீதான நேசிப்புத் தானாகவே ஏற்பட்டுவிடும். இயற்கையை நேசிப்பவர்கள் சுற்றுச்சூழலைச் சீரழிக்காதவாறு இயற்கையுடன் இசைந்து வாழ்வதற்குக் கற்றுக்கொள்வார்கள். அதுமாத்திரமல்ல, மனிதன் உட்பட சகல உயிரிகளையும் நேசிக்க ஆரம்பிப்பார்கள். சகமனிதர்கள் மீதான நேசமே இன்று சமூக வன்முறைகளைக் களைவதற்கான தீர்வாகவும் அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் தனது பிரதம விருந்தினர் உரையில் பினவருமாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

"எமது தாயக மாணவச் செல்வங்களிற்கு பல தேவைகள் உள்ளன. அவர்களின் தேவைகளில் சிலவற்றை அரசு கவனிக்க வேண்டிய நிலையில் அவ்வாறான நிலை தாயகத்தில் இல்லை. இதன் காரணமாக பல புலம் பெயர் அமைப்புக்கள் இந்த தேவைகளை பூர்த்தி செய்கின்றன. மாணவர்களின் தேவைகள் பெற்றோர்களின் தேவைகளாக மாறிவிடுகின்றன.இதனால் அவர்களின் தலைகளில் சுமைகள் அதிகரிக்கின்றன. அரசு பொறுப்பேற்க வேண்டிய மாணவர்களின் தேவைகள் பற்றி எமது தமிழ் பேசும் அரசியல்வாதிகளோ அன்றி தென்னிலங்கை அரசியல்வாதிகளோ கவனிப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும்" என்றார்

ஓய்வுநிலை ஆசிரியர் பா. காசிநாதன் வரவேற்புரையாற்றியிருந்த இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தார்கள். கலந்துகொண்டிருந்த மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வுக் குறிப்பேடுகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.









# உழைப்பாளர் தினம்

------------------------------

*சிக்காகோ நியுயோர்க் மக்கள்*
*அக்கிரமம் அழிக்கத் திரண்டனர்*
*உக்கிரமானது உலகப் புரட்சி*
*உழைக்கும் நேரம் எட்டுமணியானது*
*உரிமையைப் போராடி வென்றனரே!*

*உதிரத்தை உழைப்பாக்கி உலகத்தை உயர்த்தும்*
*உண்மைத் தொழிலாளியை உள்ளத்தால் வணங்குவோம்*
*உலகுக்கு உணவளிக்கும் உழவர்களைக் காப்போம்*
*உழைப்பாளி இல்லை என்றால் உலகில்*
*வெறும் கல்லும் மண்ணும்தான் மிஞ்சும்*
*உழைப்போரை மதிப்போம் உயர்த்துவோம் வாழ்வை.*

*பாரையே வடிவமைக்கும் பாட்டாளி*
*பாரில் திரண்டால் பாரழியும்*
*கைகட்டி வாய்பொத்திய காலம்போதும்*
*கரமுயர்த்தி உரிமைக் குரலெழுப்பி*
*உன்னுரிமை உயிர் நாடியே!*
*உழைப்போம் உரிமை பெறும்வரை.*

*சுரண்டும் வர்க்கம் உனைச்சுரண்டி*
*உறிஞ்சுவது தோழா உன்குருதி*
*வீழ்ந்தே கிடந்து அடிதொழுது*
*வீணாய் வாழ்வை அழிக்காதே.*

*கல்லைச் சுமந்தாலும் கள்ளமிலாக் கூட்டம்*
*மண்ணைச் சுமந்தாலும் மானமுள்ள மக்கள்*
*எடையைக் குறைக்க நடக்கும் கூட்டமது*
*உணவிற்காய் உழைக்க நடக்கும் கூட்டமிது*
*உழைத்துக் களைத்து நெல்லைச் செய்தனர்*
*ஒருவேளைக் கஞ்சிக்கே கையேந்தி நின்றனர்*
*பட்டுத் துணிகளைப் பகட்டாய்ச் செய்தனர்*
*பருத்தித் துணிக்கே பரிதவித்து நின்றனர்*
*என்று தணியுமிவர் வாழ்வின் சோகம்?*

*உனது வியர்வைத் துளிகள் ஒவ்வொன்றும்*
*உன்னை மட்டுமல்ல உலகையும் உயர்த்தட்டுமே!*
*ஒவ்வொரு கைப்பிடிச் சோறும் உண்ணும்போதும்*
*நீங்கள் இவர்களை நினைத்துப் பாருங்கள்*
*உணவை ஒருபோதும் வீணாக்க மாட்டீர்கள்*
*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்*
*வீணேஉண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்.*

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீட மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம் ஒன்று தொடர்பாக துணைவேந்தரையும் கலைப் பீடாதிபதியையும் சந்தித்த கனடா உதயன் பிரதம ஆசிரியர்

கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீட த்தின் மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம் ஒன்று தொடர்பாக பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜா அவர்களையும் கலைப் பீடாதிபதி கலாநிதி ரகுராம் அவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

கடந்த சனிக்கிழமையன்று மதியத்திற்குப் பின்னர் பல்கலைக் கழகத்தின் "கவுன்சில்" கூட்டத்தின் பின்னர் கனடா உதயன் குழுவினரைச் சந்தித்த துணைவேந்தரும் கலைப் பீடாதிபதியும் நலன் விசாரித்த பின்னர் கனடியத் தமிழர்களின் செயற்பாடுகள் பற்றியும் கலை, கல்வி மற்றும் கலாச்சார செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, ஏற்கெனவே உரையாடித் தீர்மானித்த புலமைப் பரிசுத் திட்டம் தொடர்பான பத்திரங்களை உதயன் பிரதம ஆசிரியர் இருவரிடமும் கையளித்தார்.

இத்திட்டத்தின் பயனாளிகளை இன்னும் சில வாரங்களில் தெரிவு செய்து அவர்கள் பயன்பெறும் வகையில் செயற்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

கனடா உதயன் நிறுவனமும் ரொறன்ரோ மனித குரல் அமைப்பும் இணைந்து இந்தத்திட்டத்திற்கான ஒரு மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்குகின்றன. கனடா வாழ் சமூக நலன் கொண்ட அன்பர்களான வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் சாந்தா பஞ்சலிங்கம், சங்கர் நல்லதம்பி, நிமால் விநாயகமூர்த்தி, கணேசன் சகுமார், திருமதி. சசிகலா நரேன் உட்பட மேலும் சிலர் இந்த புலமைப் பரிசுத்திட்டத்திற்கு பங்களித்துள்ளனர்.



இந்த சந்திப்பின் போது எமது ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞாத்துறைப் பட்டதாரியுமான லோகன் கணபதி அவர்கள் வழங்கிய மாகாண அரசின் வாழ்த்துப் பத்திரங்களையும் உதயன் பிரதம ஆசிரியர் அவர்கள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜா அவர்களுக்கும் கலைப் பீடாதிபதி கலாநிதி ரகுராம் அவர்களுக்கும் வழங்கினார். அதற்கான துணைவேந்தர் அவர்கள் நன்றி தெரிவித்தார்.







# கனடா வீணை மைந்தன் 3 நூல்கள் வெளியீட்டில் யாழ் பல்கலைக்கழக வேந்தர் மற்றும் முன்னாள் வேந்தர்களின் புகழாரம்







கடந்த ஏப்ரல் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் அரங்கில் கனடிய எழுத்தாளரும் கவிஞருமாகிய வீணை மைந்தன், கே.ரி சண்முகராஜாவின் நூல்களான "மண்ணும் மனசும்", "மறக்க தெரியாத மனசு", "தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்" ஆகிய மூன்று நூல்கள் மண்டபம் நிறைந்த கற்றோர், எழுத்தாளர், ஊடகவியலாளர்கள், வாசிப்புப் பிரியர்கள் மத்தியில் வெகு சிறப்பாக வெளியிடப்பட்டது.

முன்னை நாள் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில், இந்நாள் துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி சி. சிறீசற்குணராஜா முதன்மை விருந்தினராக வீணை மைந்தன் ஆளுமையைப் புகழ்ந்தும் வியந்தும் பாராட்டிப் பேசினார்.

தலைமையுரையில் நாகலிங்க நூலாலய நிறுவனத் தலைவரும் பேராசிரியருமான திரு. என். சண்முகலிங்கன் 2015இல் இதே பல்கலைக்கழகத்தில் வீணைமைந்தனின் முத்தமிழ் நூல்கள் வெளியீட்டில் அறிமுகமாகி மீண்டும் புதிய மூன்று நூல்களை வெளியீடு செய்தல் வரை நூலாசிரியரின் ஆழ்ந்த தமிழ்க்காதலையும் - தாய் மண் பற்றையும் எழுத்தின் மீது கொண்டுள்ள விடாத விருப்பையும் வியந்து புகழ்ந்துரைத்தார்.

கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் தனது பத்திரிகை வளர்ச்சிக்கு முப்பது ஆண்டுகளாக வீணைமைந்தன் ஆற்றி வரும் தமிழ்ப்பணியை நன்றியுடன் மகிழ்ந்து சிறப்புரையாற்றினார்.

"மண்ணும் மனசும்" நூலை சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா. இராஜேஸ்வரன் வாசித்து அனுபவித்த இரசணையுடன் ஆற்றிய விமர்சன உரை வாசிப்புப் பிரியர்களை நூலை வாங்கி வாசிக்கத் தூண்டியது.

"மறக்கத் தெரியாத மனசு" நூலுக்கு விமர்சன உரை நிகழ்த்திய மேனாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா நகைச்சுவை கலந்த ரசணையுடன் வீணை மைந்தனின் எழுத்து வடிவத்தை எல்லோர் மனதிலும் பதிய வைத்தார்.

மூன்றாவது நூலான "தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்" பற்றி பேராசியர் திரு. என். சண்முகலிங்கன் பாரதி பாடல்களை இசைத்தபடி தனக்கேயுரிய பாணியில் மிக அழகாக விமர்சித்து நூலை விரும்பி வாங்க வைத்தார்.


வீணைமைந்தனின் ஏற்புரையுடன் விழா இனிதே இலக்கிய வெற்றி கண்டது.

**- யாழ் சிற்பி**



# சுமந்திரனின் சட்ட மறுப்புப் போராட்டம்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



நீதிமன்றத்தில் வெடுக்குநாறி மலை விவகாரத்தில் தமிழர்களுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றியை சுமந்திரனின் விசுவாசிகள் ஒரு மகத்தான அடைவாகக் கொண்டாடுகிறார்கள். சுமந்திரனும் வேட்டி உடுத்துக் கொண்டு வெறும் மேலோடு வெடுக்குநாறி மலைக்குப் போகிறார். ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னது போல பூணூல் அணியாத குறை.

சுமந்திரன் வெடுக்குநாறி மலை வழக்கில் பெற்ற வெற்றி அவருடைய வாத திறமையால் கிடைத்தது அல்லவென்று அவரை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். தொல்லியல் திணைக்களம் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தால்தான் வழக்கில் சுமந்திரனுக்கு வெற்றி கிடைத்தது என்று கருதப்படுகிறது. தொல்லியல் திணைக்களம் அந்த விடயத்தில் ஆட்சேபனை தெரிவிக்காமல் என்பது ஓர் அரசியல் தீர்மானம் தான். அதேபோல இது நடந்த அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் தையிட்டிப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் மிக உயரமான தாது கோபம் ஒன்றுக்கு கலசம் வைக்கப்பட்டதும் ஓர் அரசியல் தீர்மானம்தான்.

தையிட்டியில் வைக்கப்பட்ட கலசம் சூரிய ஒளியில் பிரகாசிக்கும் பொழுது வெடிக்குநாறி மலையில் பெற்ற வெற்றி மங்கிப் போகிறது என்பதே உண்மை. சுமந்திரனின் விசுவாசிகள் அதை ஒரு வழக்கு வெற்றியாக கொண்டாடுவதில் தவறில்லை. ஆனால் சுமந்திரன் இந்த விடயத்தில் தானாக முன்வந்து இந்துக்களுக்கு உதவியிருக்கிறார் என்ற ஒரு தோற்றம் உருவாகப் பார்க்கின்றது. அது தவறு அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். பாதிக்கப்பட்ட மக்களின் உறுப்பினர். ஒரு தொழில்சார் சட்டத்தரணி. எனவே தொழில் சார்ந்து அவர் தனது மக்களுக்கு உதவ வேண்டியது அவருடைய கடமை, பொறுப்பு. அவர் தன் கடமையைத்தான் இதில் செய்திருக்கிறார்.

மேலும் இந்த சட்ட வெற்றியை வைத்துக் கொண்டு மரபுரிமை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றையும் சட்டக்கண் கொண்டு பார்க்கவும் தேவையில்லை. ஏனென்றால் சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது ஒரு சட்ட விவகாரம் அல்ல. அது ஓர் அரசியல் விவகாரம். அதை அரசியல் ரீதியாகத்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கம் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். அரசாங்கம் அவ்வாறு அரசியல் தீர்மானம் எடுக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். அதற்கு தமிழ்த் தரப்பு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் போராட வேண்டும்.

அண்மையில் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சட்ட மறுப்பு போராட்டத்தைப் பற்றி பிரசாபித்திருந்தார். அதுதான் வழி. அரசாங்கத்துக்கு வலியுண்டாகும் விதத்தில், அரசு நிர்வாகத்தை முடக்கும் விதத்தில், உலக சமூகத்தை திரும்பிப் பார்க்க வைக்கும் விதத்தில் தமிழ்த் தரப்பு போராட வேண்டும். ஒரு மக்கள் பிரதிநிதியும், நாட்டின் பிரபல சட்டத்தரணியும் ஆகிய சுமந்திரன் தன் தொழில் சார்ந்த ஒழுக்கத்துக்கு மாறாக சட்ட மறுப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

சட்ட மறுப்பு என்றால் என்ன? அது சாகப் பயந்தவர்களின் ஆயுதமா? அல்லது போராட விரும்பாதவர்கள், போராடத் திராணியில்லாதவர்கள் பதுங்கும் ஓரிடமா? இல்லை. காந்தியைப் பொறுத்தவரை சட்டமறுப்பு எனப்படுவது ஒரு வாழ்க்கை முறை. அவரைப் பொறுத்தவரை அது சாகத் துணிந்தவர்களின் ஆயுதம். தன் உயிரையும் விடச் சித்தமாக இருப்பவர்தான் சட்ட மறுப்பில் ஈடுபடலாம்.

சட்ட மறுப்புப் போராட்டமும் உட்பட அறவழிப் போராட்டம் எனப்படுவது அல்லது அகிம்சை போராட்டம் எனப்படுவது தன்னைத் தானே வருத்துவதுதான். போராடும் தரப்பு தன்னைத்தானே வருத்தும் பொழுது அது இரண்டு விளைவுகளை ஏற்படுத்தும்.

முதலாவது விளைவு, பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடும் நபர்களை நோக்கி ஈர்க்கப்படுவார்கள். தங்களுக்காக என் உடலை வருத்தும் ஒருவர் மீது மக்கள் எப்பொழுதும் மதிப்பு வைப்பார்கள். சட்டமறுப்பு போராட்டத்தில் ஈடுபடும் ஒருவர் தன்னை எந்த அளவுக்கு வதைத்து கொள்கிறாரோ அந்த அளவுக்கு அவருக்கு வெகுஜன அபிமானமும் கூடும். இது முதலாவது விளைவு.

இரண்டாவது விளைவு, தன்னைத்தானே வருத்துவதன் மூலம் எதிரியின் மனசாட்சியை உலுப்புவது. சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு அதற்கெல்லாம் மசியாது என்ற ஒரு விளக்கமும் உண்டு. ஆனால் அவர்கள் மசிவார்களோ இல்லையோ, இங்கு கூறப்பட்ட முதல் விளைவின் விளைவாக பொதுமக்கள் அந்த அஹிம்சைப் போராளியை நோக்கி வரும்பொழுது, அந்தப் போராட்டம் மக்கள் மயப்படும். அது திரண்ட மக்கள் எதிர்ப்பாக மாறும். காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்தை போல. விளைவு அரசாங்கத்தை பணிய வைக்கும். திரளான மக்கள் போராட்டங்கள் அரசாங்கத்திற்கு வலியை உண்டாக்கும். அரசு நிர்வாகத்தை முடக்கும். போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்யும். நாட்டையே முடக்கும். அதனால் பொருளாதார ரீதியாக மேலும் சேதம் ஏற்படும். அப்பொழுது அரசாங்கம் பணிய வேண்டியிருக்கும்.

ஆனால் அந்தப் போராட்டத்தை தொண்டர்கள் முன்னெடுக்க கூடாது தலைவர்கள் முன்னுக்கு நிற்க வேண்டும். ராஜதந்திரிகளுக்கு நன்கு தெரிந்த, நாடறிந்த முன்னணித் தலைவர்கள் போராட்டத்தில் முன்னுக்கு நிற்க வேண்டும். தலைவர்கள் சாகத் தயாராக இருக்க வேண்டும். தலைவர்கள் தங்கள் உயிரைக் கொடுக்க சித்தமாக இருப்பார்களாக இருந்தால், தலைவர்கள் பசியோடு இருக்கவும், தாகத்தோடு இருக்கவும், காயத்தோடு இருக்கவும், சிறையில் இருக்கவும் தயாராக இருந்தால், தொண்டர்களும் அதைப் பின்பற்றுவார்கள். மக்களும் திரண்டு வருவார்கள். எனவே தலைவர்கள் அதற்கு தயாராக இருக்க வேண்டும். தலைவர்களின் தியாகங்கள் மக்களை நொதிக்கச் செய்யும். நாடாளுமன்றத்தில் சட்ட மறுப்பை பற்றிக் கூறிய சுமந்திரன் அதற்குத் தயாரா?

அல்லது அன்னை பூபதி, திலீபன் ஆகியோரின் படங்களை வடக்கிலிருந்து கிழக்குக்கு காவிச் செல்லும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூபதியைப் போல திலீபனைப் போல உண்ணாவிரதம் இருப்பதற்கு தயாரா?

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அப்படி போராட மாட்டார்கள் என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன. தமிழ்க் கட்சித் தலைவர்கள் பெரும்பாலானவர்கள் வாய்ச்சொல் வீரர்கள்தான், நடிப்புச் சுதேசிகள்தான். அவர்களுடைய வீரத்தின் உச்சம் எதுவென்றால் காவல்துறைக்கு எதிராகவும் அதிரடிப்படைக்கு எதிராகவும் அரசு படைகளுக்கு எதிராகவும் அச்சமின்றிக் கதைப்பதுதான். அதற்கு அப்பால் சிறைகளை நிரப்ப எத்தனை அரசியல்வாதிகள் தயார்?

கடந்த 14 ஆண்டுகளாக அப்படி யாராவது சிறைகளை நிரப்பி யிருக்கிறார்களா? நாடாளுமன்ற உறுப்பினர்களோடு நின்ற தொண்டர்கள் சிலர் சிறைகளை நிரப்பியிருக்கிறார்கள். இப்பொழுதும் சிறையில் இருக்கிறார்கள். ஆனால் தலைவர்கள் யாரும் இதுவரை சிறை போகவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் சில மணித்தியாலங்கள் அண்மையில் சிறை வைக்கப்பட்டார். அதற்கும்பால் மண்டேலாவைப் போல அல்லது காந்தியைப் போல ரிஸ்க் எடுத்து போராடுவதற்கு எத்தனை பேர் தயார்? காந்தி குல்லாய் அணிவதல்ல அறவழிப் போராட்டம்.காந்தியைப் போல போராடவேண்டும்.

அப்படி யாரும் தயாரில்லை என்பதைக் கண்டுபிடித்த காரணத்தால்தான் அரசாங்கம் சிங்கள பௌத்த மயமாக்கலை முழு வேகத்தில் முடுக்கி விட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வரப் போவதாக அச்சுறுத்துகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் நகரங்களின் மையங்களில் சுலோக அட்டைகளோடு சில மணித்தியாளங்கள் நிற்கிறார்கள். அல்லது நிலத்தை அபகரிக்க வரும் படைத்தரப்போடு களத்தில் நின்று தர்க்கப்படுகிறார்கள். அல்லது ஊர்வலம் போகிறார்கள். அடையாள உண்ணாவிரதம் செய்கின்றார்கள். கடையடைப்பு செய்கின்றார்கள். இந்தப் போராட்டங்கள் எவையும் அரசுக்கு வலியை உண்டாக்கவில்லை. அடுத்த நாள் பத்திரிகைகளில் செய்திகளாக வருவதைத் தவிர இந்த போராட்டங்கள் அரசு நிர்வாகத்தை முடக்குபவை அல்ல. அவ்வாறு அரசு நிர்வாகத்தை முடக்கவோ அல்லது நாடாளுமன்ற செயற்பாடுகளை முடக்கவோ திராணியில்லாத தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறவழிப் போராட்டங்களை குறித்தும் சட்ட மறுப்பு போராட்டங்களை குறித்தும் வாய்ச்சொல் வீரம் காட்டுகிறார்கள் தவிர, செயலில் எதையும் காட்டவில்லை.

இறுதிக்கட்டப் போரில் கருணாநிதி சில மணித்தியாளர்கள் உண்ணாவிரதம் இருந்ததை ஈழத் தமிழர்கள் கடுமையாக விமர்சிப்பதுண்டு. ஆனால் ஈழத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் என்ன செய்கிறார்கள்? சில மணித்தியால உண்ணாவிரதங்களைத்தானே செய்கிறார்கள். சில மணி நேர, ஆர்ப்பாட்டங்களை குறியீட்டு கடை அடைப்புகளைத்தானே செய்கின்றார்கள்? தொடர்ச்சியாகப் போராட யாரால் முடிகிறது? அதற்கு யார் தயார்? ஒருவரும் தயார் இல்லை.

இப்போதுள்ள மிதவாத தலைவர்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய மிதவாதத்திலும் தம்மை ஒறுத்து, அர்ப்பணித்துப் போராடுவதற்கு தலைவர்கள் தயாராக இருக்கவில்லை. காலி முகத்துடலில், கச்சேரியில் அடி விழுந்ததும் அடுத்த கட்டமாக எப்படி அறவழியில் போராடுவது என்பதை குறித்து தமிழ் தலைவர்களிடம் வழி வரைபடம் எதுவும் இருக்கவில்லை. காலிமுகத் திடலில் கச்சேரியில் நடத்திய போராட்டங்கள் கூட முழு அளவுக்கு மக்கள் மயப்பட்டவை அல்ல. எனினும், தலைவர்கள் அங்கே முன்னணியில் நின்றார்கள்.

இப்பொழுதும் தலைவர்கள் முன் சென்றால் தொண்டர்கள் பின் வருவார்கள். தலைவர்களுக்கு அடி விழுந்தால், தொண்டர்கள் அதை தடுக்க முன்வந்து தாங்களும் அடி வாங்குவார்கள்.மக்கள் அதைக் கண்டு கொதிப்பார்கள். போராட்டத்தை நோக்கித் திரள்வார்கள். இதுதான் அகிம்சை போராட்டத்தின் அடிப்படைப் பொறிமுறை. தமிழ் அரசியல்வாதிகள் அப்படி ஒரு போராட்டத்துக்கு தயாரா?

## வீணாவின் கவிக்கணை

இருள் சூழ்ந்த இடம்
இரவாக இருக்கலாம்,
உன் மனதாக இருக்க கூடாது,
வெளிச்சம் நிறைந்த அறையாக
உன் மனதை மாற்றிக்கொள்,
காணும் காட்சியும்,
பூவும் மரமும் மட்டுமல்ல,
உன்னோடு சேர்ந்து
உன் வாழ்க்கையும்கூட
அழகாக மாறிவிடும்.

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*



# துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகம்

## 18-06-2023 ஞாயிறு காலை 6 மணி

## விஷேட குருமார்கள் வருகை

## மஹாயந்திர பூஜை ஆரம்பமாகிவிட்டது

**நீண்ட காலமாக பக்தர்களால் எதிர்பார்க்கப்பட்ட துர்க்கேஸ்வரம் ஆலய மஹாகும்பாபிஷேகம், 48 நாள் யந்திரபூஜையுடனும், 12 நாள் கிரியாஹோமங்களுடனும், 12 கால யாகபூஜையுடனும் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவிழாவாக நடைபெறவுள்ளது. முதன் முதலாக இவ்வளவு சிறப்புடன் நிகழும் மகத்துவத்தை இந்த மஹாகும்பாபிஷேகம் பெறவுள்ளது. தமிழ்நாடு பிள்ளையார்பட்டி, டாக்டர் சிவஸ்ரீ. கி. பிச்சைக்குருக்கள் சர்வசாதகராக வீற்றிருந்து இந்த மஹாகும்பாபிஷேகத்தை நிகழ்த்தவுள்ளார். பல நாடுகளில் இருந்தும் குருமார்கள் வருகை தருகின்றனர்.**



துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யந்திர பூஜைக் காட்சி

அஷ்ட ஐஸ்வர்யங்களும் கொழித்து விளங்கும் தேசமாகிய கனடாவில், பல்லின மக்கள் அமைதியும் சமாதானமும் ஒற்றுமையும் ஒருங்குசேர வாழும ஒன்ராரியோ மாகாணத்தில், சைவசமயத்தை தம் வாழ்க்கையின் நெறிமுறையாக வரித்துக் கொண்ட பல லட்சம் இந்துக்கள் வாழும் ரொறன்ரோ மாநகரில் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் திருத்தலம் "**துர்க்கேஸ்வரம்**" என அழைக்கப்பெறும் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில். இலங்கை இந்தியா தவிர்ந்த பிறிதொரு நாட்டில் முதன்முதலாக 33 ஹோமகுண்ட உத்தமயாக மஹாகும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு நிகழப்பெற்ற சிறப்புற்று, அதனைத் தொடர்ந்து எண்ணற்ற ஹோமங்களாலும், பூஜைகளாலும், உற்சவங்களாலும், விழாக்களாலும் அருளுருவேற்றப் பெற்று, பல லட்சம் பக்தர்களின் மனங்களில் வீற்றிருந்து, தனது அபார வல்லமையினாலும் அருட்சக்தியினாலும் அவர்களின் குறைகளை அறிந்து தீர்த்து வைக்கும் மகத்துவம் பெற்று, அருள் வழங்கிவரும் பேரருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி அம்பாளின் திருக்கோவில், புதிதாய் அமைக்கப் பெற்ற பஞ்சதள ராஜகோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பெற்று பெரும்சாந்தி காண்கிறது.

மஹாகும்பாபிஷேகத்தின் முதல் அம்சமாக 48 நாள் யந்திர பூஜை கடந்த வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகிவிட்டது. தமிழகத்தில் இருந்து பிரசித்தி பெற்ற அருட்தலங்களின் குருமார்கள் வந்தவண்ணம் உள்ளனர். மிகப் பெரும் அருட்சிறப்பு மிக்க மஹாகும்பிஷேகமாக துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

### யந்திர பூஜை
**21-4-2023 முதல் 7-6-2023 வரை**

### பூர்வாங்க கிரியைகள்
**7-6-2023 முதல் 12-6-2023 வரை**

(மஹாகணபதி ஹோமம், நவதுர்க்கா ஹோமம், மஹாஸ்கந்த ஹோமம், மஹாலட்சுமி ஹோமம், ஸ்ரீவித்யா ஹோமம், பிரத்தியங்கராதேவி ஹோமம், நவக்கிரக ஹோமம முதலியன)

### யாகபூஜை
### 12 காலங்கள்
**12-6-2023 முதல் 18-6-2023 வரை**

### தீபஸ்தாபனம்
**15-06-2023 வியாழன்**

### எண்ணெய்க்காப்பு
**16-06-2023 வெள்ளி**

**17-06-2023 சனி**

### மஹாகும்பாபிஷேகம்
**18-06-2023 ஞாயிறு**

**காலை 6 மணி முதல்**

(முழுமையான விபரம் மஹாகும்பாபிஷேக பத்திரிகையில் காண்க)

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

## மனம் திறக்கிறார் மனோ கணேசன்

### (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 13)

## "பிரபாகரனை கொன்றது பிழை என்ற ஞானசாரர்"



• **அ**ப்படி இல்லை அரக்கனே..! இது சிங்கள பௌத்த நாடு நீங்கள் வந்தேறு குடிகள். சொந்தம் கொண்டாட முடியாது என்றார்.

• மகாவம்சம் கல்வெட்டுகளிலும், ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு, இன்று நூல் வடிவில் இருக்கிறது. வாங்கி படியுங்கள். நாம் யார், நீர் யார் என்பதை புரிந்துகொள்வீர் என்றார்.

• படித்தேன். இந்தியாவிலிருந்து, விஜயன், நண்பர்களுடன் இலங்கை வந்து தரையிறங்கினான் என மகாவம்சம் சொல்கிறதே என்றேன்.

• ஆணவம் அடங்கி, பிரபாகரனை கொன்றது பிழை. பிரபாகரன் இருந்திருக்க வேண்டும் என்றார்.

• தொடர்ந்து, சிங்கள பௌத்தரும், தமிழ் இந்துக்களும் கூட்டு சேர்ந்து, முஸ்லிம் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும் என்றார்.

---

**காலகட்டம்: தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சராக (2015-2019) நான் செயற்பட்ட காலம். ஒருநாள் பொதுபலசேனா செயலாளர் ஞானசார தேரர் என்னை சந்திக்க வந்தார்.**

---

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சராக நான் செயற்பட்ட போது, ஒருநாள் பொதுபலசேனா ஞானசார தேரர் என்னை சந்திக்க வேண்டும் என்று எனது செயலாளரை கேட்டிருந்தார். அவர் கேட்ட தினத்தில் இருந்து சரியாக ஒரு வாரம் கழித்த ஒரு நாளிலே காலை 10 மணிக்கு நேரம் தந்தேன்.

ஆனால் அவர் வருவதற்கு முதல் நாள் இரவு தொலைக்காட்சி செய்தியில் ஞானசாரர் என் பெயரை குறிப்பிட்டு என்னை கடுமையாக விமர்சனம் செய்தார்.

மனோ கணேசன் தனது நல்லிணக்க பிரச்சாரத்தை, வவுனியாவுக்கு வடக்கே சென்று தமிழ் மொழியில் செய்ய வேண்டும். தென் இலங்கையிலே சிங்கள மொழியிலே செய்ய கூடாது என என்னை கடுமையாக விமர்சனம் செய்தார்.

இந்நாடு, பல்லின, பன்மத, பன்மொழி நாடு என்ற தொனியில் நூற்றுக்கணக்கான கலந்துரையாடல்களை, நான் சிங்கள மொழியிலே சிங்கள மக்கள் மத்தியிலே நடத்தினேன். சிங்கள பௌத்தம் மட்டும் என்ற கொள்கை பிழை என்பதே இதன் அர்த்தம். இந்த பிரச்சாரம் சிங்கள மக்கள் மத்தியிலே எடுபடவில்லை என சில மேதாவி தமிழ் பேசும் அறிவாளிகள் சொல்வார்கள். என்னை பொறுத்தவரையிலே இந்த பிரச்சாரம் நன்றாக எடுப்பட்டது. இன்னும் ஒரு ஐந்து வருடம் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் சிங்கள மக்கள் மத்தியிலே பாரிய மன மாற்றத்தை கொண்டு வந்திருக்கலாம்.



உண்மையில், அதனால்தான், அதன் பலாப்பலனாகத்தான் ஞானசாரருக்கு என் மீது கோபம். அதிலும் சிங்களத்தில் பேசுவதால் அதிக கோபம்.

இது இயல்பானது. இதற்கு முன் ரவிராஜ் மீதும் இவர்களுக்கு இப்படித்தான் கோபம்.

எனது செயலாளரை அழைத்து, ஞானசாரரை நாளை வர வேண்டாம். "அப்பொய்ன்மெண்ட் கான்சல்". இந்த இரவிலேயே தொலைபேசியில் அழைத்து அவருக்கு சொல்லுங்கள், என்றேன்.

மறுநாள் காலை 9 மணி. எனது செயலாளர் என்னை அழைத்தார். சந்திப்பு ரத்து செய்யப்பட்டது, என்று சொல்லியும், காலை 10 மணிக்கு வந்தே தீருவேன் என்று ஞானசாரர் சொல்கிறார் என்றார். வந்து தீர்க்க சொல்லுங்கள், நேரம் கிடைத்தால் பார்க்கின்றேன் என்று நான் சொன்னேன்.

பிறகு 10 மணிக்கு டான் என அவர் வந்துவிட்டதாக அமைச்சின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். வீட்டில் கட்சி பணிகளில் ஈடுபட்டிருந்தேன். 10.50 இற்கு மீண்டும் தொலைபேசியில் செயலாளர். சுமார் ஒரு மணித்தியாலமாக ஞானசாரர் நீங்கள் வரும்வரை காத்திருக்கிறார் என்றார்.

ஓஹோ, இருக்க சொல்லுங்கள், வாறன் என்றேன். 11.30 அளவில் நான் அமைச்சிற்கு போனேன். அதற்குள் ராஜகிரிய பொலிஸ் பொறுப்பதிகாரி நிறைய போலீஸ்காரர்களுடன் நான் வரும்வரை கீழ் தளத்தில் காத்திருந்தார்.

நான் இரண்டாம் மாடியில் எனது அறைக்கு சென்றேன். ஞானசாரரை அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் (போர்ட் ரூம்) அமரச்செய்திருப்பதாக செயலாளர் கூறினார். எனது அமைச்சு தலைமையகத்தில் மொத்தம் ஐந்து மாடிகள். மாடிகள் முழுக்க நடந்து திரிந்து, ஞானசாரர் சுத்தமாக என்னை திட்டிக்கொண்டே இருந்திருக்கிறார்.

10 மணிக்கு தான் வந்த பொழுது, ஏன் மின் தூக்கி அருகிலே வந்து தன்னை வரவேற்கவில்லை என்று செயலாளர் பிரியாணியிடம் ஞானசாரர் சண்டை போட்டுள்ளார். உங்களை அழைத்து செல்வது என் வேலையில்லை. அது அமைச்சு செயலாளரின் வேலை என்று பிரியாணி பதிலளித்திருக்கிறார்.



நான் மாநாட்டு மண்டபத்திற்கு போனேன். அங்கே மண்டப மேசையின் வலது புறத்தில் ஞானசார தேரரும், சகபாடிகளான இன்னும் இரண்டு தேரர்களும் அமர்ந்திருந்தார்கள். இடது புறத்திலே எனது அமைச்சின் செயலாளர்களும், அதிகாரிகளும் அமர்ந்திருந்தார்கள். ஊடகவியலாளர்களும் தொலைகாட்சி காமெராக்களுடன் மண்டபத்தில் நிறைந்திருந்தார்கள். நான் வந்து எனது பிரதான ஆசனத்தில் அமர்ந்தேன்.

வணக்கம் தேரர், சொல்லுங்கள் என்ன விஷயம்? அவர் உடனடியாக, தனக்கு அமைச்சில் மரியாதை தரவில்லை. என்னை உங்கள் செயலாளர் கீழே வந்து அழைத்துவரவில்லை என்றார்.

"அது அவரது வேலை அல்ல. இந்த சந்திப்பு ரத்து செய்யப்பட்டது என்பதால் நீங்கள் வர மாட்டீர்கள் என அவர் நினைத்திருக்கலாம்." என்றேன்.

செயலாளரை விட்டுவிட்டு என்னை பிடித்துக்கொண்டார். ஏன் சந்திப்பை ரத்து செய்தீர்கள் என்றார். சகவாழ்வு பிரச்சாரம் செய்கிறேன் என நீங்கள் என்னை நேற்று இரவு செய்தியில் கடுமையாக விமர்சித்தீர்கள். நம்மிடையே பேச எதுவும் இருப்பதாக நினைக்கவில்லை. ஆகவே சந்திப்பு ரத்து. சண்டை போட எனக்கு நேரமில்லை என்று கூறி முடித்தேன்.

"இல்லை, இல்லை பேசுவதற்கு இருக்கிறது"

"சரிஅப்படியானால் சொல்லுங்கள்"

ஞானசாரருடன் ராவண பலய என்ற இன்னொரு அமைப்பை சார்ந்த தேரர் கும்பலும் இருந்தது. சாரர் ஆரம்பித்தார்.

"இது சிங்கள பௌத்த நாடு, நீங்களும் (தமிழர்களும்), முஸ்லிம்களும் வந்தேறு குடிகள். எங்கள் சிங்கள பௌத்த நல்லெண்ணம் காரணமாக இந்நாட்டில் வாழ்கிறீர்கள். சகவாழ்வு தொடர்பாக உங்கள் உபதேசம் எமக்கு தேவையில்லை. வேண்டுமானால், வவுனியாவுக்கு வடக்கே போய் சொல்க. கிழக்கில் தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் சொல்க. மலைநாட்டில் தமிழர்களுக்கு சொல்க. இது சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்று வாழ சொல்க".

மூச்சை இழுத்து விட்டு, விட்டு தொடர்ந்தார்.

"எங்கள் 2000 வருட மகாவம்ச வரலாறு கல்வெட்டுகளிலும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு, இன்று நவீன நூல் வடிவில் இருக்கிறது. வாங்கி படியுங்கள். நாம் யார், நீர் யார், அவர் யார் என்பதை புரிந்துகொள்வீர்." என்றார்.

எமக்கு அசந்தர்ப்பமாக, "..நான் யார், நீ யார்.." என்ற எம்ஜியார் படப்பாடல் ஞாபகம் வந்தது. பைத்தியக்காரன் வேடத்தில் வாத்தியார் பாடும் பாடல்.

முகத்தில் முறுவலுடன், கண்களில் சலனமில்லாமல், வலக்கையை கன்னத்தில் வைத்தபடி, ஞானசாரர் கண்களை நேரடியாக பார்த்தபடி, நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.



சலனமில்லாத என் முகத்தை பார்த்த பக்கத்து ராவணபல தேரர், ஞானசாரரிடம் "நீங்கள் சொல்வது அமைச்சருக்கு புரிகிறதோ, என்னவோ. மகாவம்ச சரித்திரத்தை அவர் அறிந்திருக்கிறாரோ தெரியவில்லை" என்று கிசு கிசுத்தார்.

அவரது சிங்கள கிசு கிசு கூட எனக்கு விளங்கியது. எனக்கு அது விளங்கியது என அவர்களுக்கு விளங்கவில்லை. இதான் கோளாறு.

ஞானசாரர் என்னை பார்த்து, "சரி, என்னிடம் ஒரு கேள்வி இருக்கின்றது. அதற்கு பதில் சொல்லுங்கள்" என்றார்.

"இந்நாடு ஒரு சிங்கள பௌத்த நாடு என்று நான் கூறுகின்றேன். ஏற்றுக்கொள்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இந்நாடு ஒரு சிங்கள, தமிழ், முஸ்லீம் நாடு. இந்நாடு ஒரு பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் நாடு" என்று நான் பதில் சொன்னேன்.

சாரருக்கு கோபம் வந்துவிட்டது. "எஹெம நெமெய் யோதயா" என்று சிங்களத்தில் சொன்னார். அதன் அர்த்தம் "அப்படி இல்லை அரக்கனே" என்பதாகும்.

"இது சிங்கள பௌத்த நாடு நீங்கள் வந்தேறு குடிகள். சொந்தம் கொண்டாட முடியாது".

நான் "நில்லுங்கள், ஸ்வாமி. உங்க மகாவம்சத்தில் இருந்து ஒரு வி'யத்தை சொல்லவா?" என்று ஞானசாரருக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த ராவணபலய தேரரை பாத்துக்கொண்டே கேட்டேன். இவர்தானே எனக்கு மகாவம்சம் தெரியுமா என சந்தேகத்தை கிளப்பியவர்.

"மகாவம்சத்தில் விஜய இளவரசன் கிழக்கு இந்தியாவில் இருந்து தனது நண்பர்களுடன் இலங்கை தீவின் மேற்கு கரையிலே வந்து தரையிறங்கினான் என்று மகாவம்சத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது தானே?" என்றேன்.

நான் என்ன சொல்ல வருகின்றேன் என்பதை புரிந்துகொள்ளாமலே ஞானசாரர் "ஆம், ஆம்" என்று தலை ஆட்டினார்.

"விஜயன், இங்கு இருந்த ஆதிவாசி அரசியான குவேனியை மணந்துக்கொண்டான். பிள்ளைகளும் பெற்றான். பின்பு குவேனியை விரட்டிவிட்டான். தனக்கும், தனது நண்பர்களுக்கும் பெண் தேடி, தென் இந்தியாவிற்கு தூதனுப்பி, பாண்டிய நாட்டில் இருந்து இளவரசியையும், பெண்களையும் அழைத்து வந்தான். இளவரசியை தான் மணந்தான். அந்த பெண்களை தனது நண்பர்களை மணக்கச்செய்தான். இங்கிருந்து தானே சிங்கள இனம் உருவாகியது? அப்படி தானே மகாவம்சம் கூறுகிறது?" என்று அமைதியாக சுத்த சிங்களத்தில், ஒரு கேள்வி குறியுடன் கூறி முடித்தேன்.

உரையாடலின் விபரீத போக்கை இப்போ புரிந்து கொண்ட ஞானசாரர் தலையை குனிந்து ஒரு பென்சிலை எடுத்து மேசையிலே தட்டியபடி "இல்லை, இல்லை அது பொய்" என்றார்.



(தொடர்ச்சி 14 பக்கம்)

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 13)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

## கேலிக்கூத்தாகும் மே தின கூட்டங்கள்



**வா**ழ்க்கையில் சில விஷயங்களை காணாமலும் கேட்காமலும் இருப்பது பல வகையில் மேலென்றே தோன்றுகிறது. ஆனால் நமது வாழ்க்கையில் தொலைக்காட்சியும் சமூக ஊடகங்களும் செலுத்தும் ஆதிக்க காலத்தில், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சில அவலங்களை காணவோ கேட்கவோ வேண்டிய துர்பாக்கிய நிலை உள்ளது என்று தான் கூற வேண்டும். இதைத் தான் "விதி வலியது" என்று கூறுவார்களா என்று தெரியவில்லை. அப்படியான சம்பவங்கள் எரிச்சலையும், நமது மன உளைச்சலையும் ஏற்படுத்துவதற்கு அப்பாற்பட்டு, அந்த நிகழ்வு அல்லது சம்பவத்தின் முக்கியத்துவத்தை குறைத்து களங்கப்படுத்துகிறது.

அப்படியான அவலங்களில் ஒன்று தான் ஆண்டு தோறும் இலங்கையில் நடைபெறும் மே தின கூட்டங்கள். இந்தக் கூட்டங்களை நடத்துபவர்களுக்கு "சிகோகோவில் சிந்திய ரத்தம்" பற்றி என்ன தெரியும், அல்லது எந்தளவிற்கு புரிதல் உள்ளது என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யவும் அதை பேணிக் காத்திடவும், தொழிற்சங்கம் அமைத்து தொழிலாளிகள் தமது பணி மற்றும் ஊதியத்தை நிலைநிறுத்திக்கொள்ளவும் 1866ஆம் ஆண்டு சிகாகோ நகரின் ஹேமார்க்கெட்டில் முன்னெடுத்த போராட்டத்தில் வெடித்த கலவரமும் அதில் ஏழு பொலிசார் மற்றும் குறைந்தது எட்டு சிவிலியன்கள் கொல்லப்பட்டதும் வரலாறு.

ஆனால் நமது தற்குறிகளுக்கு உள்நாட்டு வரலாறே ஒழுங்காகத் தெரியாது, அப்போது அமெரிக்காவில் 157 ஆண்டுகளிற்கு முன்னர் நடைபெற்ற வரலாறு தெரிந்திருக்கும் என்று நினைப்பது பேதமையாகும்.

அப்படி தொழிலாளர்களின் உரிமைகள், நலன்கள், உத்தரவாதங்கள், ஊதியங்கள் போன்றவற்றையெல்லாம் கம்யூனிஸ்டுகளே காற்றில் பறக்கவிட்டு பல காலங்கள் ஆகிவிட்டன.

ஆனால், ஆசியாவின் அதிசயமான இலங்கையில், நடப்பதெல்லாம் அதிசயமே. அதிலொன்று தான் இந்த மே தின ஊர்வலம், கூட்டம் என்ற பெயரில் அரசியல் கட்சிகள் நடத்தும் கேலிக்கூத்துக்கள்.



இலங்கையில் இந்தாண்டும் இந்த மே தின கூத்துக்கள் கோலாகலமாக நடந்து முடிந்திருக்கின்றன.

கடந்த ஆண்டுகளில் அடக்கி வாசிக்கப்பட்ட மே தினம் இந்த தடைவை "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பது போல ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் பழைய காக்காய்களோடும் கசிப்பு வியாபாரிகளின் வீராவேசப் பேச்சுகளோடும் மீண்டும் "பழைய குருடி கதவைத்திறவடி" என்று பழைய ராசாக்களின் மீள்வரவுக்குக் கட்டியம் கூறும் வண்ணம் மிகுந்த பொருட் செலவில் கட்டமைக்கப்பட்ட ஒரு சம்பவமாகப் பயன்படுத்தபட்டிருக்கின்றது.

அரகலய காலத்தில் துண்டைக்கானோம் துணியைக்காணோம் என்று தலைதெறிக்க ஓடி ஒளிந்திருந்த கூட்டம் விக்கிரம ராசாவுக்கு புண்ணியம் கிடைக்க பயமின்றி மீண்டும் வெளியே வந்து மக்களுக்கு டாட்டா காட்டுகிறது. உனக்கும் பெப்பே உங்க அப்பனுக்கும் பெப்பே என்று டாட்டா காட்டுகிறது. சனங்கள் கூட்டிவரப்பட்டு கூட்டங்களில் இருக்கவைக்கப்பட்டுள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது. பார்வையாளர் கைகள் மட்டும் ஏதோ தூக்கி அசைகின்றன. பெண்களில் ஒன்று இரண்டு ஜயவேவா கோஷம் போடுகிறது. ஏதோ ஒன்றின் சாயல் ஏதோ ஒன்றைத் தேடுகிற கலவரத்தைக் காட்டுகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களில் மனிதத் தலைகள் மட்டுமே தெரிகின்றன. அவ்வளவு கூட்டம். அவர்கள் நல்லாப் பேசுவார்கள் புள்ளிவிபரங்களை அள்ளி வீசுவார்கள் கழுத்து நரம்பு புடைக்க உணர்ச்சி பூர்வமாக மக்கள் மனங்களுக்கு அருகில் சென்று பேசுவார்கள் அதனால் அவர்களின் கூட்டங்களுக்கு தாராளமாக ஆட்கள் வருவார்கள். ஆனால் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்கிறபோது மட்டும் எல்லாம் தலைகீழாக மாறும். மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு பழைய ஒட்டுண்ணிகளுக்கே விரலில் மையைப்பூசி சீட்டில் புள்ளடிபோட்டு வாக்களிப்பார்கள் என்கிறார் ஒரு பழுத்த அனுபவசாலி.

இவ்வளவு கோலாகலமாக விழாக் கொண்டாடுகிறார்களே உண்மையில் தொழிலாளர் தினம் என்பதை தொழிலாளர்களோடு தொழிலாளர்களுக்காக் கொண்டாடுகிறார்களா என்று பார்த்தால் ஏமாற்றமும் கேள்விக்குறியுமே மிஞ்சுகிறது.

மொட்டுக்கட்சி தங்கள் வீரபிரதாபங்களை எடுத்துச் சொல்வதிலும் மற்றவர்களைக் குறை சொல்வதிலுமே அதிக கவனம் செலுத்தியது. சவால்களை முறியடித்து குறிக்கோள்களை அடைவோம் என்பதே அவர்களின் மகுடவாசகம். புளுத்துப்போன தங்களின் அரசியல் வாழ்க்கையில் தாம் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து மறுபடி ஆட்சியை கைப்பற்றும் குறிக்கோளை அடைவதே அவர்களின் நோக்கமே ஒழிய பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொண்டு அவர்களின் எதிர்பார்புகளை பூர்த்தி செய்வதல்ல. மஹிந்த மாத்தையா வீதியில் சாரத்தை வரிந்துகட்டி கொண்டு தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்த காலம் ஒன்று உண்டு.



பிரேமதாசாவின் கட்சியானது நாட்டின் போராட்டம் தொழில் புரியும் இடத்தில் இருந்தே முகிழ்கிறது என்ற வாசகத்தைக் கொண்டிருந்தது. ஆசையாகவும் இருக்கிறது பயமாகவும் இருக்கிறது போல மக்கள் போராட்டம் நடத்தவேண்டும் என்று செய்தி சொல்லப்படுகிறது. மக்கள் விடுதலை முன்னணியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி நாட்டின் சொத்துகளை விற்கும் கொடுங்கோல் அரசாங்கத்தைத் தோற்கடித்து மக்களுக்கு சிநேகபூர்வமான அரசாங்கத்தை கட்டியெழுப்புவோம் என்று கூறுகிறது.

இவர்கள் கூட அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என்கிறார்களே ஒழிய தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு போன்ற தொழிலாளர் தினத்திலே கவனம் செலுத்தவேண்டிய விடயங்களையெல்லாம் விட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் மேடையிலே பேசவேண்டியவற்றை தொழிலாளர் தினத்திலே வந்து பேசுகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் அதிபருமாகிய விக்கிரமசிங்க சற்று வித்தியாசமாக 2048இல் நாடு அபிவிருத்தியடைந்து விடும் என கட்டியக் கூறு வெறும் கையில் முழம் போட்டுள்ளார். அதுவரை இப்போது இருப்பவர்களில் எத்தனைபேர் உயிருடன் இருப்பார்களோ தெரியாது. அவர் இருப்பாரா என்பது கூட உத்தரவாதமில்லை. ஆனால், தொழிலாளர்களைப் பொறுமையாக அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்கிறார். தொழிலாளர்களைப் பொறுத்தவரை இன்று அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எதிர்பார்க்கிறார்களே ஒழிய 2048இல் விக்கிமசிங்க சொல்லுகிற கனவுலகில் காணப்படக்கூடிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளையல்ல. மக்கள் எதிர்நோக்கும் சமகாலப்பிரச்சினைகளுக்கு நீண்டகாலத்தில் தீரவுகாண்பதாகக் கூறும் விக்கிரமசிங்க போன்ற ஆட்களுக்கு 1936இல் வெளியாகிய பொதுக் கோட்பாடு (the General Theory) என அழைக்கப்படும் நூலாசிரியலும் ராஜதந்திரியும் புகழ்பூத்த பொருளியல் அறிஞருமான ஜோன் மோனார்ட் கெயின்ஸ் (Lord JohnMaynard Keynes) என்னும் பிரித்தானியப்பிரபு கூறிய அருமையான ஒரு வாசகம் இன்றும் இலங்கைக்குப் பொருந்துகிறது.

அவர் எல்லாப்பிரச்சினைகளுக்கும் நீண்டகாலத்தில் தீர்வுவரும் என்று சொல்லித்திரிபவர்களை நீண்டகாலத்தில் நாம் அனைவரும் இறந்துவிடுவோம் (in the long run we are all dead) என்னும் பிரபலமான வாசகத்தைக் கூறினார். இப்போதிருக்கும் பிரச்சினைகளுக்கு மக்கள் இறந்த பின்னரா தீர்வு காணப்போகிறீர்கள் என்பதே அவர் எழுப்பும் வினாவாகும். குறுகிய காலத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக அரசாங்கம் தீர்வு காண வேண்டும். அதற்காகத்தான் மக்கள் ஆட்சியாளர்களை பதவியில் இருத்தியிருக்கிறார்கள். ரணிலைப் பொறுத்தவரை மக்கள் அவரை ஆட்சியில் இருத்தவில்லை. அவரைத் தெரிவு செய்யவுமில்லை. அவர் அரசியலமைப்புச் சட்டரீதியாக மட்டுமே பதவிக்கு வந்துள்ளார். ஆகவே மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய உடனடி கவலைகள் இல்லாதிருக்கலாம். ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது எரியும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வேண்டும். அவர்கள் மத்தியில் போசாக்கின்மை அதிகரித்திருக்கிறது. அவர்களது குழந்தைகள் பாடசாலைகளில் மயங்கி விழுகிறார்கள். சாப்பாடு இல்லாத படியால் பலர் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கிறார்கள். உழைப்பாளிகளின் குழந்தைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களைப் பெற முடியவில்லை. அவை யானை விலையில் விற்கின்றன. எடுக்கிற சம்பளம் உணவுத்தேவைக்கே போதுமானதாக இல்லை. தொழிலாளர்கள் எதிர்காலத்தில் ஒரு செல்வந்த வாழக்கையை வாழக்கேட்கவில்லை இப்போதிருக்கிற வாழ்க்கையை மரியாதையாக வாழக்கூடிய குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்தை உறுதிப்படுத்துமாறு கேட்கிறார்கள் இப்போதுது அவர்கள் உண்பதற்கு பாண் கேட்கிறார்கள் நீங்கள் 2048ல் கேக் தருவதாகச் சொல்கிறீர்கள். கடந்த இருவருடங்களாக பாதிக்கபட்ட உழைக்கும் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் கிடைக்கவில்லை. அதற்கு வழி இல்லை என்கிறீர்கள் ஆனால் அரசு பதவிகளில் இருந்து அட்சி நடத்துவோர் தமது எந்தச் செலவை அரசாங்கத்தில் இருந்து பெறுவதைக் குறைத்துக் கொண்டீர்கள்? வறுமையில் வாடுவதாகக் கருதப்படும் 39 இலட்சம் பேருக்கு சர்வதேச உதவியுடன் உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக பாதிக்கபட்டவர்களுக்கு இன்னும் ஆறு மாதங்களின் பின்தான் அந்த அற்ப உதவி வரும் என்றால் அதுவரை அவர்கயின் நிலை என்ன? இந்த உதவித்தொகை பெறவுள்ளோரில் தொழில் புரிவோர் உள்ளடக்கபடுவார்களா, அந்த உதவியை பெறுவதில் நாட்டில் மிகவறிய நிலையில் உள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடக்கப்படுவாரா? உழைக்கும் வர்க்கத்தினரில் ஏற்கெனவே கடன்பட்டு இப்போது அறவிடப்படும் வரி காரணமாக கடனை மீளச் செலுத்தாமல் தவிக்கும் தொழிலாளர்களுக்கு என்ன தீர்வு வழங்கினீர்கள்? நாடு வங்குரோத்து அடைந்தவுடன் பெற்றகடனை மீளச் செலுத்த முடியாமல் கடன் மறுசீரமைப்புச் செய்ய அவசரப்படும் நீங்கள் இதே கடன் சுமையால் பெற்ற கடனுக்கும் சேர்த்து அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஊழியர்களின் நிலை பற்றிச் சற்றேனும் சிந்தித்தீர்களா? அரசாங்கம் பெற்ற கடனில் ஒரு பகுதியைக் குறைக்க வேண்டும் என்று கருதும் அரசாங்கம் அதே அடிப்படையில் தொழிலாளர்கள் வரி அதிகரிப்புக்கும் பணவீக்க அதிகரிப்புக்கும் முன்னர் பெற்ற கடனில் ஒரு பகுதியை ஏன் குறைக்கக் கூடாது? அரச கடன்களுக்கு நியாயமாகப்படும் அதே விதி ஏன் ஊழியர்கள் பெற்ற கடன்களுக்கு ஏற்புடையதாகக் கூடாது?

இது போன்று தொழிலாளர்களின் எரிகிற பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பற்றியோ குறைந்த பட்சம் இந்தப்பிரச்சினைகள் இருப்பது பற்றியோ எந்தஒரு மே தின கூட்டத்திலும் பேசப்பட்டதாகத் தெரியவில்லை. மே தினம் என்பதே தொழிலாளர் உரிமைகளை போராடிப் பெற்ற தினத்தை நினைவுபடுத்தும் நிகழ்வு. அந்த நிகழ்வில் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பற்றி எதுவித கரிசனையுமின்றி வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி 2048 வரை பொறுத்திருக்குமாறு கூறுகிறார் ஒருவர். தற்காலிகமாகத்தான் பதவிகளை விட்டுப்போயிருக்கிறோம் விரைவில் போன மாதிரியே திரும்பி வருவோம் என்கிறார் இன்னொருவர். அரசாங்கம் நாட்டை விற்பனை செய்யுது அதை விரட்டி அடித்து பதவிக்கு வருவோம் என்கிறார் மற்றொருவர் ஆக தொழிலாளர்களின் எரிகிற பிரச்சினைகளுக்கு எவரிடமும் உரிய தீர்வுகள் இல்லை. தெற்கே எதற்கு என்றே தெரியாமல் கூட்டமாவது கூடியது, ஆனால் வடக்கே இடம்பெற்ற கூத்தைப் பற்றி சொல்லாமல் இருப்பதே மேல்.

தேவுடா தேவுடா எங்கபக்கம் கொஞ்சம் பாருடா என்று மேலே உள்ளவனைக் கேட்பதைத் தவிர வேறு நாதியுமில்லை கதியுமில்லை. சிகாகோவில் சிந்திய ரத்தம் இலங்கையில் சிந்தப்படக் கூடாது.-



Toronto சிட்டி கவுன்சிலர்



PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

(12 பக்கத் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

“எது பொய்? நான் சொன்ன விஷயம் பொய்யா? மகாவம்சமே பொய்யா?”

“இல்லை, இல்லை. இந்த வி'யம் பொய்யானது”

உற்சாகம் இழந்த குரலில் ஞானசாரர் பதில் சொன்னார்.

நான் உற்சாகமாக திருப்பி அடித்தேன்.

“அது எப்படி தேரரே சில விஷயங்கள் சரி என்கிறீர். சில விஷயங்கள் பொய் என்கிறீர். இதெல்லாம் சேர்ந்தது தானே மகாவம்சம்”.

“இந்நாட்டில் வாழும் எல்லோருமே வெளியில் இருந்து வந்தோம். வந்த காலக்கட்டமும், வந்த முறையும் வெவ்வேறு. இந்நாட்டிலே சிங்கள மொழி பேசுகிறவர்களும், பௌத்த மதம் கடைப்பிடிப்பவர்களும் எண்ணிக்கையிலே பெரும்பான்மை. அதிலே எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால், நாம் அனைவரும் ஒன்று சேர்த்தால்தான் முழு இலங்கை உருவாகிறது”.

“75 என்பது 100 அல்லவே! அதனுடன் 25 சேர்ந்தால்தானே 100? இலங்கை என்பது 100 ஆகும்! அது 75 அல்ல!” என்ற எனது பிரபல கூற்றோடு கூறி முடித்தேன்.

உற்சாகமிழந்த ஞானசாரர் உரையாடலை வேறுபுறம் திருப்பி, திடீரென முஸ்லிம்களுக்கு எதிராக பேசத்தொடங்கி சிங்கள பௌத்தர்களும், தமிழ் இந்துக்களும் கூட்டு சேர்ந்து, முஸ்லிம் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும் என்று சொன்னார்.

உங்களுக்கு முஸ்லிம்களுடன் இப்பொழுது என்ன பிரச்சினை என்று கேட்டேன்.

ஞானசார தேரர் “முஸ்லிம்களின் குற்றங்கள்” என்று கூறி பெரிய பட்டியலை தனது பையில் இருந்து எடுத்த ஒரு கடதாசியை படித்தபடி கூறினார்.

“பிரபாகரனை கொன்றது பிழை. பிரபாகரன் இருந்திருக்க வேண்டும்.” என்றார்.

“அதென்ன திடீரென்று பிரபாகரன் மீது உங்களுக்கு பாசம்?”.

“பிரபாகரன் இருந்திருப்பாரேயானால் முஸ்லிம்கள் தலைவிரித்து ஆடியிருக்க மாட்டார்கள். முஸ்லீம் அரசியல்வாதிகள் வாயை மூடிக்கொண்டு இருந்திருப்பார்கள்.” என்று கூறினார்.

“பிரபாகரன் பௌத்த சின்னங்களை அழிக்கலை. அவற்றை பாதுகாத்தார். ஆனால் இன்று முஸ்லிம்கள் கிழக்கில் பௌத்த சின்னங்களை அழித்து பௌத்த காணிகளை அபகரிக்கிறார்கள்”, என்றார்.

தமிழர்களுக்கு எதிரான “சிங்கள-முஸ்லீம் கூட்டிலும்”, முஸ்லிம்களுக்கு எதிரான “தமிழ்-சிங்கள கூட்டிலும்” அல்லது சிங்களவர்களுக்கு எதிரான “தமிழ்-முஸ்லீம் கூட்டிலும்”, எனக்கு நம்பிக்கையில்லை. இதெல்லாம் பருவகால கூட்டுகள். பருவம் முடிந்தவுடன் கூட்டும் முடிந்துவிடும். இளவேனில்காலம் முடிந்தவுடன் முதுவேனில்காலம் வந்துவிடும். கார்காலம் முடிந்து கூதிர்காலம் வந்துவிடும். ஆகவே இவரது பலவீன வாதம் என்னை கவரவில்லை.

என்னை வீழ்த்த வந்த அவர் மனந்தளர்ந்தார் என்பதை அங்கு அமர்ந்திருந்த எனது அமைச்சின் செயலாளர் முதற்கொண்ட சிங்கள அதிகாரிகளின் முகங்களை பார்த்தாலே தெரிந்தது.

“முஸ்லீம் அரசியல்வாதிகளை பற்றி எழுத்து மூலமான குற்றச்சாட்டு பட்டியலை இரண்டு தினங்களில் அனுப்பி வைக்கிறேன்” என்று சொல்லிவிட்டு ஞானசாரர் போய் விட்டார்.

பட்டியல் எதுவும் எனக்கு அவர் அனுப்பவில்லை. அனுப்ப மாட்டார் என எனக்கு தெரியும். இவர் வந்து போனபிறகு, என் அமைச்சின் சிங்கள அதிகாரிகள் என்னை, அதற்கு முன்னரை விட, அதிகம் மதிக்க ஆரம்பித்தார்கள் என எனக்கு புரிந்தது.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2023

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினைந்தாவது முறையாக நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் இருபத்தேழாம் நாள் (ஆங்கிலம்10-05-2023 புதன்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 19ம் நாள் ஆங்கிலம் 02-06-2023 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 03-06-2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்

**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ நீலகண்டன் அஹோரசாமி
(தமிழ்நாடு, இந்தியா)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

09-05-2023 செவ்வாய் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 10-05-2023 | புதன் | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 11-05-2023 | வியாழன் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 12-05-2023 | வெள்ளி | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 13-05-2023 | சனி | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 14-05-2023 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 15-05-2023 | திங்கள் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 16-05-2023 | செவ்வாய் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. பகீரதன் துஷ்யந்தா குடும்பம் லக்சி சுபபர் மார்க்கட் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 17-05-2023 | புதன் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 18-05-2023 | வியாழன் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூஷிக வாகனம் |
| 10 | 19-05-2023 | வெள்ளி | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 20-05-2023 | சனி | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 21-05-2023 | ஞாயிறு | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 22-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 23-05-2023 | செவ்வாய் | திரு பத்மநாதன் குடும்பம் பிரம்ரன் - கனடா | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 24-05-2023 | புதன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் காங்கேசன் துறை | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 25-05-2023 | வியாழன் | திரு. தவராசா சிவசோதி குடும்பம் -அனலைதீவு | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 26-05-2023 | வெள்ளி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 27-05-2023 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | நர்த்தன வடிவம் |
| 19 | 28-05-2023 | ஞாயிறு | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 29-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 30-05-2023 | செவ்வாய் | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. பொன்னம்பலம் சர்வேஸ்வரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 31-05-2023 | புதன் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 01-06-2023 | வியாழன் | திரு.சுப்பையா கிருஷ்ணபகவான் குடும்பம் -கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 02-06-2023 | வெள்ளி | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 03-06-2023 | சனி | தீர்த்தத் திருவிழா - ஓர் அன்பர் | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 04-06-2023 | ஞாயிறு | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 09-06-2023 | வெள்ளி | சிவகுமார் குடும்பம் - இராஜேஸ்வரன் குடும்பம் A1 Florist - Brampton | | மாலை: வைரவர் மடை |
| 28 | 10-06-2023 | சனி | திருவருள் கனகசபை குடும்பம் - அனலைதீவு | | பூங்காவனம் |

**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**


**திருவிழாக்கால நிகழ்ச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

**தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்**
குருமூர்த்தி ரெங்கநாதன் - சிவவடிவேல் முனுசாமி
செந்தில்நாதன் ஆனந்தன் - பழனிவேல் நாகராஜன்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - தேவேந்திரன் - ரெங்கராஜன்
மணிகண்டன் மாரிமுத்து - முனிராஜ் முனிரத்தினம்

**விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்**
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
SRI VARASITHTHI VINAYAGAR HINDU TEMPLE OF TORONTO
LET LOVE BIND US ALL TOGETHER
இணைந்து வழங்கும்
மேமாதம் 13 சனிக்கிழமை
மாலை 3 மணிக்கு
17ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
ஆறுமுக நாவலர் அரங்கில்
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.


கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
Fashion WORLD INC
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84 Markham, ON L3S 0B5
குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA
416.728.5772
Thana Manickavasagar
Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham 905.471.4447
Scarborough 416.285.4447
DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸரீஸ்
647.702.2159
TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke
647-352-2229
Scarborough
416.757.9111
the co-operators
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த
கட்டணத்தில் பெறுவதன் மூலம்
மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel
Caaveri Enterprise
99 Select Ave,
Scarborough, ON M1V 4A8
(416) 412-1701
MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca
பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 ✧ 905.205.0011
ERAA SUPER MARKET



திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## றிச்மண்ட்ஹில் அருள்மிகு வரசித்தி விநாயகர்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

## சோபகிருது வருஷம் 2023

பேரன்பு மிக்க அடியார்களே!


அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகரும், கணங்களுக்கெல்லாம் அதிபதியான கணாதிபதியுமானவரும், சகல விக்கினங்களை எல்லாம் தீர்த்து பக்தர்கள் வேண்டும் வரங்களையெல்லாம் தந்தருள்பவரும், இந்திரகண்டம் என்று போற்றப்படுகின்ற அமெரிக்கக் கண்டத்தின் கனடா நாட்டில் றிச்மண்ட்ஹில் 'செல்வமலையில்' கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கின்ற அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானுக்கு

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசி 06ம் நாள் (20.05.2023) சனிக்கிழமை ரோகினி நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய பகல் 11:30 மணி முதல் 12:00 மணிவரையுள்ள சுபநேரத்தில் கொடியேற்ற வைபவம் நடைபெற்று தொடர்ந்து 15 தினங்கள் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலின்படி காலை, மாலை என இருவேளைகளிலும் நவகலச அபிஷேகம், யாகபூஜை, ஸ்தம்பபூஜை, வசந்தமண்டப பூஜையுடன் சர்வாலங்காரத்துடன் வேதம், திருமுறை, நாதஸ்வர தவில் வாத்ய சகிதம் விநாயகப் பெருமான் உள்வீதியுலா பவனி வந்து அருட்காட்சி தந்தருள்வார். அன்பர்கள், அடியார்கள் அனைவரும் காலை, மாலை நடைபெறும் உற்சவ விழாக்காலங்களில் வருகை தந்து, தரிசித்து விநாயகப் பெருமானின் பேரருளைப் பெற்று பேரானந்த பெருவாழ்வு அடைய வேண்டுகின்றோம்.

19.05.2023 வெள்ளி காலை 8:00 மணி அனுக்ஞை, கணபதி ஹோமம் மாலை 5:00 மணி கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம்

| திகதி | நாள் | திருவிழா | காலை உபயகாரர் | மாலை உபயகாரர் | வாகனம் |
|---|---|---|---|---|---|
| 19.05.2023 | வெள்ளி | பூர்வாங்கம் | சி. கனேஸ்வரன் குடும்பம் (கணபதி ஹோமம்) | சி. கனேஸ்வரன் குடும்பம் (வாஸ்து சாந்தி) | |
| 20.05.2023 | சனி | 1ம்திருவிழா | ந. பரந்தாமன் குடும்பம் | R. K. மூர்த்தி குடும்பம் | மூஷிகவாகனம் |
| 21.05.2023 | ஞாயிறு | 2ம்திருவிழா | சி. சிறிறங்கநாதன் குடும்பம் | சிவா பாலசிங்கம்–யத்தீந்திரா முத்தையா | ஓம்காரபிரணவசாத்துப்படி |
| 22.05.2023 | திங்கள் | 3ம்திருவிழா | குகன் கந்தையா குடும்பம் | சுப்ரமணியம் பிரேமகுமார் குடும்பம் | மூஷிகவாகனம் |
| 23.05.2023 | செவ்வாய் | 4ம்திருவிழா | நவரத்தினம் சுகந்தன், சுநேகா | சி. சற்குணசிங்கம் குடும்பம் | யானைவாகனம் |
| 24.05.2023 | புதன் | 5ம்திருவிழா | தி. சண்முகசுந்தரம் குடும்பம் | காரை களபூமி மக்கள் | இடபவாகனம் |
| 25.05.2023 | வியாழன் | 6ம்திருவிழா | பாலசுந்தரம் சத்தீஸ்குமார் குடும்பம் | பாலசுப்பிரமணியம் குடும்பம் | அன்னவாகனம் |
| 26.05.2023 | வெள்ளி | 7ம்திருவிழா | தம்பிஐயா பரமானந்தராஜா குடும்பம் | கோண்டாவில் குமரன் வி. கழகம் | மயில்வாகனம் |
| 27.05.2023 | சனி | 8ம்திருவிழா | க. சுந்தரராஜன் குடும்பம் | க. சந்திரசேகரம் குடும்பம் | நாகவாகனம் |
| 28.05.2023 | ஞாயிறு | 9ம்திருவிழா | இராசையா லோகநாதன் குடும்பம் | சுப்பிரமணியம் குடும்பம் | கைலாசவாகனம் |
| 29.05.2023 | திங்கள் | 10ம்திருவிழா | க. மகேந்திரன் குடும்பம் | சண் உதய சங்கர் குடும்பம் | மஞ்சஉற்சவம் |
| 30.05.2023 | செவ்வாய் | 11ம்திருவிழா | மாப்பாணர் நாகலிங்கம் குடும்பம் | T. விக்னராஜா குடும்பம் – (மாம்பழத் திருவிழா) | மூஷிகவாகனம் |
| 31.05.2023 | புதன் | 12ம்திருவிழா | தெல்லிப்பளை மகாஜனா ப.மா. | க.சுசானந்தன் குடும்பம் – (வேட்டைத் திருவிழா) | குதிரைவாகனம் |
| 01.06.2023 | வியாழன் | 13ம்திருவிழா | பு. விநாயகமூர்த்தி குடும்பம் | உடுப்பிட்டி மக்கள் – சப்பறம் | |
| 02.06.2023 | வெள்ளி | 14ம்திருவிழா | புங்குடுதீவு மக்கள் – தேர் | புங்குடுதீவு மக்கள் – தேரடித்திருவிழா | |
| 03.06.2023 | சனி | 15ம்திருவிழா<br>மாலை கொடியிறக்கம்<br>மௌனஉற்சவம்<br>சண்டேஸ்வரஉற்சவம்<br>ஆசார்யஉற்சவம் | கி.ஜெயநாதன் குடும்பம் – தீர்த்தம் | நவரத்தினம் சண்முகநாதன் குடும்பம் – கொடியிறக்கம் | |
| 04.06.2023 | ஞாயிறு | பூங்காவனஉற்சவம் | | தொண்டர்கள் – பூங்காவனம் | |
| 05.06.2023 | திங்கள் | வைரவர்மடை | | ரமேஸ்வரன் – வைரவர் மடை | |






**மகோற்சவ பிரதம குரு**
சர்வசாதக குருமணி
சிவஸ்ரீ V. சிவசுதன் குருக்கள்

**ஆலய குருமார்கள்**
சிவஸ்ரீ K. சிவசங்கர குருக்கள்
சிவஸ்ரீ V. சிவமணிக் குருக்கள்
சிவஸ்ரீ S. ரதீஷன் குருக்கள்
சிவஸ்ரீ N. சிவராமகிருஷ்ண சர்மா

**ஆலய பட்டாச்சாரிகள்**
ஸ்ரீமான் P. கோபால் பட்டர்
ஸ்ரீமான் K. கோவிந்த பட்டர்

**பூ மாலைகள்**
BABU Florist
பாபு பூக்கடை – பாபு

**ஆலய ஸ்தபதியார்**
விஸ்வபிரம்மஸ்ரீ
சரவணமுத்து ஜெயராஜா



நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
Dr. ஆ. முருகதாஸ்

குறிப்பு: அடியார்கள் உற்சவ விழாகாலங்களில் அபிஷேக திரவியங்கள், பூக்கள், பழங்கள் முதலியனவற்றை எம்பெருமானுக்கு சமர்ப்பித்து குறிப்பிட்ட நேரங்களில் நடைபெறும் அபிஷேகம், பூஜை, உற்சவங்களில் குடும்ப சகிதம் கலந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம். கற்பூரச்சட்டி எடுக்க விரும்பும் அடியார்கள் வெளிவீதியில் மட்டும் ஏற்றவும். ஆலய நிர்வாக சபையினர்.


தயவுசெய்து வாகனங்களை Tim Hortons, Shoppers Drug Mart தரிப்பிடங்களில் நிறுத்த வேண்டாம். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஆலய நிர்வாகம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது என்பதை அறியத் தருகின்றோம்.

**றிச்மண்ட்ஹில் ஆலய புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் - ஜூன் 30 ம் திகதி, வெள்ளிக்கிழமை**

Quality Printing 416.281.6554

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
17 - 01 - 1940



மறைவு:
05 - 05 - 2018

## அமரர். வேலுப்பிள்ளை சிவபாதம் [ஆறுமுகம்]

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் மேற்கை வதிவிடமாகவும், ஜெர்மனி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வேலுப்பிள்ளை சிவபாதம் அவர்களின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி.

அன்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் சிகரமாகவும்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எங்கள் குலதெய்வமே.!
ஆண்டு ஐந்து கரைந்தோடிய போதும்
உம் நினைவு எம்மைவிட்டு அகலவில்லை!
வானத்தை விட்டு நிலவையும்
வாசத்தை விட்டு மலரையும்
பிரிக்க முடியாது - அதுபோல
உங்கள் நினைவுகளை - எங்கள்
நெஞ்சை விட்டும் விலக்கமுடியாது !
எங்கள் உயிர் மூச்சில்
நீங்களும் எம்முடன்
இன்னமும் வாழ்கிறீர்கள்!எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வத்தின் பொற்பாதத்தில்
மலர்தூவி மலர் அஞ்சலி செய்கின்றோம்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தகவல்: குடும்பத்தினர் **416-878-6775 / 905-640-1823**

# தையிட்டி விகாரையும் அரசியல்வாதிகளின் திடீர் போராட்டமும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**




புத்த பகவான் இலங்கையின் தெற்கே அமைதியில்லை என்பதால் வட பகுதிக்கு வந்தாரா அல்லது வடக்கே நிலவும் அமைதியை குலைக்க புத்த பகவானை ஆராதிப்பதாகக் கூறும் பிக்குமார் கொண்டு வந்தனரா என்கிற கேள்வி வவுனியாவிற்கு வடக்கேயுள்ள மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக எழுந்துள்ளது. இதற்கு காரணம் புத்த பகவானின் திருவுருவச் சிலைகள் வட மாகாணத்தில் சமீபத்தில் அதிகரித்துள்ளதே. அவர் மீது மக்கள் வைத்துள்ள பக்தி, மரியாதை, அபிமானம், பற்று என்பதற்கெல்லம் அப்பாற்பட்டு, சமீப காலத்தில் நடைபெறும் சம்பவங்கள் அதற்கு எதிர்மறையான எண்ணங்களையே ஏற்படுத்துகின்றன என்று வட மாகாண மக்கள் அன்றாடம் அங்கலாய்க்கின்றனர்.

இந்த எதிர்மறையான சிந்தனை தோன்றுவதற்கு காரணமே வட மாகாணத்தில் ஆங்காங்கே புத்தரின் சிலைகள் தீடீரென தோன்றுவதே காரணமாக பேசப்படுகிறது. அதுவும் பிக்குமார் இராணுவத்தினர் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன் விகாரைகள் நிறுவப்படுவதால், போரினால் பாதிக்கப்பட தமிழ் மக்கள் மன உளைச்சலும், விசனமும் அடைந்துள்ளனர். என்பது பலருடன் உரையாடிய போது அறிய முடிந்தது. மிழ் அரசியல் கட்சிகள் இதை வைத்து அரசியல் செய்கின்றன என்கிற விமர்சனமும் காதில் விழாமல் இல்லை.

அண்மையில் தையிட்டியில் அரங்கேறிய சம்பவங்கள் இதை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டம் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் தையிட்டி கிராமத்தில் உள்ள கலைவாணி வீதியில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பாக அரசியல் கட்சிகள் மேற்கொண்ட நடவடிக்கைதான் என்ன என்ற ஆதங்கத்தின் மத்தியிலேயே இந்தக் கேள்வியும் எழுகின்றது.


ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

இப்படிக்கு – விசுவாசமுள்ள

தையிட்டி கிராமத்தில் கட்டப்படும் விகாரையொன்று இப்போது பெரும் பேசுபொருளாகியுள்ளது.

யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டம் ஜே.250 கிராம சேவகர் பிரிவான தையிட்டி கிராமத்தில் ஏழரைப் பரப்பு காணி ஒன்றை நயினாதீவு நாக விகாரையின் பெயரில் அறுதி உறுதியில் உரித்தான நிலமாக உள்ளபோதும் தற்போதைய விகாரையானது நயினாதீவு விகாரைக்கு உரித்தான இந்த ஏழரைப் பரப்பு நிலத்தில் அமைக்கப்படவில்லை என்பதோடு இவை அனைத்துமே 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 15ஆம் திகதி விரட்டப்பட்ட அப்பாவி மக்களின் நிலத்தில், அந்த நில உரிமையாளர்களின் எந்தவிதமான ஒப்புதலும் இன்றியே அமைக்கப்பட்டது.

இவ்வாறு தையிட்டியில் இதுவரை விடுவிக்கப்படாத நிலப்பகுதிக்குள் இந்த விகாரை உள்ளது என்பதும் உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

கலைவானி வீதியை முகப்பாகக்கொண்டுள்ள - நாக விகாரைக்கு உரித்தான நிலத்திற்கு அப்பால் - "முடத்தி கலட்டி" என்னும் 3431 இலக்க உறுதியின் பிரகாரம் 21 மற்றும் 9 பரப்புக் காணியும், 4383 இலக்க14 பரப்புக் காணியும், கந்தவனம் தம்பையா என்னும் பெயரில் 4118 இலக்க உறுதியில் 9 பரப்புக் காணிகளும் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பு எழுதிய அறுதி உறுதிகள் உள்ளன.

இதேபோன்று ஆறுமுகம் பத்மநாதனிற்கு 2881 இலக்க 1972ஆம் ஆண்டு உறுதியின் பிரகாரம் 8 பரப்பும், அப்புத்துரை சிவகுமாரின் 396ஆம் இலக்க 1989-10-08ஆம் திகதிய உறுதியின் பகுதி நிலமும், அப்புத்துரை சுரேஸ்குமாரின் அதே இலக்க உறுதியின் பகுதி நிலமும் ஏனையோராக சீனியர் சிவசம்பு, பொன்னம்பலம் பூரணம், நாகரத்தினம் கங்காதரன் ஆகியோரது நிலத்துடன் மேலும் மூவரது நிலத்தையும் உள்ளடக்கிய வகையில் 8 ஏக்கர் பகுதி நிலம் இந்த இந்த விகாரையின் பெயரில் அபகரிக்கப்பட்டு 2019இல் கட்டிட பணி ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு கட்டப்படும் விகாரையானது 1990ற்கு முன்பு காங்கேசன்துறையில் இருந்த திஸ்ஸ விகாரையின் பெயரில் அமைக்கப்படுகின்றது. காங்கேசன்துறையில் காவர் வியூ கோட்டல் என அறியப்பட்ட துறைமுகத்திற்கு அருகிலேயே இது காணப்பட்டது. அப்பிரதேசம் தற்போது கடற்படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளதோடு அங்கே அந்த விகாரை இருப்பதாகவும் நம்பப்படுகின்றது.




அவ்வாறு ஏற்கனவே இருந்த விகாரையின் பெயரில் அந்த இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் புதிய விகாரைக்காக நிலம் அபகரிக்கும் தேவை ஏன் எழுந்தன என்பதெல்லாம் மர்மமான விடயமாகவே உள்ளது. தமிழரின் நிலம் படையினருக்காகவும், அபிவிருத்தி என்னும் பெயரிலும் மட்டும் அபகரிக்கப்படவில்லை. நிலமே வேண்டாம் என துறவறம் பூண்ட புத்த பெருமானின் விகாரையின் பெயரிலும் அபகரிக்கப்படுகின்றது.

உயர் பாதுகாப்பு பகுதி என்னும் பெயரில் யாழ். குடாநாட்டில் இன்னமும் படையினர் வசமுள்ள 3 ஆயிரத்து 214 ஏக்கர் நிலத்திற்குள் இந்த விகாரைக்கு 2019ஆம் ஆண்டு அடிக்கல் இட்டபோதே சர்ச்சைகள் எழுப்பப்பட்டதோடு கௌதம புத்தரின் பெயரில் அபகரிக்கும் 8 ஏக்கர் பிரதேசத்திற்குள் பவாணி வீதி என்னும் பிரதான போக்குவரத்து வீதியும் உள்ளடங்குவதாகவும் விகாரைக்கான கட்டுமான பணிகள் 18 பரப்பை தொட்டு நிற்பதாகவும் 2019ஆம் ஆண்டே கொழும்பில் அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்காவின் கவனத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஊடாக வரைபடங்களுடன் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் இந்த விடயம் ரணிலின் வழமையான பாணியில் கையாளப்பட்டு ஏமாற்றப்பட்டது. இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினரால் பிரஸ ரதாபிக்கப்பட்டது.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் யாழ். கட்டளைத் தளபதி, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் விபரங்களை சமர்ப்பித்து அப்பகுதியை விடுவிக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜாவும் கோரிக்கை விடுத்தார். இருந்தபோதும் அவை எவையும் வெற்றியளிக்கவில்லை.

விகாரை அமையும் சூழலான 8 ஏக்கர் நிலப்பகுதியினையும் உள்ளடக்கிய வகையிலான நிலத்திற்கு இதுவரை 8 உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது நிலத்தின் உறுதிகளும் பெறப்பட்டு பிரதேச செயலகம் ஊடக ஒப்படைக்கப்பட்டது.





நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்.

வழக்கிலக்கம்:- B-640/PC/23. 2023.05.04.

1. பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், பலாலி.
2. செல்வராசா கஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்.


கட்டளை

Registrar
District/Magistrate's Court
Mallakam

குறிப்பிட்ட அந்த விகாரையினை சூழ தற்போதுள்ள 18 பரப்பு காணிகளின் உரித்தாளர்கள் யாரும் இனம் காணப்படாதபோதும் கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் உறுதியோ வரைபடம்கூட இதுவரை இனம் காணமுடியாத தன்மையே நிலவுகின்றது.

இதன்காரணமாக 8 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் உள்ளடங்கும் நிலத்தில் நில உரிமையாளர்கள் சார்பில் யாரும் வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என பரிசிலிக்கப்படுகின்றது.

இதேநேரம் வலி. வடக்கு பிரதேச சபையிலே இவ்வாறு அனுமதியற்ற விகாரை, படையினரின் பிடியில் உள்ள தமிழ் மக்களிற்குச் சொந்தமான தனியாரின் காணியில் அத்துமீறி அமைக்கப்படுவதற்கு எதிராக, ஓர் கண்டணத் தீர்மானம் 2022ஆம் ஆண்டு யூலை மாதம் நிறைவேற்றப்பட்டு 2022-08-12 இல் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அந்த தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஸ்ட செயலாளர் ஒப்பமிட்டு 2022-08-30 அன்று புத்தசாசன அமைச்சின் செயலாளருக்கு அதனை அனுப்பி வைத்து ஒரு மாத காலத்தில் பதிலளிக்குமாறு கோரியதோடு அந்த விடயமும் நின்றுபோனது.


வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை.
Valikamam North Pradeshiya Sabha - Kankesanthurai

2022.08.16

ஜனாதிபதியின் செயலாளர்,
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பொதுக்கூட்டத்தில் (யூலை-2022)
நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 21.07.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தப் (யூலை) பொதுக்கூட்டத்தில் தையிட்டி தெற்கு J/250 கிராம சேவையாளர் பிரிவில் விகாரைக்குரிய காணி அல்லாமல் தனியாருக்குரிய காணியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அதனை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், விகாரைக்குரிய காணியில் சபையின் உரிய அனுமதியினைப் பெற்று விகாரை அமைக்கப்படவேண்டும் எனவும் நிறைவேற்றப்பட்ட 14/21.07.2022 ஆம் இலக்க தீர்மானம் தங்களின் உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

இந்நிலையில் திடீரெனெ விழித்துக்கொண்ட அரசியல்வா(வியா)திகள் உடனடியாக இதற்கு முடிவுகட்ட வேண்டும் அல்லது போராட்டம் வெடிக்கும் என்று சீறி எழுந்த சிங்கம் போன்று சவால் விட்டனர். இது உள்ளூர் மக்களிடம் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறெல்லாம் இடம்பெற்ற போதும் 100 அடிவரை அந்த விகாரைக்கான கட்டிடம் உயர்ந்துகொண்டே சென்றது. அதன் பணிகள் முடிக்கப்படும்வரை கண் மூடி, வாய் மூடி மௌனிகளாக இருந்தவர்கள் தற்போது மட்டும் உரக்க குரல்கொடுப்பதன் மர்மங்கள் புரியவில்லை என அப்பகுதி பொது அமைப்பு ஒன்றின் பிரதிநிதி குறிப்பிடுவதோடு அதன் காரணமாகவே நாம் இந்தப் போராட்டத்திலும் பங்குகொள்ளவில்லை என்கின்றார்.

**(தொடர்ச்சி 20 பக்கம்)**

(19 பக்கத் தொடர்ச்சி)

## தையிட்டி விகாரையும் அரசியல்வாதிகளின் திடீர் போராட்டமும்

இவ்வாறு 2020இல் கொதிநிலை கண்ட ஒரு விடயம் பின்னர் எவராலும் கண்டுகொள்ளாமல் போன நிலையில் தற்போது "கள்ளன் போனபின்பு விசுவா பொல்லை எடடா" என்னும் கதையில் உள்ளதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது இன்று போராட வந்துள்ள அரசியல்வாதிகள், அந்த விகாரையின் பின்னணியை அறியாமல், அது அமையவுள்ள காணி உரிமையாளர்களை தேடிக் கண்டுபிடிக்க எவ்விதமான முயற்சியும் மேற்கொள்ளாமல், உரிய ஆய்வுகளோ அல்லது அரச தரப்பிலிருந்து தரவுகளையோ பெறாமல், சுயலாப தேர்தல் அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்று உள்ளூர் மக்கள் வெளிப்படையாகவே கூறுவது அந்த அரசியல்வாதிகளை தவிர அனைவரின் காதுகளிலும் விழுகிறது.

இதேநேரம் குறித்த விகாரையின் முன்பாக த.தே.ம. முன்னணியினர் கவண ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அவர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை எப்படியும் தடுத்து விடவேண்டும் என்பதில் படையினர் அதிக அக்கறைகொண்டு செயல்படுவதாகவே தெரிகின்றது. இருந்தபோதும் அடுத்து கட்டமாக, பிரமுகர்கள், நில உரிமையாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன, அதற்கு அரசு கூறும் பதில் என்ன? அதன் மூலம் நீதி கிடைக்குமா இல்லை வழமை போல இராணுவ முகாம்களிற்கு வெளியே நின்று புத்த பகவானை தரிசனம் செய்துவிட்டு, கண்கள் மற்றும் வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டியது தான் என்றாலும் ஏதோ ஒரு வழியில் நீதி கிடைக்குமா என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இதே நேரம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் "இங்கே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறுகின்றது இதே மாவட்டத்தின் தையிட்டியில் அத்துமீறி அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில் மக்களைத் திரட்டிப் போராடிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை பொலிசார் தடுத்து வைப்பது போன்று வீதித் தடையை ஏற்படுத்தி உள்ளே போனால் வெளியே வர முடியாமலும் வெளியே வந்தால் உள்ளே போக முடியாமலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அந்து மீறி அமைத்த அந்த விகாரை தொடர்பான போராட்டத்திற்கு நாமும் ஆதரவு தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்கிறோம்" என்று அறிவித்த போது அதற்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், த. சித்தார்த்தன், இ. அங்கஜன் ஆகியோருடன் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் வெளியேறி தையிட்டியில் இடம்பெறும் போராட்டத்தில் பங்குகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

இனி புத்த பகவானே மீண்டும் வந்து, தனக்கு இருக்கும் விகாரைகள் போதுமானது, மேலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் மேலதிகமாக விகாரைகளை அமைத்து வழிபாட்டு இடங்களை அதிகரிக்க வேண்டாம் என்று கோரினாலும், அதற்கு ஆட்சியாளர்களும், இராணுவமும் செவி மடுக்குமா என்பது அவருக்கே வெளிச்சம்.

இதனிடையே தையிட்டி விகாரையில் வழிபாட்டிற்கோ அல்லது விகாரையில் இடம்பெறும் உற்சவத்திற்கோ எந்தவித இடையூறும் ஏற்படுத்த கூடாது. என மல்லாகம் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.


Coverall Group Inc

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Painting · Bathrooms · Kitchens · Decks · Flooring · Basements · Pot lights · Accent Walls

Contact us 416.706.8160





Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*(Continued from last week)*

During the1947 parliamentary campaign, I recollect joining a procession of ACTC supporters carrying the cycle flag and shouting slogans at the top of their voices "Down with traitor Mahadeva". The most popular slogan was "எங்கள் பலம் பொன்னம்பலம்" (Our strength is Ponnambalam") a spin on the Tamil word "பலம்'. During the campaign trail I saw A. Mahadeva, dressed in white sherwani with a walking stick in hand looking speck and clean. He was going around meeting voters canvassing and speaking in smattering Tamil. Born in an aristocratic family, he spoke in smattering Tamil. In contrast, GG Ponnambalam was an eloquent orator in Tamil. Though black in complexion, he wore silk verti, salvai and national shirt. He also used to place a sandal-wood pottu on his forehead to show is a staunch Hindu. His charismatic personality and oratorical skills always mesmerized the crowd. When the results came GG Ponnambalam soundly beat A. Mahadeva, polling 14,324 (73.28%) votes as against 5,224 for his opponent.



In the same election (1947) contesting as a candidate of ACTC, SJV Chelvanayakam won in Kankesanthurai electorate beating his nearest rival P. Nagalingam by a majority of 6,986 (12,126 - 6986). S. Nadesan who contested on the UNP platform came third polling 4,605 (21.04%) votes. He is the son-in-law of Sir Ponnambalam Ramanathan. He was first elected to the State Council in a byelection held in 1934 and subsequent election in 1936 for the KKS constituency. No election was held in 1931 because of a boycott called by the Jaffna Youth Congress.

S. Nadesan avenged his defeat at the next parliamentary election held in 1952 by a majority of 3,766 votes. It was widely reported during the election campaign S. Nadesan played the Hindu card against his Christian opponent asking voters to choose between Spear (வேல்) and Cross (சிலுவை).

SJV lost this seat in 1952 but continue to hold from 1956 to 1977. Hindus formed a predominant majority (82.6%) of voters in KKS electorate, yet SJV won in 1947, 1956, March 1960, July1960, 1965 and 1970 and 1975. This earned him the title 'Christian leader of Hindu Tamils.'

My first encounter with ITAK was in 1949, when I was studying at St. John's College. I attended a rally organized by the ITAK in Muththurai santhai, Jaffna. There was a procession and I was given a small flag with an image of a bull embedded in the middle. I did not know the significance of the bull flag; it was years later I learnt that this flag was the flag of the kings of Jaffna kingdom ruled by the Aryasakravarthy kings (1215 - 1619).

Unfortunately, the meeting was wrecked by supporters of the ACTC and I saw Dr. Naganathan receiving a blow to his chest and others thrown out of the platform. It came as a shock to me and only later I learnt that GG Ponnambalam was directing operations from the Jaffna Rest House to disrupt the meeting.

I will skip history from 1949 to 1955 for sake of brevity. The introduction of Sinhala Only as the official language of Ceylon in 1956 and the attack on peaceful satyagrahis by Sinhalese goons came as a bolt from the blue. I was then working at the Ratnapura Kachcheri as a clerical servant. Like myself many Tamils public servants were members of the Government Clerical Service Union. The enactment of Official Language Act 33 (1956) and making Sinhala as the language of administration made Tamil public servants illiterates overnight. The cordial relationship that existed between Tamil and Sinhalese public servants suddenly turned sour, if not hostile. The political atmosphere got heated up. There was bad blood between the Tamils and the Sinhalese. Newspapers reported dire warnings by Sinhala - Buddhist extremists that river of blood will flow.

Riots broke out in Colombo, Batticaloa, especially in Gal Oya in the East. Sinhalese hoodlums attacked Tamils, their homes and business establishments. Colombo was flooded with Tamil refugees in their thousands. The 1956 anti-Tamil pogrom was the first state organised violence against Ceylon Tamils after independence. The worst of the violence took place in the Gal Oya valley, where local majority Sinhalese colonists and employees of the Gal Oya Development Board commandeered government vehicles, dynamite and weapons and massacred minority Tamils.

D.S. Senanayake was the brain behind the creation of Gal Oya colonization scheme. It commenced in 1949 to settle landless peasants in formerly jungle land. Gal Oya river in the Batticaloa district was dammed and a tank was created with 40,000,000 acres (160,000 km2) of irrigated land. The development scheme, which encompassed 120,000 acres was divided into 40 settlements and in each settlement 150 farmer families were allocated five acres each. Only six of those settlements were allocated to 900 Tamil families mostly local residents. Over 50,000 Sinhalese families were settled in the settlements allocated to the Sinhalese. They were mainly brought from Kandy and Kegalle. Thus, D. S. Senanayake, whom the Sinhalese call the father of the nation, became the father of state aided Sinhalese colonization of the traditional homeland of the Tamils.

During the 1956 riots, Tamil settlers were chased away from their homes. Subsequent attempts to resettle in their lands proved futile.

The Official Language Act (No. 33 of 1956), commonly referred to as the Sinhala Only Act, was an act passed in the Parliament of Ceylon on July 07, 1956. The passing of the Sinhala Only Act in 1956, brought about a profound change in the political history of Ceylon. It took 22 years to make Tamil also as an Official language, at least on paper. The 1972 constitution was amended by an act of parliament on September 07, 1978 which added Tamil also as an official language



along with Sinhalese. Tamil public servants who joined the service through English medium sought the help of GCSU leadership controlled by Sinhalese who were supporters of the Ceylon Communist party and later by the LLSP. There was no responsive. We were advised to learn Sinhala, write exams and fall in line. It is at this stage some of who were very active in the GCSU decided to break away from the GCSU and form the Eluthuvinaignar Sankam (AES). The first meeting was held at a restaurant in Fort and S. Sivanandasunderam was elected president. I was elected to the executive committee. Later when the AES decided to start a newspaper, I was appointed as the editor. I continued in that post till I left the service in June, 1966. (To be continued)


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# காலை உணவு திட்ட விரிவாக்கப் பணிகள் அதிகாரிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கப் பணிகள் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின், துறை அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.தமிழகத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நோக்கில் 'முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை' கடந்த ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரையில் தொடங்கி வைத்தார்.முதல்கட்டமாக தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்கப் பள்ளிகளில், ரூ.33.56 கோடியில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதில், காலையில் உப்புமா, கிச்சடி உள்ளிட்ட பல்வேறு வகை சிற்றுண்டிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகின்றன.இந்த திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர்களின் வருகைப் பதிவு அதிகரித்துள்ளது தெரியவந்தது. இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள 30,122



அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில், 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த தமிழக அரசு முடிவு செய்தது.இதற்காக கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. மேலும், திட்டத்துக்கான வழிமுறைகளும் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டன.

அதில், திட்டத்தின் பணிகளைக் கண்காணிக்க, வட்டார வளமைய அளவில் ஒரு ஆசிரியப் பயிற்றுநரை பொறுப்பு அலுவலராக நியமிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. தொடர்ந்து, மாவட்டம் வாரியாக திட்டத்தின் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இந்த நிலையில், காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் தொடர்பாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நிதித் துறைச் செயலர் நா.முருகானந்தம், காலை உணவுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.இளம் பகவத் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.இந்தக் கூட்டத்தில், காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கப் பணிகள், தேவையான உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்தல் உள்ளிட்ட பல் வேறு விஷயங்கள் தொடர்பாக விவா திக்கப்பட்டன.மேலும், இந்த திட்டத்துக்கான முன்னேற்பாட்டுப் பணிகளை துரிதமாக முடித்து, ஜூன் மாதத்தில் காலை உணவுத் திட்டத்தை முழுமையாக செயல் படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

# எடப்பாடி பழனிசாமியிடம் ஓ.பி.எஸ்ஐ அதிமுகவில் சேர்க்க வலியுறுத்த மாட்டோம்: அமித்ஷா திட்டவட்டம்

''தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்த்துக் கொள்ளுமாறு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் வலியுறுத்த மாட்டோம். பாஜக ஒருபோதும் அதிமுகவின் உள்கட்சி விவகாரத்தில் தலையிடாது'' என்று பாஜக மூத்த தலைவர் அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கர்நாடக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள மத்திய உள்துறை அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான அமித் ஷா தனியார் ஊடகமொன்றுக்கு பேட்டி அளித்தார்.அப்போது செய்தியாளர், ''தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்த்துக் கொள்ளுமாறு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை வலியுறுத்துவீர்களா?'' என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமித் ஷா பதில் அளிக்கையில்,''ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்த்துக் கொள்ளுமாறு எடப்பாடி பழனிசாமியிடம்



வலியுறுத்த மாட்டோம். அவர்கள் இருவருக்குமான பிரச்சினையில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. ஏனெனில் இது அக்கட்சியின் உள் விவகாரம். அவர்கள் இருவரும் பேசி முடிவெடுக்க வேண்டும். மற்ற கட்சியின் உள்விவகாரத்தில் தலையிடுவதை பாஜக தரக்குறைவாக கருதுகிறது'' என்று பதிலளித்தார்.

அதிமுகவில் இணைவதற்கு நான்தூது அனுப்பியதாக பழனிசாமி கூறுவது பொய்யான தகவல் என முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் குற்றம்சாட்டியுள்ளார்.சென்னையிலிருந்து நேற்று விமானம் மூலம் மதுரை வந்த அவர்,விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுகவில் மீண்டும் இணைவதற்கு நான் தூது அனுப்பியதாக பழனிசாமி கூறுவது பொய்யான தகவல். இது போன்று அவர் தினமும் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார். அண்டப் புழுகு, ஆகாச புழுகு என்பதற்கான சான்றாக அவர் செயல்படுகிறார்.

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையமும், டெல்லி உயர் நீதிமன்றமும் பழனிசாமியிடம் அவரது தரப்பு பற்றி விளக்கம் அளிக்க கோரியதற்கு அவர் விளக்கம் அளிக்கட்டும் பார்க்கலாம். திருச்சி மாநாட்டுக்குப் பின் தொண்டர்கள் மனநிலையில் மாற்றம் உள்ளது. அவர்கள் எங்கள் பக்கம்தான் இருக்கின்றனர் என்பதற்கு திருச்சி மாநாடு சான்றாக நிரூபணமாகி உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# செந்தில் பாலாஜி மதுவிலக்குத்துறை அமைச்சரா... மது விற்பனைத்துறை அமைச்சரா? அன்புமணி கேள்வி

செந்தில் பாலாஜி மதுவிலக்குத்துறை அமைச்சரா அல்லது மது விற்பனைத்துறை அமைச்சரா என்று அன்புமணி கேள்வி எழுப்பி உள்ளார்.இது குறித்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'' தமிழக மக்கள் அதிகம் வந்து செல்லும் வணிக வளாகங்களில் மதுப்புட்டி வழங்கும் தானியங்கி இயந்திரங்களை அறிமுகம் செய்வது மதுவணிகத்தை ஊக்குவிக்கும் செயல் என்ற குற்றச்சாட்டிற்கு, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பதிலளிக்க இயலாத மதுவிலக்குத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, வேண்டுமென்றால் அன்புமணி ராமதாஸ் நாடாளுமன்றத்தில் பேசி நாடு முழுவதும் மதுவிலக்குக் கொள்கையை கொண்டு வரலாமே? என்று தம்மைத்தாமே அறிவாளி என்று நினைத்துக் கொண்டு எதிர்வினா எழுப்பியிருக்கிறார்.

அவரது அறியாமையை எண்ணி நான் வருத்தமடைகிறேன்.ஆக்கப்பூர்வமாக செய்வதற்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும் நிலையில், அவற்றையெல்லாம் விட்டு, சென்னை அண்ணாநகரில் உள்ள தனியார் வணிகவளாகம் ஒன்றின் எலைட் டாஸ்மாக் மதுக்கடையில் அமைக்கப்பட்டுள்ள மதுப்புட்டி வழங்கும் தானியங்கி எந்திரத்தை பார்வையிட்ட தமிழக அரசின் மதுவிலக்குத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, தானியங்கி எந்திரங்களுக்காக தமிழக அரசு ஒரு பைசா கூட செலவழிக்கவில்லை என்றும், மது நிறுவனங்கள் தான் அவற்றை இலவசமாக வழங்கின; அதைத் தான் டாஸ்மாக் நிறுவனம் பயன்படுத்துகிறது என்று விளக்கமளித்திருக்கிறார்.

இப்படி ஒரு விளக்கத்தை அளித்ததற்காக அவர் வெட்கப்பட வேண்டும். ஆனால், இப்படி ஒரு மதுவிலக்குத்துறை அமைச்சரை பெற்றிருக்கிறோமே? என்று தமிழக மக்கள் மக்கள் தான் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.தயாரிப்பு நிறுவனங்கள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், அவற்றை சில்லறை விற்பனைக் கடைகள் அப்படியே பயன்படுத்துவதற்கு மது ஒன்றும் குளிர்பானம் அல்ல. குளிர்பான தயாரிப்பு நிறுவனங்கள் தானியங்கி எந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகளை சில்லறை வணிகக் கடைகளுக்கு இலவசமாக வழங்குவதும், கடைகள் அவற்றை பயன்படுத்துவதும் உண்மை தான். தயாரிப்பு நிறுவனங்கள் அவற்றை இலவசமாக வழங்குவதன் நோக்கம் தங்களின் விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்பது தான்.

மது நிறுவனங்களுக்கும் தாங்கள் தயாரிக்கும் மதுவகைகள் அதிக அளவில் விற்பனையாக வேண்டும் என்ற நோக்கம் இருக்கலாம்; அதற்காக அவை இத்தகைய எந்திரங்களை வழங்கலாம். ஆனால், அவற்றை அப்படியே பயன்படுத்த டாஸ்மாக் ஒன்றும் செந்தில் பாலாஜி என்ற தனிநபர் நடத்தும் தனியார் நிறுவனம் அல்ல... தமிழக அரசு நிறுவனம். அதன் வணிக நடைமுறையில் செய்யப்படும் எந்த மாற்றமும் அரசின் கொள்கை முடிவாக இருக்க வேண்டும்; பொதுவெளியில் விவாதித்து தான் முடிவெடுக்க வேண்டும்.

அதையும் கடந்து மது நிறுவனங்கள் அவற்றின் மது வணிகத்தை அதிகரிப்பதற்காக எந்திரங்களை வழங்கி, அவற்றை டாஸ்மாக் நிறுவனம் பயன்படுத்துவதை செந்தில் பாலாஜி ஆதரிக்கிறார் என்றால், மது ஆலைகளின் லாபம் அதிகரிப்பதற்காக மது வணிகம் பெருகுவதையும் ஆதரிக்கிறார் என்று தான் பொருள். அப்படியானால் செந்தில் பாலாஜி மதுவிலக்குத்துறை அமைச்சரா... மது விற்பனைத்துறை அமைச்சரா? தானியங்கி எந்திரங்கள் மூலம் மது விற்பனை செய்வது குடிப்பழக்கத்தை ஊக்குவிக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

அதைத் தான் மக்கள் நல அரசு மதிக்க வேண்டும். மாறாக, மது நிறுவனங்கள் இலவசமாக வழங்குகின்றன என்பதற்காக தானியங்கி எந்திரங்களை பயன்படுத்த செந்தில் பாலாஜி ஒன்றும் மது ஆலைகளின் முகவர் அல்ல... தமிழகத்தின் மதுவிலக்கு அமைச்சர்.அடுத்ததாக, ''நாடாளுமன்றத்தில் பேசி தேசிய அளவில் மதுவிலக்கை கொண்டு வருவது தானே; அதை விடுத்து இங்கு வந்து அன்புமணி அரசியல் செய்கிறார்'' என்று பொங்கி எழுந்திருக்கிறார் பெருமாளின் பெயரைக் கொண்ட அமைச்சர். அவருக்கு பிழைப்புவாத அரசியல் தெரிந்த அளவுக்கு அரசியலமைப்புச் சட்டம் தெரியவில்லை என்பதையே அவரது வாதம் காட்டுகிறது.

# The Significance Of Thiruvalluvar'S Notion Of Aram In Thamil Culture

By: K. Ananthanathan, MA, MSW, RSW
Registered Social Worker with OCSWSSW



In this small article, I intend to briefly explain the meaning of the notion of Aram (virtue) and love in Thiruvalluvar's Thirukkural. Within the Thamil culture of offering Aram and Love to the whole humanity. Every Thamil must have heard of the name of Thiruvalluvar and of his masterpiece Thirukkural, which is today known all over the world of culture as "one of the highest and purest expressions of human thought".

Brief Introduction of Thiruvalluvar and his work Thirukkural:

Thiruvalluvar is a celebrated Thamil poet and philosopher whose contribution to Thamil literature is the Thirukkural a work on ethics. He was born in Mylapore Chennai in Thamil Nadu. Thiruvalluar is thought to have lived sometime between the 3rd century BC and the 1st century BC. His ethical works Thirukkural is a collection of 1330 Thamil Couplets organized into 133 Chapters. Each Chapter has a specific subject ranging from "Ploughing a piece of land" to "Ruling a country".

Thamil word kural means Venpa verse with two lines. Thirukkural comes under one of the four categories of Venpas (Thamil Verse). The 1330 Couplets are arranged into three main sections and 133 Chapters. Each Chapter contains ten Couplets. A Couplet consists four words on the first line and three words on the second line. A word is a single or combination of more than one Thamil word. For Example, Thirukkural is a word formed by combining the two words Thirukkural, i.e. Thirukkural Thiru + Kural = Thirukkural. The Thirukkural is divided into three sections. They are (in a following order):

1. Arathuppaal: On ethical law/virtue (see also Dhama)
2. Porutppaal: On wealth/politics (see also Artha)
3. Kamathuppaal: On Desire/Love (see also Kama)

Thiruvalluvar seems to belong to the small band of the great teachers of the world like Lord Buddha, Great Philosopher like Socrates, Juses Christ. His work, which the Thamils love to call the Thamil Veda (Pothu Marai), has the universal appeal of a gospel of humanity. The legacy of Thiruvalluvar, comprising as it does, a world of thought within a small compass, holds indeed a unique position in Thamil literature and reveals the vigour and resourcefulness of the early Thamil tongue. First, I will explain some of his views on concepts of love and virtue through his favorite Thirukkural following couplets:

"Those who are destitute of love destitute of love appropriate all they have to themselves; but those who possess love consider even their bone to belong to others" (Thirukkural – 72). "They say that the union of soul and body in man is the fruit of the union of love and virtue" (Thirukkural – 72). "Love begets desire; and that (desire) begets the immeasurable excellence of friendship" (Thirukkural – 74). "The ignorant say that love is an ally to virtue only, but it is also a help to get out of vice" (Thirukkural – 76).

"Virtue will burn up the soul which is without love, even as the sun burns up the creature which is without bone, i.e. worms" (Thirukkural – 78). "The body alone which is inspired with love contains a living soul; if void of it, (the body) is bone overlaid with skin" (Thirukkural – 80). "Is there any fastening that can shut in love? Tears of the affectionate will publish the love that is within" (Thirukkural – 71).

Thirukkural has already attracted many a foreign scholars and philosophers by Aram (virtue) and deep love of its high humanitarian ideals and moral teachings based upon self – purification and universal brotherhood. It has been translated into more than 80 languages both western and oriental.

John Murdoch in his "Catalogue of Thamil books" observes, Thiruvalluvar the author of the Thirukkural occupies the foremost place as a moralist among the Thamils. Indeed, it is generally acknowledged that there is no treatise equal to the Thirukkural in any Indian language". It was mainly through the influence of Buddhism through Sri Lanka and Jainism from North India that the Thamil poets after the Sangam Age occupied themselves with ethical questions. They produced a number of ethical works, the greatest of them being Thirukkural. These works show an increasing inflow of Sanskrit influence, notably owing to the profound Sanskrit scholarship of the Janina authors. The ancient Thamils who were a progressive people could not but absorb and assimilate new thoughts and ideas, and thus their literature had energy and vigour, richness, and depth added to it by the infusion of fresh blood.

Some scholars argue that Thiruvalluvar was himself a Jain and that there is internal evidence to show the domination of the Jaina concept of Pharma in his maxims. Besides, he was well – versed in the works of Manu, Kautilya, Vatsayana, and others and his thought must have been influenced and enriched by his extensive and intensive studies and contacts. Yet, his way of life, which we find recorded in 1330 Thirukkural – couplets must be considered his original view of life Love and Aram (virtue).

This view and this way, reminding us here of a Gandhi and there of a Socrates, here of a Buddha and there of a Confucius or a Marcus-Aurelius, have been emphatically presented for men of all ages, by this Thamil apostle of Truth and Compassion. Thiruvalluvar's role in the ethical evolution – or shall we say revolution? Of the Thamil people is unmistakable; and indeed, he is responsible for the reawakening of the Thamil genius and conscience, after the Sangam period. Also, Thirukkula reflected Sangam period universal appeal or attitude of Thamils, "Yaduhum Oorey Yavarum Kelir".

Thiruvalluvar cannot really be the name of the poet; it is title borne by the religious teachers of a class of low caste in later times in Thamil Nadu. Originally this title was applied to those servants of the State who proclaimed the royal commands by beats of drums from the back of elephants. We have to confess that we know nothing certain even about the real name of the poet, nor we do know anything certain about the time or the true life of the poet.

The bard was apparently a man of no worldly importance and yet a king in his own right, a king of Aram (virtue) swaying the minds of men and eventually founding an empire of Aram (virtue). He was not a moralizer but a moralist whose law of Aram (virtue) was fulfilled by a dedicated life of love in its pure, serene and exalted form.

In tune with nature and with the spirit of man Tiruvalluvar strove to realize the oneness of life. Enduring all things, he seems to have lived a long life of hard work, all his activities being directed to the pursuit of truth and Aram (virtue). We can imagine him and only in waist-cloth and sandars, walking like a Gandhi or a Vinoba like a Socrates against ignorance and vice, by his simple appeals to the goodness in human nature. Aram (virtue) is his one medicine to the ills of life, to the maladies of all ages.

In Thirukkural we see the extraordinary personality and art of the master who dreams of a kingdom of Aram (virtue). This work deals with three objects of human life: (1) righteous living, (2) political life and (3) love. Thiruvalluvar has made each couplet a gem by itself conveying lofty thought in terse language, every gem finding its appropriate place in the grand jewel that is his work.

The work of the Thiruvalluvar, besides giving glimpses of his personality and art, reveals the way of life followed and reached by him. The First Book under the title of Righteousness shows us the ideal householder whose domestic virtue is rooted in true love. He comes before us as a good husband and as a good father and as a good friend to his neighbor and to the society. Above all, he is a good man and every inch a gentlemen in the truest sense of the term. He is tolerant of ideas, even those which he condemns; such is the hospitality of his heart. He abides by his word even to his own hurt. Thiruvalluvar's ascetic makes the world his family and is in rhythm with the universe. He with a radiant face breaches out his blessings even upon those who wrong him.

In the Second Book of Thirukkural devoted to politics, we meet the ideal sovereign, the ideal statesman, and the ideal citizen and find the ideal state described. The moral teacher in the First Book becomes here a consummate statesman proportion. Thiruvalluvar presents a government by wisdom, an monarchy and not an ideal republic though outdoing the "Republic" of Plato in some of its aspects. I t is a new look at politics within ethical, and at the same time practical limits.

The Third Book speaks of love and of the ideal lovers. This part of the Thirukkural is commented on generally as romance of a single couple. To my mind, Thiruvalluvar finds inspiration for the whole art of living in the inexorable force of Love, for the ideal State as well as for the ideal family.

So, Thiruvalluvar love is more a fact of life than a concept, and his law of Aram(virtue) is ultimately based on the law of love. There is no bolt to shut up love' (Thirukkural. 71) says the master in the First Book. This love reveals itself as positive or wedded love as friendship or philanthropy. In the philanthropist love makes the heart tender towards all. Little wonder then that love becomes, in the view of Thiruvalluvar, both the shield and the sword to virtue, yes, love at times becomes even the aggressive weapon against vice or evil.

A lovely outside, according to Thiruvalluvar, is of no avail, if there be no love within. So, in the ways and view of Thiruvalluvar we find Truth, God and Beauty becoming correlates and not contradictories. To Thiruvalluvar, attachment to a single form is passion, while attachment to all forms is compassion.

In conclusion, we can say, to be born a human being is no mean privilege, and in the manner of living one's life and in the pursuit of happiness, one should always remember,

"Pleasure emanates from Aram virtue alone all else is stale and weary." (Thirukkural. 39). This didn't apply only to the Thamils of two millennia ago; it is pertinent to all Indians, all Asians, and global humanity; and as much to the Nomads and the people of long past ages as to those of our own age. No wonder Thiruvalluvar was hailed by Re. Dr. G.U. Pope as "The Bard of universal Man". And his work as a Treasure House of knowledge and wisdom.

# எழுத்தாளர் குரு அரவிந்தன் சிறுகதைகள். பகுப்பு முறை திறனாய்வினடிப்படையில் எனது கண்ணோட்டம்

- ஹஜிஸ்தா நூரி முஹம்மட் ஹிராஸ்

சமகாலத்து புலமைப் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர் குரு அரவிந்தன் அவர்கள். தனது பல்வேறு விதமான இலக்கியப் படைப்புக்களால் உலகளவில் பிரபல்யம் அடைந்துள்ளதோடு அங்கீகாரமும் பெற்றவர். இவர் யாழ்ப்பாணம் காங்கேஷன்துறை மாவிட்ட புரத்தை பிறப்பிடமாக கொண்டிருப்பினும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார். இவர் சிறுகதை, கட்டுரை, நாவல், ஒலிப்புத்தகம், மேடை நாடகம், திரைக்கதை போன்று பல துறைகளிலும் சிறந்து விளங்கி இலக்கிய உலகைவலம் வந்துகொண்டிருக்கிறார். ஈழத்துமற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் பலவற்றில் இவரது படைப்புக்கள் களம் பெற்றுள்ளதோடு பல்வேறு பரிசுகளையும், விருதுகளையும் பெற்று சாதனை படைத்துள்ளவராவார்.

ஒரு சிறுகதையை எப்படி எழுதுவது, என்பதற்கான ஒழுங்கு முறைகளை பின்பற்றி எழுதுகின்ற ஆற்றல் இவரது ஒவ்வொரு சிறுகதைகளிலும் இளையோடிப் போய் இருப்பதை காணக்கூடியதாய் இருக்கின்றது. தெளிந்த நீரோட்டம் போன்று அனாயசமாக கதைகளை நகர்த்திச் செல்லும் ஆசிரியரின் திறனும், சிறந்த மொழி நடையும் பாராட்டத்தக்க வகையில், பல்வேறு பட்ட கருவும், உருவும் கொண்ட கதைகள் தொகுக்கப்பட்டிருப்பதும் வாசகரது ரசனைக்கு நல்விருந்தாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு வாசகரது ரசனையும் வித்தியாசமாக இருந்தாலும் ஆசிரியரின் சிறுகதையின் தரத்தினை வாசகர்கள் ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

இவர் எழுதிய சிறுகதைகளில் எனக்கு மிகவும் பிடித்தமானவை... யார் குழந்தை?, தங்கையின் அழகியசிநேகிதி, சிலந்தி, என் செல்லக்குட்டி கண்ணனுக்கு, இதுதான் பாசமென்பதா?, தாயாய் தாதியாய், ஊமைகளின் உலகம், அவளா சொன்னால்?, அவளுக்கு ஒரு கடிதம், அப்பாவின் கண்ணம்மா...

இந்தவகையில் எழுத்தாளர் திரு. குரு அரவிந்தன் அவர்களுடைய சிறுகதைகள் ஒவ்வொன்றும் சமூகவாழ்வியல் சார்ந்த குடும்பம் மற்றும் சமூகம் சார் பல்வேறு விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கதைக்கருவைக் கொண்டவையாக தோன்றுகின்றன. அந்த வகையில் குரு அரவிந்தன் அவர்களினால் செதுக்கப்பட்ட அவளுக்கு ஒரு கடிதம், அப்பாவின் கண்ணம்மா, தங்கையின் அழகிய சிநேகிதி, தொடாதே, ஆகிய நான்கு சிறுகதைகளும் பகுப்பு முறை திறனாய்வு அடிப்படையில் இக்கட்டுரையில் நோக்கப்படுகின்றன.

அப்பாவின் கண்ணம்மா

கணவன் இறந்த பின்னர் மனைவி தனது வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் விதமே இக்கதையின் கருப்பொருளாக இருக்கின்றது. கதையின் ஆரம்பத்தில் கண்ணம்மா எனும் மனைவியின் பாத்திரத்தை சிடுசிடுப்பான தாயாகவும், மனைவியாகவும் வர்ணித்திருக்கிறார். ஆனால் மனதுக்குள் கடலளவு போல் எல்லையற்றபாசம் அவளுக்கு. பொதுவாக பெண் என்றால் அப்படித்தானே? ஆசிரியர் குரு அரவிந்தன் அவர்களும் உணர்ந்திருப்பார் போலும். மேலும் கணவனுக்கும் மனைவிக்கும் உண்டான காதலை மிக அழகாக, நிஜமாக வர்ணித்து வந்த ஆசிரியர் கதைக்கு ஒரு திருப்பத்தை வழங்குகிறார்.

"பற்றிப்படர்ந்த மரமே பட்டுப் போனால் பாவம் அந்த கொடி என்ன செய்யும்?" இந்த வசனமானது ... என்னை ஆழமாக அழ வைத்தது. நான் எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன் எனக்கு என்ன ஆயிற்று என்று. அந்த வசனத்தில் ஆயிரம் அர்த்தங்கள் அதை வெறும் கதையாக மட்டுமின்றி உணர்வு பூர்வமாக வாழ்ந்து பார்த்திருந்தால் மட்டுமே தெரியும், ஆசிரியரின் உணர்வுகள்.... அவர் கதையை நகர்த்திய விதம் அடுத்தடுத்து வரும் திருப்பங்கள் என்னை அழ வைத்துக் கொண்டே இருந்தது. "அப்பாவின் கடைசி ஆசையை நிறைவேற்றாமல் போய் விட்டேனடி பாரதி." ......என்ற கண்ணம்மாவின் அழுகுரல் என் கண் முன் விழித்தாடியது. அப்பா இறந்த பிறகும் அம்மாவிற்கு தோழியாக நின்று அவளை கட்டியணைத்து ஆறுதல் கூறும் பக்குவம் நிறைந்த மகளாய் பாரதி என்னும் கதாபாத்திரத்தை வர்ணித்தது இந்த கதைக்கு ஓர் ஆறுதலாய் இருந்தது. கண்ணம்மா தனது கணவரை மட்டும் காதலிக்கவில்லை, அவருடைய எழுத்துக்களையும் தான். அவரது படைப்புக்குளோடு எந்தளவுக்கு ஆர்வமும் மரியாதையும் இருந்திருந்தால் அவரது ஒவ்வொரு எழுத்துக்களையும் தாரக மந்திரமாக ஏற்று தனது வாழ்க்கையை நகர்த்திச் சென்று இருப்பாள். பொதுவாக பெண்கள் கணவன் இறந்த பிறகு பூ பொட்டு கலைவது என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் "மனைவி இறந்தால் கணவன் எதையும் துறப்பதில்லை கணவன் இறந்தால் மட்டும் ஏன் மனைவி பூவும் பொட்டும் துறக்கணும் ஏன் இந்த பாரபட்சம்? ஏன் இந்த நீதி?" என்ற அப்பாவின் எழுத்துக்கள், ஒவ்வொன்றாக கண்ணம்மாவின் உருவத்தில் உயிர் பெற்று நின்றது. இக்கதையில் ஆசிரியர் சமூகத்துக்கு ஒரு கருத்தை சொல்லாமல் சொல்லி இருக்கிறார். மிகவும் சுவாரஸ்யமாக கதையை நகர்த்திச் செல்லும் ஆசிரியர் அடுத்தடுத்து ஒவ்வொரு திருப்பங்களையும் கொண்டு வருகிறார்.

பாரதிக்கு ஒரு அதிர்ச்சி இருந்தது. அப்பா எழுதிய "கணவனை இழந்த இளம் பெண் மறுமணம் செய்து புது வாழ்வு ஆரம்பிப்பதாக" என்ற கதை அவளது கைகளுக்கு கிடைத்தது. ஒரு கணம் அதிர்ச்சி அடைந்து விட்டேன் நானும் கூட, பாரதி போல். கண்ணம்மாவின் கைகளுக்கு கிடைத்து விடக்கூடாது என்ற பரபரப்புடனையே கதையில் வாழ்ந்து கொண்டிருந்தேன். கதையின் இறுதியில் பாரதிக்கோ குழப்பமும், தெளிவின்மையும், ஆனால் ஒரு வாசகராய் எனக்கோ மிகுந்த பேரின்பம்.

"என் அம்மா அப்பாவின் கண்ணம்மாவாக இருக்க வேண்டும்" என்று இக்கதையில் பாரதி எடுத்த முடிவு மிகவும் கச்சிதமானது.

என் கருத்துப்படி, இதன்முடிவை எல்லா வாசகர்களும் திருப்திகொள்ள மாட்டார்கள். இக்கதையில் பாரதியாக வாழ்ந்திருந்தால் மட்டுமே தெரிந்திருக்கும் ஆசிரியரின் உணர்வுகள். "அப்பாவின் கண்ணம்மா" என்ற தலைப்பை நான் ஆரம்பத்தில் வாசிக்கும் போது அப்பாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஒரு கதையாக அமையக்கூடும் என எண்ணியிருந்தேன். கதையின் இறுதியிலேயே உணர்ந்து கொண்டேன், அந்த தலைப்பில் உள்ள காதல் மயக்கத்தை.

ஒரு சிறுகதைக்கு அதன் மொழி உயிரோட்டம் தருவது எவ்வளவு உண்மையோ அதுபோல கதையில் வரும் பாத்திரங்கள் அந்த மொழிநடையை காவிச்சென்று மனதில் நீங்காத இடத்தை பிடித்துவிடுகின்றன. சிறுகதைகள் பொதுவாக தனிமனித உணர்வுகளை அல்லது ஒரு பிரச்சினையை கணநேரத்தில் சொல்லி முடிக்கவேண்டும். பாத்திரங்களும் வளர்க்கப்படாது வார்க்கப்பட வேண்டும். குரு அரவிந்தனின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்களும் அப்படியானவையே. உதாரணமாக "அப்பாவின் கண்ணம்மா" என்னும் சிறுகதையில் அப்பா, அம்மா, மகள் இவர்களின் கதாபாத்திரங்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கின்றது.

இரண்டாவதுகதை "தங்கையின்அழகியசிநேகிதி"

தங்கையின் சிநேகிதி மீது கொண்ட அண்ணனின் காதல் ஒரு தலை காதலாகி விடுமோ என்ற எண்ணத்திலேயே வாசிக்கும் போது மிகவும் விறுவிறுப்பான ஒரு முடிவை வழங்கி இருக்கிறார் ஆசிரியர். அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையே ஏற்படும் சண்டைகள் சாதாரணமே. ஆனால் அவர்களின் மனதில் உள்ள கோபங்களையும் வெறுப்பையும்யார் அறிவர்?. அண்ணனுக்கு தங்கையின் சிநேகிதி மீது ஒருவகையான சொல்ல முடியாத உணர்வுகளைக் காதலாக வெளிப்படுத்தி இருக்கிறார் ஆசிரியர். அவளிடம் எப்படியாவது பேசிட வேண்டும் என்று எண்ணியிருந்த அவனுக்கு அந்த குறுகிய நேரத்தில் அவன் எண்ணிய திட்டங்கள் அனைத்தும் வீணாகியே போய்விட்டன. ஆனால் அவனுக்கு அவள் எதையோ தன்னிடம் கூற முற்படுகிறாள் என்ற எண்ணமே.

ஒரு தலை காதலாக எண்ணிய அவனும் அவளுடைய மனதில் இருப்பதை அறிந்திருந்தால் தலைகால் தெரியாமல் ஆடியிருப்பான் போலும். "காற்றடித்து கலையாத உன் முடிக்குள் என் விரல் நுழைத்து களைத்து விட ஆசை", என்ற வரிகளில் ஊடாகவே ஆசிரியர் விளக்கியிருக்கிறார், அவளுக்கும் அவன் மீதான ஆசையை. தங்கைக்கும் எந்த அளவுக்கு வெறுப்பும் கோபமும் இருந்திருந்தால் தனது சிநேகிதி தன் அண்ணனுக்கு எழுதிய கடிதத்தை மறைத்து வைத்திருப்பாள். இறுதியில் இருவரது காதலும் ஒரு தலை காதலாகவே போய்விட்டதா அல்லது அவர்களது காதல் மலருமா? என்ற வினாவுடனயே இக்கதையை வாசகர்கள் பார்வைக்கு வழங்கி இருக்கிறார் ஆசிரியர்.

முடிவு முடிந்துவிடாமல் மீண்டும் தொடர்வதாகவும் திருப்புமுனையுடன் கூடியதாகவும் வாசகர்களது எண்ணத்திற்கு படைப்பது சாலச்சிறந்தது.

மூன்றாவதுகதை "அவளுக்குஒருகடிதம்"

காதலை எப்படியாவது சொல்லி விட வேண்டும் என்ற தயக்கத்திலேயே தவித்திருக்கும் சுரேஷிற்கு ஓர் சந்தர்ப்பமாய் அமைந்தது அந்த காதலர் தினம். தனது காதலையெல்லாம் அந்த வேலன்டைன் காடில் கொட்டித்தீர்த்தான். ஏதோ ஒரு உத்வேகத்தில் அந்தக் காடை அவளிடம் கொடுத்துவிட்டு ஏங்கி நின்றான், அவளது சம்மதத்திற்காக. சம்மதத்திற்காக ஏங்கித் தவித்தவர்களுக்கு மட்டும் தான் தெரியும் ஆசிரியரினுடைய வரிகளின் வலிகள். அடுத்தது என்ன நடக்கும் என்ற பதட்டத்துடனே வாசித்தேன்.

அவளது புன்னகையும், அவளது பார்வையும் காதலுக்கு சம்மதமாகத்தான் இருந்தது. சுரேஷிற்கு தலைகால் புரியவில்லை. இருப்பினும் அடுத்த நாள் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. சுரேஷ் அதிபரின் அறைக்கு அழைக்கப்பட்டான். அதிபருடைய வார்த்தைகளோ சம்மதத்தை சொல்லாமல் சொல்வது போல் இருந்தது. ஆனால் சுரேஷிற்கு புரியவில்லை, அவனது வயது அப்படி. அருந்ததியின் மீதான கோபமே அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. வழியில் காத்திருந்த அருந்ததியிடம் தனது கோபத்தை வெளிப்படுத்துகிறான். அவளுக்கும் அவன் மீது காதல் தான், இது அவள் எதிர்பாராதது தான். அப்பா கோபமாக பேசின-ாரா என்று அவள் கேட்க, அவனும் நடந்தது எல்லாம் கூற, "நம் நல்ல திற்காகத்தானே கூறியிருக்கிறார்" என்ற அந்த வார்த்தை சுரேின் கோபத்தை சுக்கு நூறாக்கியது. ஆசிரியர் அவர்களது காதலை மலர வைத்து விடுகிறார். சுரேஷ் ஞாபகார்த்தமாக ஏதாவது தா? என்று கேட்க அவளோ முத்தத்தை வழங்க அந்த காதலை எவ்வளவு அழகாக வெளிப்படுத்தி இருக்கிறார் ஆசிரியர்.

காதல் எவ்வளவு பேரின்பமானது. காதலனோ காதலியோ பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் தேன் அமிர்தம் போன்றிருக்கும். என்னவோ தெரியவில்லை என்னவனே நான் அளவுக்கு அதிகமாக நேசித்ததாலோ தெரியவில்லை, குரு அரவிந்தன் அவர்களின் காதல் சிறுகதைகள் அனைத்தும் என்னை ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கின்றது.

இவர் எழுதிய ஒவ்வொரு கதைகளையும் எடுத்துநோக்கும் போது சிறுகதை எழுதுவது எப்படி என்பதுபற்றி பல எழுத்தாளர்கள் குறிப்பிடுவதுபோல் கதைத்தலைப்பிலிருந்தே கதையின் கருப்பொருளை உணரக்கூடியதாகவும் அந்தக் கதைகளை உடனடியாக படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுவதாகவும் கதையின் தலைப்புக்கள் மிகச் சிறப்பானதாகவும் பொருத்தமுடையதாகவும் ஒவ்வொரு கதைக்கும் தேர்வுசெய்து சூட்டியிருக்கிறார்.

சில எழுத்தாளர்களின் சிறுகதையில் அவர்களது கதையின் கருப்பொருளுக்கும் கதைத் தலைப்புக்கும் சம்பந்தமே இல்லாமல் தலைப்பிடுவார்கள். ஆனால் இவருடைய கதைகளில் அப்படி ஒரு நிலைமையை காணமுடியவில்லை. கதைத் தலைப்புக்கள் கதையின் இறுதிவரை நினைவில் நிற்கும் படியாக ஒவ்வொரு கதையின் கருவுடனும் பின்னிப் பிணைந்து இறுதிவரை நகர்கிறது.

நான்காவதுகதை "தொடாதே"

"பணத்தால் எதையும் வாங்கலாம்" என்று ஆணவத்தோடு இருப்பவர்களுக்கு சமர்ப்பணமாக எழுதி இருக்கிறார், எழுத்தாளர் "குரு அரவிந்தன்" ஆசிரியர் அவர்கள். அவன் ஒரு டென்னிஸ் விளையாட்டு வீரன். பெண்களை கவரும் தோற்றமுடையவன். கதையில் வரும் கதாநாயகியான "ஜெஸ்மின்" என்ற அவளும் அவனுடைய தோற்றத்தில் கவர்ந்தவளாகவே சித்தரித்திருந்தார் ஆசிரியர். கதையின் ஆரம்பம் காதல் போன்று நகர்ந்தாலும் முடிவோ வாசகர்கள் எதிர்பாராததாக வருணித்திருந்தார். கதையை வாசிக்கும் போது அவனுடன் அவள் நெருங்கும் விதம் காதலின் ஆரம்பமாகத்தான் தென்பட்டது. ஆனால் அந்த எண்ணத்தை எல்லாம் உடைத்து விடுவது போல் ஆசிரியர் "ட்விஸ்ட்" ஒன்றை வைத்திருந்தார்.

அவன் அவளை ரூமுக்கு அழைத்துச் சென்று அவளோடு நடந்து கொண்டு விதத்தை வாசிக்கும் போது சற்று முகஞ்சுழிக்கக் கூடியதாய் இருந்தது. பின்னர் தான் அறிந்து கொண்டேன் கதையின் திருப்பத்தை. அவன் செய்த காரியத்தை எண்ணி மனம் வருந்துவான் என்று எண்ணி இருந்த அவளுக்கு அவனுடைய பார்வையும், நடவடிக்கையும் அவளுக்கு மேலும் கோபத்தை வளர்த்தது. இனி அவள் எனக்கு அடிமையாகத்தான் இருப்பாள் என எண்ணி இருந்த அவனுக்கு அவளது கதையில் உள்ள திமிரையும் கோபத்தையும் கண்டு சற்று பயந்து நின்றான். ஜெஸ்மின் தனது வாழ்க்கை கதையை அவனுக்கு கூறும்போது அவள் ஏற்கனவே அவனால் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை கதாசிரியர் வாசகர்களோடு அணுகி இருக்கிறார்.

இப்பொழுதுதான் "என்னுடைய வலைக்குள் சிக்கி விட்டாய்" என்று ஜெஸ்மின் கூறியவுடன் "வலையில் சிக்கியது நீயா? நானா?*" என்று கேலியாக கேட்க அங்கு அவளுடைய உடல்நிலை கூறப்படுகின்றது. காசு, பணம், சொத்து, புகழ் இவை அனைத்தும் வைத்துக் கொண்டு எத்தனையோ பெண்களையும் ஏழைகளையும் ஏமாற்றிய டென்னிஸ் வீரனுக்கும் இதுபோன்ற எமது சமூகத்தில் உள்ள இங்கிதப் பிறவிகளுக்கும் பதிலடி கொடுக்கும் விதமாக கதையினில் ட்விஸ்ட் வைத்திருக்கிறார் ஆசிரியர்.

(தொடர்ச்சி 29 பக்கம்)

# கடந்த மே 2ம், 3ம், 4ம் திகதிகளில் வெளிவந்த கொழும்பு வீரகேசரி பத்திரிகையில் கனடா உதயன் குழுவினர் பங்குபற்றிய நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளை கீழே காணலாம்

## மாணவர்கள் வாழ்க்கைக் கல்வியை பெறுவதற்கு பெற்றோரே தடை

### தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் மட்டுமே ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் என்ற நம்பிக்கை பெரும்பாலான பெற்றோரிடம் இருக்கிறது. ஆனால், ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் வாழ்வுக்கான கல்வி வகுப்பறைகளுக்கு வெளியிலேயே இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அந்தக் கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு எமது பெற்றோரே தடையாக இருக்கிறார்கள் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.









தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்வு கடந்த சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோரும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்வில் உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பற்றிய அறிவையூட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழற்பாதுகாப்பில் பங்கேற்க வைக்கும் நோக்குடனும் அவர்களின் பன்முக ஆளுமையை விருத்திசெய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற பெயரில் மாணவர்களுக்கான வலுவூட்டல் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே நல்லூரில் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சௌரி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். சிறப்புரையாளர்களாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் ச.சர்வராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனுபவத்தைவிட சிறந்த ஆசான் உலகில் வேறெதுவும் இருக்கமுடியாது. ஆனால், அந்த அனுபவத்தைப் பெறமுடியாதவாறு பாடசாலை வகுப்பறைகளுக்குள்ளும் தனியார் கல்வி நிறுவனங்களின் கொட்டகைகளுக்குள்ளுமே எமது மாணவர்களின் பெரும்பொழுது கழிகிறது. பிறநிகழ்வுகளில் மாணவர்கள் கலந்துகொண்டால் கல்வி பாதிக்கப்படும் என்றே பெற்றோர் கருதுகிறார்கள். இதனால், உயர்ந்த சித்திகளைப் பெற்றிருந்தாலுங்கூட கல்வியை முடித்து வெளியே வரும் மாணவன் வாழ்க்கையில் தடுமாற நேரிடுகின்றது.

வாள்வெட்டும், போதைப்பொருள் பாவனையும் என்று எமது பண்பாட்டுச் சூழல் சீர்கெட்டிருக்கும் நிலையில் பிள்ளைகளை வெளியே அனுப்பினால் அவர்களும் தவறாக வழிநடத்தப்படுவார்கள் என்று பெற்றோர் அஞ்சுகிறார்கள். வெளியே மாத்திரமல்ல; இன்று பிரபல்யமான பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்கள்கூட போதைக்கு அடிமையாகியிருக்கிறார்கள். எனவே, பெற்றோர் பிள்ளைகள்மீது சந்தேகம் கொள்ளாமல் அதேசமயம் அவர்களைக் கண்காணித்தவாறு இதர நிகழ்வுகளிலும் மாணவர்கள் பங்கேற்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

வகுப்பறைகளுக்கு வெளியே இயற்கை ஏராளமான விடயங்களைக் கற்றுத்தருகிறது. இயற்கையைப் புரிந்துகொண்டதும் இயற்கையின் மீதான நேசிப்புத் தானாகவே ஏற்பட்டுவிடும். இயற்கையை நேசிப்பவர்கள் சுற்றுச்சூழலைச் சீரழிக்காதவாறு இயற்கையுடன் இசைந்து வாழ்வதற்குக் கற்றுக்கொள்வார்கள். அதுமாத்திரமல்ல, மனிதன் உட்பட சகல உயிரிகளையும் நேசிக்க ஆரம்பிப்பார்கள். சகமனிதர்கள் மீதான நேசமே இன்று சமூக வன்முறைகளைக் களைவதற்கான தீர்வாகவும் அமையும் என்றும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் தலைவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் கூறுகையில்,

"எமது தாயக மாணவச் செல்வங்களுக்கு பல தேவைகள் உள்ளன. அவர்களின் தேவைகளில் சிலவற்றை அரசு கவனிக்க வேண்டிய நிலையில் அவ்வாறான நிலை தாயகத்தில் இல்லை. இதன் காரணமாக பல புலம்பெயர் அமைப்புக்கள் இந்த தேவைகளை பூர்த்தி செய்கின்றன. மாணவர்களின் தேவைகள் பெற்றோரின் தேவைகளாக மாறிவிடுகின்றன. இதனால் அவர்களின் தலைகளில் சுமைகள் அதிகரிக்கின்றன. அரசு பொறுப்பேற்க வேண்டிய மாணவர்களின் தேவைகள் பற்றி எமது தமிழ்பேசும் அரசியல்வாதிகளோ அன்றி தென்னிலங்கை அரசியல்வாதிகளோ கவனிப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும்" என்றார்.

ஓய்வுநிலை ஆசிரியர் பா. காசிநாதன் வரவேற்புரையாற்றியிருந்த இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோரும் கலந்துகொண்டிருந்தார்கள். கலந்துகொண்டிருந்த மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வுக் குறிப்பேடுகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஈழத்து எழுத்தாளர் வீணை மைந்தனின் 3 நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு







ஈழத்து எழுத்துலகப் படைப்பாளிகளில் பரவலாக அறியப்பட்ட வீணை மைந்தனின் மூன்று நூல்கள் வைபவ ரீதியாக யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (28) வெளியிடப்பட்டன.

கனடாவில் வசித்து வரும் வீணை மைந்தன் என்று எழுத்துலகில் அறியப்படும் கே. ரி. சண்முகராஜாவின் நூல்கள் நாகலிங்கம் நூலாலயம் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்று விழாவினை கௌரவித்தனர்.

இதன்போது 'மண்ணும் மனையும்', "மறக்கத் தெரியாத மனசு" மற்றும் "தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்" ஆகிய மூன்று புத்தகங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் வைத்தியர்கள், ஊடகவியலாளர்கள், நூல் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் தாயகத்தில் சிறந்த பண்பாட்டு ஆளுமை ஆக்க திறனுக்கான கௌரவிப்பு விருது கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன்போது மருத்துவர் சிவன் சுதன், வாழ்வக இயக்குநர் ரவீந்திரன், கிராமிய செயற்பாட்டாளர் யோசப்பாலா, கொ.அற்புதராஜ் சிறந்த ஆசிரியர், ஆய்வாளர் சிதம்பரநாதன் ரமேஷ் ஆகியோருடன் பெண் நாதஸ்வரக் கலைஞர் சுந்தரம் தையல்நாயகி ஆகிய ஆறு பேர் கௌரவிக்கப்பட்டனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீட மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம்

### துணைவேந்தரையும் கலைப்பீடாதிபதியையும் சந்தித்த கனடா உதயன் பிரதம ஆசிரியர்







(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீடத்தின் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜாவையும் கலைப் பீடாதிபதி கலாநிதி ரகுராமையும் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் சந்தித்து கலந்துரையாடினார்.

கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற பல்கலைக்கழகத்தின் 'கயிலசிவ' கட்டத்தின் பின்னர் கனடா உதயன் குழு விஜயமான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது துணை வேந்தரும் கலைப்பீடாதிபதியும் கனேடியத் தமிழர்களின் செயற்பாடுகள் பற்றியும் கனடா கல்வி மற்றும் கலாசார செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்தனர். அதனைத் தொடர்ந்து, ஏற்கனவே தீர்மானித்த புலமைப் பரிசில் திட்டம் தொடர்பான பத்திரங்களை உதயன் பிரதம ஆசிரியர் கையளித்தார். இத்திட்டத்தின் பயனாளிகளை இன்னும் சில வாரங்களில் தெரிவு செய்து அவர்கள் பயன்பெறும் வகையில் செயற்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

கனடா உதயன் நிறுவனமும் ரொறன்ரோ மனித குரல் அமைப்பும் இணைந்து இந்தத் திட்டத்துக்காக ஒரு மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குகின்றன. கனடா வாழ் சமூக நலன்கொண்ட வர்த்தகப் பிரமுகர்கள் சாந்தா பஞ்சலிங்கம், சங்கர் நல்லதம்பி, நிமால் விநாயகமூர்த்தி, சிவேசன் கதுமார், திருமதி சசிகலா நரேன் உட்பட மேலும் சிலர் இந்த புலமைப் பரிசில் திட்டத்துக்கு பங்களித்துள்ளனர்.

இந்த சந்திப்பின்போது ஒன்ராரியோ மாகாண அரசின் உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறைப் பட்டதாரியுமான லோகன் கணபதி வழங்கிய மாகாண அரசின் வாழ்த்துப் பத்திரங்களையும் உதயன் பிரதம ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜாவுக்கும் கலைப்பீடாதிபதி கலாநிதி ரகுராமுக்கும் வழங்கினார்.



சினிமா

# "தமிழ் மொழியும் தமிழ் நாடும் மிகவும் பிடிக்கும்" என்கிறார், நடிகை சம்யுக்தா




தமிழ் மொழியும், தமிழ்நாடும் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று நடிகை சம்யுக்தா தெரிவித்துள்ளார்.

சாய் தரம் தேஜ் நடிப்பில் தெலுங்கில் வெளியான படம் "விரூபாக்ஷா". அறிமுக இயக்குநர் கார்த்திக் வர்மா டண்டு இயக்கியுள்ள இப்படத்தில் சம்யுக்தா நாயகியாக நடித்துள்ளார். தெலுங்கில் கடந்த ஏப்ரல் 21ஆம் தேதி வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்த நிலையில் இப்படம் தமிழில் டப் செய்யப்பட்டு வரும் மே 5ஆம் தேதி தமிழ்நாட்டில் வெளியாக உள்ளது. தமிழ் பதிப்பிற்கு என்.பிரபாகர் வசனம் எழுத, ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் கே. ஈ. ஞானவேல்ராஜா இப்படத்தை தமிழகத்தில் வெளியிடுகிறார்.

இப்படம் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினர் கலந்து கொண்டு பேசினர்.

இதில் பேசிய நடிகை சம்யுக்தா, "எனக்கு தமிழ் மொழியும், தமிழ்நாடும் மிகவும் பிடிக்கும். "வாத்தி" படத்திற்கு அளித்த ஆதரவுக்கு நன்றி. தொடர்ந்து தெலுங்கில் "விரூபாக்ஷா" திரைப்படத்தில் நடித்திருக்கிறேன். ஒரு திரைப்படம் வெளியானால் அதனை ஓடிடியில் காண்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் "விரூபாக்ஷா" திரையரங்கில் கண்டு மகிழ வேண்டிய படம். ஏனெனில் இது தொழில்நுட்ப ரீதியாக புதிய அனுபவத்தை வழங்கக்கூடியது. இப்படத்தில் இடம்பெற்றிருக்கும் பிரம்மாண்டமான காட்சி அமைப்புகள் உள்ளிட்டவை திரையரங்கில் மட்டுமே சாத்தியம். இந்த அனுபவம் ஓடிடி மற்றும் சிறிய திரையில் கிடைக்காது" என்று தெரிவித்தார்.



# தடை செய்யப்பட்ட பாரதியார் பாடல்கள்...

## சினிமாவில் பயன்படுத்திய இயக்குநர்.. 1942ல் நடந்த சம்பவம்

வட இந்தியாவைச் சேர்ந்த பிருத்விராஜ் மகாராஜாவைக் குறித்து வரலாறும் புனைவும் கலந்து எடுக்கப்பட்ட திரைப்படம் பிருத்விராஜன். 1942 இல் திரைக்கு வந்த இந்தப் படத்தில் பிருத்விராஜ் மகாராஜாவாக பி.யூசின்னப்பா நடித்தார்.

பிருத்விராஜும், கனோஜ் மன்னன் ஜெயசந்தரும் இணைந்து முஸ்லீம் மன்னன் முகமது கோரியை போரில் தோற்கடித்து வெற்றிவாகை சூடுகிறார்கள். சித்தூர் மன்னர் சமரசிங்கர் காரணமாக முகமது கோரியை மன்னித்து அவனை அவனது சொந்த தேசத்துக்கு அனுப்பி வைக்கிறார்கள். இந்த நேரத்தில், பிருத்விராஜின் பாட்டனாரும், அஜ்மீரின் அரசருமான நந்தபாலன் மரணப்படுக்கையில் இருப்பதாக சேதி வர, பிருத்விராஜும், ஜெயசந்தரும் அஜ்மீருக்கு அவரை காணச்செல்கிறார்கள், நந்தபாலன் தனது நாட்டை பிருத்விராஜிடம் ஒப்படைக்கிறார். இவை அனைத்தையும் கவனித்துவரும் ஜெயசந்தரின் மந்திரி ஜாலவர்மன் பிருத்வி - ஜெய்சந்தர் இடையே பகையை மூட்டிவிடுகிறான்.

இதனால், குழப்பத்தில் இருக்கும் பிருத்விராஜின் மனதை சித்திரங்களின் மீது திருப்பிவிடுகிறார் அவனது அரசவை கவி. அதில் இடம்பெற்றிருக்கும் ஜெய்சந்தரின் மகள் சம்யுக்தாவின் சித்திரத்தைப் பார்க்கும் பிருத்வி அவள்மீது காதல் கொள்கிறான். இதையறியும் ஜெயசந்தர் மகளுக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்வதுடன், பிருத்வியை அவமானப்படுத்தும்விதமாக பிருத்வியின் சிலையை செய்து அதனை சுயம்வர மண்டப வாசலில வைக்கிறான். சுயம்வரம் நிகழும் அன்று குதிரையில் வரும் பிருத்வி சம்யுக்தாவை கடத்திச் சென்று திருமணம் செய்கிறான்.

வரலாறும் புனைவும் இணைந்த இந்தக் கதை 1942 இல் சம்பத்குமார் இயக்கத்தில் பிருத்விராஜன் என்ற பெயரில் வெளியானது. பி.யூ. சின்னப்பா பிருத்விராஜனாக பிரதான வேடத்தில் நடித்தார். ஜெயசந்தராக டி.எம். ராமசாமிப்பிள்ளையும், அவரது மந்திரி ஜாலவர்மனாக டி.எஸ். பாலையாவும், நந்தபாலராக எஸ்.வேலுசாமி கவியும், முகமது கோரியாக டி.கே.சம்பங்கியும் நடித்தனர். ஏ. சகுந்தலா சம்யுக்தாவாக நடித்தார்.

சுவாரஸியமான கதை, சிறப்பான நடிப்பு என அனைத்தும் இருந்தும் பிருத்விராஜன் சுமாராகவே போனது. பிரதான நட்சத்திரங்களைவிட குமுதம் என்ற கதாபாத்திரத்தில் நடித்த டி.ஏ. மதுரம், அன்னம் என்ற கதாபாத்திரத்தில் நடித்த சி.டி. ராஜகாந்தம், பீதாம்பரமாக நடித்த காளி என். ரத்தினம், சாரிவாகனாக வந்த என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் ரசிகர்களை அதிகம் மகிழ்வித்தன. ஏ. நடராஜன், ஜி. ராமனாதன் ஆகியோர் இசையமைத்தனர். எஸ். வேலுசாமி பாடல்களை எழுதினார். படத்தில் மூன்று பாரதியார் பாடல்களும் பயன்படுத்தப்பட்டன. அன்று பாரதியார் பாடல்கள் ஆங்கிலேய அரசால் தடைசெய்யப்பட்டிருந்ததால் படத்தில் பாரதியாரின் பெயரைப் போடாமல் தவிர்த்தனர். பாரதியார் பாடல்களை படத்தில் பி.யூ. சின்னப்பா பாடினார். பிருத்விராஜன் படத்தை 1962 இல் எம்ஜி ராமச்சந்திரன், பத்மினி நடிப்பில் ராணி சம்யுக்தா என்ற பெயரில் எடுத்தனர். 2022 இல் அக்ஷய் குமார் நடிப்பில் வெளிவந்த இந்திப் படம் சாம்ராட் பிருத்விராஜ் படத்தின் கதையும் இதுதான். வியாபார நோக்கத்திலும் இப்போதைய அரசியல் காரணமாகவும் பல்வேறு புனைவுகளை கூடுதலாக அதில் சேர்த்து படத்தை கந்தல் செய்திருந்தனர்.

ஆங்கிலேயருக்கு எதிராக திரைப்படங்களை பிரச்சார ஆயுதமாக பயன்படுத்தியவர்கள் தமிழர்கள். பாடல், வசனங்கள் வழியாக ஆங்கிலேயரை தொடர்ச்சியாக எதிர்ந்து வந்தனர். தியாகராஜ பாகவர், பி.யூ. சின்னப்பா போன்ற அந்தக்கால நட்சத்திர நடிகர்கள் அதற்கு உறுதுணையாக இருந்தனர். தடைசெய்யப்பட்ட பாரதியார் பாடலை படத்தில் வைத்த தயாரிப்பாளர்கள், இயக்குனர் சம்பத் குமார், பாடிய பி.யூ. சின்னப்பா முதலானோர் பாராட்டுக்குரியவர்கள். 1942 ஏப்ரல் 29 திரைக்கு வந்த பிருத்விராஜன் இன்று தனது 81 வது வருடத்தை நிறைவு செய்கிறது.

# கடந்தவையும் கடப்பவையும் (56)

***எதிர்பாரா விதமாக உள்நுழைந்த பாதைக்குள்***
***தொடர் தொடராய் பல கதைகள்***

***பட்டம் விட்டோர் காட்டிய பாதையும்***
***கிட்ட கிட்ட வந்த குண்டுகளுக்காய்***

***ஒட்டி ஒட்டி ஓடிய பாதையும் - இன்று***
***குட்டிகள் கூட்டிவரும் பாதையும் ஒன்றுதான் - இங்கு***

***காலத்துக்கு ஏற்றது போல் - இன்றும்***
***கனமாற்றம் கொண்டதாக***
***பெருஞ் சுவர் வீடுகள் கண்கவர் அழகோடு***

***உல்லாச விடுதிகள் போலவும் சில***
***எல்லையில்லா அழகொடும் அவ்விடத்தில்***

***உள்நுழைய உள்நுழைய எங்குமே இப்படித்தான்***
***முன்னிருந்த நிலை நினைவில்வர வாய்ப்பில்லை - ஆனாலும்***

***தெரிந்த மனம் தேடியது - அன்று***
***அடைக்கலம் கொடுத்ததற்காய்***
***இறக்கிய வீடுகளைக் காணவில்லை***

***மறைந்திருக்க இடம் கொடுத்த வைக்கோல் போர்களும்***
***இருந்த இடம் தெரியவில்லை***

***முன்னர் போல் மாடுகளும் அதிகமில்லை - எங்கும்***
***கன்றுகளும் துள்ளவில்லை - ஏனோ***

***மாலை நேரம் வந்தபோதும் - இவ்விடத்தில் மக்களையும் காணவில்லை***

***பிழையான பாதையது பொலிகண்டிக்குள்***
***நுழைய வைக்க, பெரும் சுற்று - ஆனாலும்***

***இளம் பச்சைப் பூச்சோடு அங்கந்தவீடு - கொஞ்சம்***
***நிறம் மாறினாலும் உடையவில்லை - முன்னொரு காலம்***

***எப்பொழுதும் கலகலப்பு இவ்வீட்டில் - வெளியில்***
***அப்பப்ப அடிபாடு அதிகரிக்க***

***உள் இருப்போர் எண்ணிக்கையும் அதிகமாகும் - எமை***
***'கொல்வோம்' என வந்தவர்கள் கொஞ்சமேனும் அச்சமின்றி பாடுவார்கள் -***
***பைலாவும் ஆடுவார்கள் - ஒருநாள்***

***'என்ன நடக்குது இங்கே' என்று கேட்டபோதே - இது***

***'மறத்தமிழன் போர்த் தருமம்' என்றார்கள்***
***பிறமுதுகு காட்டிப் பிடிபட்டார் இவரென்றார் - பிறகென்ன***

***எவருக்கும் இல்லாத பெருமதிப்பு அவர்களுக்கு - அங்கு***
***அவர்களுக்கு இல்லையென்று ஏதுமில்லா உபசரிப்பு - பின்பு***

***பிரிய மனமின்றிப் பிரிந்ததாயும் அறிந்து கொண்டோம் - எதுவும்***
***தெரியாத வயதினிலே பிடிபட்ட பள்ளிப் பிள்ளைகள்***

***இன்றுவரையும் இருக்குமிடம் தெரியாது***
***அன்றே இறந்தாரா என்பதுவும் தெரியாது - அலைகின்றார்***

***எம்மினத்துப் பெற்றோர்கள் தெருத்தெருவாய் இன்றுவரை...***

***(தொடரும்)***

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1046

## கருமாரி அம்மன் ஆலயம் புத்தளம்

*" நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்*
*நயம்படச் சொல்லுந் தாயே*
*நஞ்செண்ணங் கொண்டு இச்சையாய் அலைவாரை*
*நசுக்கிடும் அன்னை நீயே*
*பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்*
*பொன்சுடர் தீபம் நீயே*
*புகழுடை வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே*
*பூத்தூவி வாழ்த்துவாயே."*

முன்னொருகாலத்தில் சிவபெருமான் உருத்ரபூமியாகிய இடுகாட்டில் இருந்து கைலைக்குத் திரும்பினார். அப்பொழுது தனது அருகில் இருந்த பாலாம்பிகையிடம் தனது திருமேனியில் இருந்த விபூதியை எடுத்துக்கொடுத்தார். இந்தவிபூதியைக் கொண்டு உலகில் ஐந்தொழில்களைப் புரிந்து வருக எனப் பணித்து, மீண்டும் கைலை சென்று நிஷ்டையில் அமர்ந்தார். உமையன்னை, ஈசன் இருந்த இடத்தில் வடக்குத்திசையில் அமர்ந்து, ஏழு கன்னிகளாகத் தன்னை மாற்றிக் கொண்டார். அவ்வேழு கன்னியர்கள் அந்தராட்சி, ஆகாட்சி, பிரமாட்சி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, மாரி எனப் பெயர் பெறுவர்.

அந்தராட்சி காடுகளிலும், ஆகாட்சி மலைகளிலும், பிரமாட்சி நதிகளிலும், விசாலாட்சி காசியிலும் சென்று தங்கினர். இவர்களுள் மாரி, இறைவன் தன்னைப் பிரிந்து சென்ற இடத்தையே இருப்பிடமாகக் கொண்டார். தன்னை இரு உருவங்களாக மாற்றிக் கொண்டு முன்னும், பின்னுமாக அமர்ந்தார். முன்னுள்ள தன் இல்லத்தில் தலைமட்டும் மேலே விளங்க, உடலைப் பூமியாகிய கருவில் மறைத்து, சிவசக்தி ஐக்கிய உருவாக விளங்கினார். பின்புறம் உள்ள இரண்டாம் உருவம் முழுத்தோற்றமாகி, கைகளில் பொற்கிண்ணம், சூலம், உடுக்கை, கத்தி இவைகளை ஏந்தி, ஐந்தலை நாகம் குடையாய் விளங்க, வீராசனத்தில் அமர்ந்துள்ளார். முன்புறம் உள்ள திருவுருவத்திற்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இதுவே கருமாரியின் தோற்ற வரலாறாகும். கருமாரிஅம்மன் வழிபாட்டிலே அருள்வாக்கு கூறுவது முக்கியமானது. இவ்வாறான அருள்வாக்கின் அடிப்படையில் எழுந்த கோயிலாக, புத்தளத்திலுள்ள கருமாரியம்மன் கோயில் காணப்படுகின்றது.

புத்தளம் கருமாரி அம்மன் ஆலயம், புத்தளம் மணற்குன்றின் எல்லையில், தம்மன்அடவி என்னும் கிராமத்திலே காணப்படுகின்றது. இக்கோயில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது ஆண்டுகட்கு முற்பட்ட பழமையுடையதாக விளங்குகின்றது. கருமாரி அம்மனின் அடையாளங்களாக தலவிருட்சம், பாம்புப்புற்று, நாகபாம்பு என்பன கூறப்பட்டுள்ளன. புத்தளம் கருடதரிஅம்மன்கோயிலிலும் இவ்வாறான அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக ஆலமரம் காணப்படுகின்றது. இந்த ஆலமரத்தின் அடியிலே காணப்படுகின்ற புற்றும், அதனைக் காவல் செய்யும் பாம்புமே இவ்வாலயத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் தான்தோன்றியாகக் காணப்படுவதால், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மையை தான்தோன்றீஸ்வரி எனவும் அழைக்கும் வழக்குக் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்திலே வாழ்ந்தோரில் பலர் காடுகளிலும், வயல்களிலும் வேலை செய்வோராகக் காணப்பட்டனர். இவ்வாறான மக்கள் தொழில்புரியச் செல்லும்பொழுது, ஆலமரத்திற்கு அண்மையிலுள்ள மரங்களின் குழைகளை ஒடித்து, தமக்கு எந்தவித துன்பமும் நேராமல் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து, மரத்தடியில் இருந்த பாம்புப் புற்றின்மீதும், ஆலம்வேர்களுக்கிடையிலும் அவற்றை வைத்து வழிபாடியற்றிச் செல்வது வழக்கம்.

தம்மன் அடவியில் எழுந்தருளியுள்ள கருமாரி அம்மனை வழிபட்டு, சகல வளங்களையும் பெற்றவர்களுள் பொம்மக்கா என்பவர் குறிப்பிடத்தக்கவர். ஆயினும் ஒரு காலகட்டத்தில் பொம்மக்கா நாகதோஷத்தால் பீடிக்கப்பட்டு பல இன்னல்களுக்கு உள்ளானார். தன்னைப் பிடித்துள்ள நாகதோஷம் நீங்கவேண்டும் என்ற வேண்டுதலோடு, தினமும் புத்தளம் சேனைக்குடியிருப்பிலே கோயில் கொண்டிருந்த, பத்தினி அம்மனை வழிபட்டு வந்தார்.

- வளரும்...

## மன்னார் தமிழ் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

- மன்னார் நிருபர் (30-04-2023)



மன்னார் மாவட்டத்தில் பல வருடங்களாக சிறப்பாக இயங்கி வரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சனிக்கிழமை (29) இடம்பெற்றது.

இதில் புதிய தலைவராக வி.எஸ். சிவகரன்,மற்றும் செயலாளராக தோமஸ் மரியதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தமிழ்மொழி வளர்ச்சியில் தசாப்த காலத்திற்கும் மேலாக சேவையாற்றும் சங்கம் புதுப்பொலிவுடன் இயங்கி வரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தில் ஆர்வமுடையவர்கள் இணைந்து பணியாற்ற முன் வருமாறு மன்னார் தமிழ் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பழைய தலைவராக சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள் சிறப்பாக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

## 05-05-2023 வெள்ளி தொடக்கம் 11-05-2023 வியாழன் வரையும்




Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 /




**மேஷம்:** மற்றவர் உதவி கிடைக்கும் வாரம். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். திருமண வாய்ப்புக் கூடி வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவிக் கிடைக்கும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். பிரச்சனைகள் அகலும். பிணிகள் அகலும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மைத் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். மனதில் உற்சாகம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். மனிதநேயம் மிகுதியாகும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். திடீர் லாபம் உண்டு. வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,P




**ரிஷபம்:** வருமானமும் வெகுமானமும் அதிகரிக்கும் வாரம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். கவனமுடன் செயல்பட வேண்டும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பொருளாதாரம் உயரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மிதுனம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும் வாரம். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனையால் குடும்ப மேன்மையடையும். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான செய்தி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். விளையாட்டுத் துறையில் லாபம் அதிகரிக்கும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். தொழில் போட்டி அதிகமாகும். புதுமைகள் நிறைந்த காலம். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்டு தொழில் லாபம் தரும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. பெண்களிடத்தில் கவனம் தேவை. அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரபல்ய ஆசை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவசித்தி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். திருப்பங்கள் நிறைந்த காலம். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். குதூகலமான எண்ணம் உருவாகும். வெற்றி வீடு தேடி வரும். செல்வ செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். பறவைகளுக்கு உணவு அளித்து பயன் பெறலாம். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்ற பொலிவு கூடும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகரிக்கும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டங்கள் எளிதாகும். ஆடை, அணிகலன்கள் சேரும். சுபவிரயம் உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L




**சிம்மம்:** மனமகிழ்ச்சி கிட்டும் வாரம். குடும்ப உறவு பலப்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். வாகனச்செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகை உற்சாகம் தரும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் அதிகரிக்கும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சுபச்செய்தி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். ஆடம்பர அகங்கள் கூடும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் செய்வதால் வளம் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகி மறையும். ஆபரணப் பொருள் களவுப்போகும். தனவரவு அதிகரிக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I




**கன்னி:** நல்லவங்களோட வாழ்த்துக் கிடைக்கும் வாரம். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். தன வரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். மனைவியால் மதிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை கூடும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். திடீர் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பொருளாதாரத்தில் மேன்மையுண்டு. தொழிலில் அபிவிருத்தி உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். நவகிரஹம் அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். பாராட்டுக்கள் வந்து சேரும். மனதில் உற்சாகம் மேலோங்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உங்களின் தனித்தன்மைகள் வெளிப்படும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். தொழிலில் வேண்டாத நபர்கள் விலகுவர். வேலை வாய்ப்புக்கள் கூடும். எதிர்பார்ப்புக்கள் விலகும். மாணவர்கள் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. இனிய செய்தி வரும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். அலட்சியப் போக்கு மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்பு சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**துலாம்:** பணவரவுகளால் திருப்தி தரும் வாரம். ஆரோக்யம் சீராகும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் சற்று கவனம் தேவை. அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைபளு கூடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலில் போட்டி, பொறாமைகள் விலகும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. பிரார்த்தனையால் பலன் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும். கலையில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை விலகும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். வீண் வம்பு ஓடி மறையும். மறைமுக தொல்லைகள் நீங்கும். வழக்கு வெற்றி தரும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. மேலதிகாரியின் ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும். காதல் எண்ணம் உருவாகும். மற்றவர் ஆலோசனைத் தவிர்க்கவும். மன அமைதி கூடும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். தீய எண்ணங்கள் விலகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். நிதி நிலைமை சீராகும். உறவினரால் நன்மை உண்டு. பேச்சில் துணிவு தேவை. விசேஷ பலன்கள் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**விருச்சிகம்:** கவலைகள் அடியோடு விலகும் வாரம். விவசாயம் கை கொடுக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழிலமையும். கடன் உதவி கிடைக்கும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை நீங்கும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். வியாபார வளர்ச்சி உண்டு. சான்றோர்கள் வாழ்த்து கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். எதிரிகள் உதிரியாவார்கள். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்புத் தேடி வரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருள் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. எண்ணிய காரியம் கைகூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் கிட்டும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர்கள் தொல்லை நீங்கும். பணவரவு அதிகரிக்கும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய தொழில் முயற்சி வெற்றியைத் தரும். சகோதாரியால் நன்மை உண்டாகும். போட்டிகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K

(தொடர்ச்சி 30 பக்கம்)

# அன்பின் தொனி - 690

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**எலியாவின் ஜெபத்தைக் கேட்ட தேவன்**

அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி: என் கிட்டே வாருங்கள் என்றான், சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது, தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு: உனக்கு இஸ்ரவேல் என்னும் பேர் இருப்ப தாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத் தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி, விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் வைத்தான். பிற்பாடு அவன்: நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து, சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின்மேலும் ஊற்றுங்கள் என்றான், பின்பு இரண்டாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான், இரண்டாந்தரமும் ஊற்றினார்கள், அதற்குப் பின்பு மூன்றாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான், மூன்றாந்தரமும் ஊற்றினார்கள். அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது, வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினான். அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலி யையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜன ங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

**அன்பானவர்களே!**

ஜெபத்தின் வல்லமையையும், ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற ஜீவனுள்ள தேவனைக்குறித்த சரியான அறிவும், அவருடன் உள்ள நெருங்கிய உறவும் தீர்க்கதரிசியான எலியாவிடம் இருந்ததினால், அவனுடைய விசுவாசமுள்ள ஊக்க மான ஜெபத்திற்கு கர்த்தராகிய தேவன் அநேக அவவிசுவாசிகள் மத்தியில் அவனுடைய விண்ணப்பத்திற்கு உடனடியான பதிலை கொடுத்து, தாம் ஜெபத்திற் பதில் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் என்பதை நிரூபித்துக் காண்பித்தார்.

**பேதுரு மூலம் ஆலோசனை**

மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான், அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்கு சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வான த்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப் படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்து வாசற்படியிலே வந்து: பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட் டார்கள். பேதுரு அந்தத் தரிசன த்தைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே போ, நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச்சொன்னார். அப்பொழுது பேதுருகொர் நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்குப்போய்: நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்த காரியம் என்ன என்றான். அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களால் நல்ல சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லும் வார்த்தைகளை கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயனல் கட்டளைபெற்றார் என்றார்கள். அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே அழைத்து, அவர்களை உபசரித்து, மறுநாள் அவர்களேடுகூட புறப்பட்டான், யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப் போனார்கள்.

**தொடரும்...**

---

(24 பக்கத் தொடர்ச்சி)

## எழுத்தாளர் குரு அரவிந்தன் சிறுகதைகள். பகுப்பு முறை திறனாய்வினடிப்படையில் எனது கண்ணோட்டம்

ஜெஸ்மின் கார் விபத்து ஒன்றில் சிக்கிய போது இரத்தம் தேவை ஏற்பட எயிட்ஸ் நோயாளியின் இரத்தம் வழங்கப்பட்டிருந்தது. இதைக் கேட்ட அவன் என்ன செய்வதறியாது மரண பீதியில் நின்றிருந்த அந்த காட்சியை வாசகர் கண்முன் கொண்டு வந்திருக்கிறார் ஆசிரியர்.

"பணமிருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று துணிந்து நின்றியே தற்பொழுது உனக்கிருக்கும் எயிட்ஸ் நோய்க்கு மருந்து வாங்கிக் கொள்" என்ற அவளது கர்வமான வீரமான பேச்சு ஒரு வாசகராய் எனக்கு பெரும் திருப்தியை அளித்தது. எமது உலகம் மாற வேண்டும் பணத்தை வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டம் அடங்க வேண்டும்.

"குரு அரவிந்தன்" ஆசிரியர் அவர்களே, இதுபோன்ற சமூகத்திற்கு விழிப்புணர்வான/ அத்தியாவசியமான கதைகளை நீங்கள் எழுதவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்வதோடு ஒரு வாசகராய் இது போன்ற உங்களது கதைகளுக்கு என்றும் நான் ஆதரவளிப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஆசிரியர் அவர்களே.

இந்த நான்கு கதைகளும் வாசகர்களுக்கு புரியும் படியான இலகுவான இலக்கண முறைமைகளில் எழுதி இருப்பது பாராட்டத்தக்க வகையானது. எல்லா நாடுகளிலும் உள்ள வாசகர்கள் இலகுவாக இவருடைய படைப்புகளை உணர்வு பூர்வமாக வாசிக்க முடியும் என்பதை நான் தெரிவு செய்த நான்கு கதைகளினூ டாகவே அறிய முடிகின்றது. பாத்திரங்களுக்கிடையிலான சம்பாசனைகளும் கூட இலகுவான இலக்கண முறை வழக்கிலேயே கையாளப்பட்டிருக்கிறது.

எனது ஆய்வின் அடிப்படையில் நான் தேர்வு செய்த இந்நான்கு கதைகளிலும் ஆசிரியர் கூற விளைந்த மையக்கருத்து தலைப்பிற்கு பொருத்தமானதாகவே இருந்தது. அதேபோன்று ஒரு சிறுகதை எழுதும் போது அது நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குள் எழுதிவிட வேண்டும் என்பது எழுத்தாளர்களின் ஒரு ஆய்வு. அது உண்மையும் கூட.

இங்கு குரு அரவிந்தன் அவர்கள் மிகவும் கச்சிதமாக தனது கதையை நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குள் எழுதி இருப்பது பாராட்டத்தக்கது. மேலும் கதையில் தேவையற்ற கதாபாத்திரங்களும் இன்றி எந்த ஒரு குழப்பமும் இன்றி தெளிந்த நீரோட்டம் போன்று ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை மிக நேர்த்தியாக தனது சிறுகதையைப் படைத்திருப்பது அருமையே.

அதே போன்று அவரது மொழி நடையும் மிக இலகுவான இலக்கண முறையில் இருப்பதனால் எல்லா வாசகர்களது பார்வைக்கு இவருடைய சிறுகதை போய் சேரும் என்பது நிஜமே. கதாசிரியரினுடைய சிறுகதைகள் அனைத்தும் இலகுவான இலக்கண முறையில் எழுதி இருப்பதை ஒட்டி நானும் இத்திறனாய்வை இலகுவான இலக்கணத்திலே எழுதி இருக்கிறேன். மேலும் ஏதாவது எதிர்மறையான விடயம் ஒன்றை கூற வேண்டும் என்றால் சற்று கடினமே. சிறுகதையில் எதிர்பாராத கதாபாத்திரத்தை கொண்டு வந்திருந்தால் இன்னும் சுவாரசியமாக இருந்திருக்க கூடும் என்பது எனது சிறு எண்ணம்.

பொதுவாக நான் படித்த ஏனைய கதைகளையும் வைத்துப் பார்க்கின்றபோது இவரதுகதைகள் யாவும் சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு முன்னோடியாக இருக்கும், இவர் மேலும் பலபடைப்புக்களை தமிழ் இலக்கியஉலகிற்கு தரவேண்டும் என ரசிகையாய் கேட்டுக்கொள்கிறேன்.

குரு அரவிந்தன் ஆசிரியர் அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என்று இறைவனை பிராத்தித்தவளாக என்னுடைய இத் திறனாய்வை நிறைவு செய்கின்றேன்.

---

### குரு அரவிந்தன் வாசகர் வட்டம்
### சிறுகதைத் திறனாய்வுப் போட்டி-2023, முடிவுகள்

| | |
|---|---|
| 1ஆம்பரிசு | முகம்மது நூர்தீன் பாத்திமா நிஸாதா<br>ரூபா 30,000 காத்தான்குடி-06 இலங்கை |
| 2ஆம்பரிசு | ஜூனியர் தேஜ், வரதராஜன்<br>ரூபா 25,000 சீர்காழி, தமிழ்நாடு |
| 3ஆம்பரிசு | ஹஜிஸ்தா நூரி முஹம்மட் ஹிராஸ்<br>ரூபா 20,000 காத்தான்குடி-5 இலங்கை |
| 4ஆம்பரிசு | பர்வின் பானு. எஸ்<br>ரூபா 15,000 தேனாம்பேட்டை, சென்னை |
| 5ஆம்பரிசு | கலாதர்ஷினி குகராஜா<br>ரூபா 10,000 நுஹேகொடை, இலங்கை |

**20 பாராட்டுப் பரிசுகள் - தலா ரூபா 5000**

1. திருப்பதி. தீ, புதுக்கோட்டை, தமிழ்நாடு
2. அருள் சுனிலா. ஜா, சகோ. (முனைவர்) பெரியகுளம், தேனி
3. ஏழுமலய். சொ, (முனைவர்) புதுச்சேரி - 5, இந்தியா
4. அனுதர்ஷினி சந்திரசேகர், மெசன்ஜர் வீதி, கொழும்பு
5. சந்தனமாரியம்மாள். கோ, (முனைவர்) கோவில்பட்டி, தூத்துக்குடி.
6. அம்பிகா வாசுதேவன், ரொசெஸ்ரர், நியூயோர்க்.
7. வேல்முருகன். த, கோவில்பளையம், ஈரோடு
8. ரகுநாதன். டி. எஸ், நேதாஜி நகர், கோயம்புத்தூர்
9. சுப்ரபாரதி மணியன், பாண்டியன் நகர், திருப்பூர்.
10. சந்திரன் வேலாயுதபிள்ளை, மார்க்கம், கனடா
11. பொரவியா பிள்ளை புஷ்பராஜூ, கொழும்பு-15, இலங்கை
12. மணிமேகலை. பா, லாசப்பெல், பிரான்ஸ்
13. ஸ்ரீகந்தநேசன். பெ. யாழ்ப்பாணம், இலங்கை
14. இலக்கியா மாதவன், மெல்பேர்ன், அவுஸ்ரேலியா
15. ஹரண்யா பிரசாந்தன், மட்டக்களப்பு இலங்கை.
16. சோபிதா குணேஸ், சண்டிலிப்பாய், இலங்கை
17. மோனிஷா. நா, வடுகபட்டி, ஈரோடு
18. நித்திய ஜோதி, பண்டாரவளை, இலங்கை
19. மேகநாதன். பெ, போடிநாயக்கனூர், தேனி
20. பவானி சச்சிதானந்தன், வத்தளை, இலங்கை.

வணக்கம். திறனாய்வுப் போட்டி - 2023. வாசிப்பு, எழுத்துத் துறைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு நடந்த போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். பதினொரு நாடுகளில் இருந்து 119 கட்டுரைகள் வந்திருந்தன. எல்லாக் கட்டுரைகளுமே தரமாக இருந்ததால் இறுதிச் சுற்றுக்கு மதிப்பெண்களின்படி 25 கட்டுரைகள் தெரிவாகின. நடுவர்களாகப் பணியாற்றிய ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம், திறனாய்வாளர் திருமதி. வாசுகி நகுலராஜா, கவிஞர் மு. முருகேஷ், தமிழ்நாடு. ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பரிசுத் தொகை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

**சுலோச்சனா அருண்**
**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.**
kurufanclub@gmail.com

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மனநிறைவு ஏற்படும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு அதிகரிக்கும். குடும்ப வளம் பெருகும். வாகன அபிவிருத்தி உண்டு. நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்வியால் செலவு உண்டு. கடன் பிரச்சனை அகலும். வியாபாரத்தில் நிதானத்தோடு செயல்பட வேண்டும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். சகோதர உறவு பலப்படும். சாதனைகள் ஓங்கும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். குடும்ப மனநிறைவு உண்டு. புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். கர்ம வினைகள் அகலும். பழைய கடன் தீரும். எதிர்ப்புக்கள் விலகும். மன வேதனை குறையும். பொருளாதாரம் உயரும். முயற்சி பலன் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழிலில் மாற்றம் ஏற்படும். தாய் நலனில் அக்கறை தேவை. உடன்பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதர வளர்ச்சியுண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். மங்களச் செய்தி வரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மன வேதனை குறையும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை மாறும். உறவினர்களால் பாதகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கருப்புசாமி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**மகரம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவுகள் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் விலகும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரி பாராட்டு கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். தீய எண்ணம் விலகும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வம்பு தும்புகள் ஒழியும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் நிதானம் தேவை. கலை ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் போட்டி மறையும். காதலால் மகிழ்ச்சியுண்டு. மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**கும்பம்:** தொழில் வளர்ச்சி பெருகும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். பிணிகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். பெண்களின் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் பெருகும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. பொன், பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சந்தோஷமான காலம். பணிவு அவசியம். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். கலைத்தொழிலில் நிலை உயரும். பெற்றோர் ஆதரவு அதிகரிக்கும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**மீனம்:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. குடும்பப் பாசம் அதிகரிக்கும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு பெறும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்பட்டு மறையும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். பதற்றம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். நிர்வாகத் திறன் கூடும். நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். இனிய எண்ணம் உதயமாகும். புதிய முயற்சி பலன் தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வியாபார விரயம் கூடும். சுபச்செய்தி வரும். பணிச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை திருப்தி தரும். நினைவாற்றல் பெருகும். கலையார்வம் கூடும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,2,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

10 மே 2023
நோர்வே

## மே தினத்தில் நினைவுக்கு வரும் ஒற்றைச் சொல் "ஒற்றுமை", மேதினத்தில் அரிதாகவே தொடர்புடைய சொல் "சுதந்திரம்"

-அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-

மே தினத்தன்று, காலை முதல் மாலை வரை முதலாளித்துவ வர்க்கத்திற்காக உழைக்கும் தொழிலாளர்களை நோக்கியும், அவர்களின் நலன்களைப் பாதுகாக்க அவர்களால் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கங்களை நோக்கியும் நமது சிந்தனைகள் செலுத்தப்படுகின்றன. மே தினத்தன்று நினைவுக்கு வரும் ஒரே வார்த்தை "ஒற்றுமை".

இருப்பினும், மே தினம் அரிதாகவே மற்றொரு முக்கியமான வார்த்தையுடன் தொடர்புடையது: சுதந்திரம், உலகின் பல நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் "சுதந்திரம்".

இலங்கையில், சுதந்திரம் குறித்த எமது பெரும்பாலான கலந்துரையாடல்கள் பெரும்பான்மை சமூகத்தினாலும் அரச இயந்திரத்தினாலும் நசுக்கப்படுகின்றன. தொடர்ந்து இனப்படுகொலையை எதிர்கொண்டு வரும் ஈழத்தமிழர்கள், இலங்கை அரசின் அடக்குமுறையையும், இனவெறி அரசால் தமிழர்கள் மீதான ஆபத்தான, திட்டமிட்ட இனப்படுகொலையையும் தங்கள் மே தினச் செய்தியின் மூலம் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்துகின்றனர். தொழிலாளர்களின் ஒற்றுமையை மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையையும் மே தினம் பிரதிபலிக்கிறது. தாங்கள் அடையப் போராடிக் கொண்டிருக்கும் நித்திய, அமைதியான வாழ்வை நிறைவேற்ற விடுதலையை எதிர்பார்க்கும் ஒடுக்கப்பட்ட தமிழர்களின் நாளாக இது இருக்கட்டும்.

இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களை ஒடுக்கவும், அழிக்கவும் இலங்கை அரசு கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும், ராணுவ அடக்குமுறைகளையும் கொண்டு வந்துள்ளது. உரிமை மறுப்பால் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியாது. சிங்கள ஒடுக்குமுறையாளர்களை எமது தாயகத்திலிருந்து விரட்டி எமது மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் கொண்டு வர உலகத் தமிழர்கள் உதவ வேண்டும்.

தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து, தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்களவர்களை குடியேற்றுவதன் மூலமும் தமிழ் மக்களை அழிப்பதன் மூலமும் சிங்களமயமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமை மையங்களையும் புராதன இந்து ஆலயங்களையும் இடித்துவிட்டு அதற்குப் பதிலாக பௌத்த விகாரைகளை அமைப்பதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றை சிதைத்து வருகிறது.

உலகத் தொழிலாளர்களின் வெற்றியை நினைவுகூரும் இந்த மே தினத்தில் ஈழத்தமிழர் விடுதலைக்காகப் பாடுபடும் அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து எதிரிகளை தாயகத்திலிருந்து விரட்டியடித்து, சுதந்திரத்துடனும், அமைதியுடனும் வாழ அயராது பாடுபடுவோம்.

"சுதந்திரம் என்பது பாதுகாப்பிலிருந்தும் மன அமைதியிலிருந்தும் பிறக்கிறது."

---

01 May 2023
Norway

## Let us unite in solidarity with Tamil workers facing genocide attain their freedom

-International Council of Eelam Tamils-

On May Day, our thoughts are directed at the workers who work for the bourgeoisie from early morning to dusk and to the trade unions formed by them to protect their interests. The only word that comes to mind on May Day is "Solidarity."

However, May Day is rarely associated with another important word: Freedom, the 'freedom' of oppressed people in many countries of the world. In Sri Lanka, most of our discussions on freedom are being suppressed by the majority community and the state apparatus. The Eelam Tamils, continually facing genocide, inform the international community through their May Day message, about the Sri Lanka Government's repression and the dangerous and calculated genocide of the Tamils by a racist state. May Day reflects not only the unity of the workers but also the oppressed people. Let it be the day of the oppressed Tamils that expect the freedom to fulfill the eternal and peaceful life they have been struggling to attain.

The Government of Sri Lanka has brought draconian antiterrorism laws and military repression to suppress and exterminate the Tamils on the island. Denial of rights cannot stop the freedom struggle of the Eelam Tamils. The Tamils worldwide must help drive the Sinhala oppressors out of our homeland and bring peace and security to our people.

The Sinhalization project is being carried out by expropriating Tamil-owned lands and colonizing them with Sinhalese people in the native lands of the Tamils thereby destroying the Tamil population. It is also distorting the traditional history of the Tamil people by demolishing the Tamil heritage centers and ancient Hindu temples of the Tamil people and replacing them with Buddhist viharas. On this May Day, commemorating the victory of the world's workers, let all the organizations working for the liberation of Eelam Tamils come together and work tirelessly to drive the enemy out of our homeland and usher a life of freedom and peace.

'Freedom is born out of security and peace of mind.'

- Thirst of Tamils Tamil Eelam Homeland -
- International Council of Eelam Tamils -

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL | COMMERCIAL | INDUSTRIAL | VACANT LAND | CONSTRUCTION




SUBRA MORTGAGE SOLUTIONS

## NESAN

## 416-908-5656

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity lind of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS** Brokerage #10530

**Powered By**

Mortgage Alliance, Scotiabank, radius financial, TD Canada Trust, Home Trust, Equitable Bank, RFA Bank of Canada, MCAP, First National Financial LP, RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd,
Unit #406,
Toronto, ON.
Canada M1B 2W1

www.subra.com

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
905-783-1895

உதயம் 1413 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 5, 2023

# யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நட்பின் நிமித்தம் சந்தித்த கனடா உதயன் குழுவினர்



தற்போது யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துள்ளும் வகையில் பயணித்துள்ள கனடா உதயன் பிரதம ஆசிரியரும் அவரது குழுவி-னரும் தற்போதைய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன்அவர்களை நட்பின் நிமித்தம் சந்தித்து உரையாடி மகிழ்ந்தனர்.

நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் அமைந்துள்ள அரசாங்க அதிபரின் பணிமனையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. கனடா உதயன் பிரதம ஆசிரியர், அவரது பாரியார் மற்றும் மூத்த பத்திரிகையாளர் வீ. தேவராஜ், கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி அருண் கதாகரன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

# சென்னையில் உதயன் குழுவினரை வரவேற்ற நண்பர்கள்



கடந்த செவ்வாய்க்கிழமைன்று கொழும்பிலிருந்து சென்னை சென்ற கனடா உதயன் குழுவினரை கலை இலக்கிய மற்றும் பத்திரிகைத்துறை சார்ந்த நண்பர்கள் வரவேற்றனர். இங்கே காணப்படும் படத்தில் தமிழ் நாடு அரசின் இயல் இசைக் கல்லூரிகளின் மேன்மைமிகு இயக்குனர் நடனக் கலைஞர் சாகிர் உசைன் அவர்கள், மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாணன்,கனடா உதயன் சென்னைச் செய்தியாளர் மைதீன் நடிகரும் நடனக் கலைஞருமான கமலேஸ் ஆகியோர் லோகேந்திரலிங்கம் தம்பதியை பொன்னாடைகள் அணிவித்து கௌரவிப்பதைக் காணலாம்.

# கனடாவில் வசிக்கும் ஈழத்து எழுத்தாளர் வீணை மைந்தனின் 3 நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு



ஈழத்து எழுத்துலகப் படைப்பாளிகளில் பரவலாக அறியப்பட்ட வீணை மைந்தனின் மூன்று நூல்கள் வைபவ ரீதியாக யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை (28) அன்று வெளியிடப்பட்டன.

கனடாவில் வசித்து வரும் வீணை மைந்தன் என்று எழுத்துலகில் அறியப்படும் கே. ரி. சண்முகராஜா அவர்களின் அந்த நூல்கள் நாகலிங்கம் நூலாயம் ஆதரவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் சி.சிறீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்க் சிறப்பு விருந்தினராகவும் பங்குபெற்று விழாவினை கௌரவித்தனர்.

# திருச்சி ஸ்ரீரங்கம் ஸ்ரீ அரங்கநாத சுவாமி திருக்கோவில் தரிசனம் செய்த உதயன் குழுவினர்



நேற்று திருச்சி ஸ்ரீரங்கம் ஸ்ரீ அரங்கநாத சுவாமி திருக்கோவில் தரிசனம் செய்தவதற்காகச் சென்ற கனடா உதயன் குழுவினரை திருக்கோவிலின் நிர்வாகத்தில் உயர் பதவி வகிக்கும் நில விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திரு கே. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்று உபசரித்து ஆலய தரிசனத்திற்கான விசேட ஏற்பாடுகளைச் செய்தார்.

ஆலய தரிசனம் முடிவுற்ற பின்னர் உதயன் குழுவினரை அங்கு அழைத்துச் சென்ற தமிழ் நாடு அரசின் இயல் இசைக் கல்லூரிகளின் மேன்மை மிகு இயக்குனர் நடனக் கலைஞர் சாகிர் உசைன் அவர்கள் மற்றும் நில விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திரு கே. பாலசுப்பிமணியன் அவர்கள் கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ் ஆகியோர் திருமதி லோகேந்திரலிங்கத்துடன் எடுத்துக் கொண்ட படம் இங்கு காணப்படுகின்றது.

# “வாழ்க்கைக்கான கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு எமது பெற்றோர்களே தடையாக இருக்கிறார்கள்”

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் மட்டுமே ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் என்ற நம்பிக்கை பெரும்பாலான பெற்றோர்களிடம் இருக்கிறது. ஆனால், ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் வாழ்க்கைக்கான கல்வி வகுப்பறைகளுக்கு வெளியேயே இருக்கிறது. துரதிஸ்டவசமாக அந்தக் கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு எமது பெற்றோர்களே தடையாக இருக்கிறார்கள் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலை-வர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (29.04.2023) நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker